padippakam

"MARGARITOMANCY! HYACINTHOUS PERVINCIVENESS! FLOWERS. A CLOUD. BUT BRUTO AND CASSIO ARE AWARE ONLY OF TRIFID TUNGUES. THE WHISPERED WILFULNESS ('TIS DEMONAL') AND SHADOWS MULTIPLICATING (IL FOLSOLETTO NEL FALSOLETTO COL FAZZOLOTTO DAL FUZZOLESSO) TOTIENS, QUOTIENTS, THEY TACKLE THEIR QUARREL."

FROM 'FINNEGANS WAKE'
BY JAMES JOYCE

மூன்று கட்டுரைகள்

* முதல் சந்திப்பு (பிரேமிளுடன்) — இரா. மாரப்பன்
** பெருமாள்முருகனின் இரட்டை நாவல்கள் — ”
*** சார்லஸ் டிக்கன்ஸ் - படைப்பாளியும் மனிதாபிமானியும் — ”

கவிதைகள்: தேவதேவன் □ கால. சுப்ரமணியம்
ராஜசுந்தரராஜன் □ உ செ துளசி □ ஸந்தோஸ்
செங்கதிர் □ சிபிச்செல்வன்
ஹரிகண்ணன் □ மாரி.

மதிப்புரை: கப்சிப்தர்பார் — புதுமைப்பித்தன்
மேலே சில பறவைகள் — கால. சுப்ரமணியம்
பின்நவீனத்துவம், எதிர்நவீனத்துவம், தலித்தியம்
— நிறப்பிரிகை

மறுஆய்வு: "தி ரிட்டேன் ஆப் தி நேட்டிவ்"—தாமஸ் ஹார்டி.

சதுக்கப் பூதம்

ஆகஸ்டு 1995 இதழ்: 2 ரூ. 8/-

படிப்பகம்

padippakam

கிரஹாம் கிரீன்

பகல் கனவு

பேச்சின் சாகசமென்று
நான் புரிந்து கொள்ளவில்லை;
அது ஒரு பகல் கனவாயிற்று—ஆனால்
பற்றி எரிந்தது என் இதயம்.

உன்னை நான் காதலிக்கிறேன் என்றாய்
அப்படித்தான் நானும் அர்த்தப் படுத்திக்கொண்டேன்.
என்னிதயம் உனதென்றாய்—ஆனால்
கடனாகவே அதைக் கொடுத்திருக்கிறாய்.

பொய் சொன்னாய் எனக் கூறமாட்டேன்
இன்றைய காலத்தினையே பிரதிபலித்தாய்!
பழம் விக்டோரிய பாணியிலான மரணம் பற்றி
நனூாம் நினைக்கவே யில்லை!

பகல் கனவாக இருந்திருக்கிறது அது
நானும் அப்படியே நம்பத் தொடங்கிவிட்டேன்;
பேச்சின் சாகசமாகவே அது நிகழ்ந்ததென்று
நானும் புரிந்து கொள்ளத்
தொடங்குகிறேன் அதையின்று

'THE CONFIDENTIAL AGEVT' by GRAHAM GREENE நாவலில் வரும் ஒரு பாடல்.
தமிழாக்கம்: கால சுப்ரமணியம்.

புலரி

இமை அரவணைப்பு விழிகளுக்கு
இனி இல்லை
பகிரங்கம் பண்ணிவிட்டது விழிப்பு

மூளை முடுக்குகளில்
ஏக்கத்தை எச்சம் வைத்துக்
கடைசிக் கனவும் சுழன்றுகொண்டது.

வேலைக்குக் கிளம்பிவிட்ட
வீதிக் குரல்களால்
பாய்சுருட்டப் பணிக்கிறது சன்னல்.
வெளிச்சம் பரத்திப்போட்ட
வழி நீள் வானத்தில்
சிறகடிகளால்
உடம்புச் சுமையை

எக்கி இழுக்கிறது—
சரிதான்,
புலர்ந்துவிட்டது பறவைக்கும் வயிறு.

— ராஜசுந்தரராஜன்

படிப்பகம்

padippakam

இரா. மாரப்பன்

கட்டுரைகள்

★ முதல் சந்திப்பு

★★ பெருமாள் முருகனின் இரட்டை நாவல்கள்

★★★ சார்லஸ் டிக்கன்ஸ் – படைப்பாளியும் மனிதாபிமானியும்

படிப்பகம்

padippakam

இவைகள்...

இருந்ததை எல்லாம்

ஏழை பாழைக்கு

ஃபுட்பாலாய்

எத்தி எறிந்துவிட்டு

என்னை மட்டும்

ஒன்றுக்கும் உதவாத

குண்டாலமாக்கி

இவ்வுலகைவிட்டு மறைந்த

என் தந்தை

இராமசாமி

நினைவுகளுக்கு

இரா. மாரப்பன்

படிப்பகம்

padippakam

1. முதல் சந்திப்பு

"மை டியர் மாரப்பன்..." என்று இரண்டொரு கடிதங்களில் தனது ஓவிய எழுத்துக்களால் பிரேமிள் எனக்கு by return of post-ல் பதில் எழுதியிருந்தாலும் அவரை நேரில் சந்திப்பது திருநாளைப்போவார் ஆசைபோல் நாளனந்தம் நழுவிக் கொண்டே போயிற்று. அத்தோடு – சிறுவயதிலேயே, குன்றக் குடியாரையும், கைலாசபதியாரையும் அசட்டை செய்த தலைக் கனம் பிடித்த ஆசாமி அவரை நான் முன்பின் அறிமுகமின்றிச் சந்திப்பதை ஏற்றுக்கொள்வாரா, எடுத்துஎறிந்து விடுவாரா அல்லது ஏடகூடமாக ஏதாவது நடந்து விடுமோ என்ற சங்கடமும் மனதில் வௌவாலைப்போல் தொத்திக் கொண்டு தானிருந்தது. இலக்கிய யுத்தத்தில் வெங்கடசாமிநாதனை வெட்டிச்சாய்த்தவர், சுந்தரராமசாமியை சுட்டுத்தள்ளியவர், எதிர்த்த பல எடுபிடிச்சில்லரைகளையெல்லாம் வெகுண்டு துவம்சம் செய்த ஜாம்பவானிடம் ஒன்றுமில்லாத நீ நெருங்கிச் சாகாதே, பிரேமிள் நெருப்பு, வேண்டாம் விபரீதம் என்று சில நண்பர்கள் சாம்பிராணிப்புகையும் தூவியிருந்தனர். பத்தாததற்கு, சமீபகால சிறுபத்திரிக்கைகளும் அவரை இலக்கிய ரவுடியாக, இமாலய அகந்தைக்காரராக, கிறுக்காக குரங்காக வெறிபிடித்த வேட்டைநாயாக திருநாமங்கள் ஜபித்து புளகாங்கிதம் அடைந்திருந்தன. இடையிடையே – இப்படிப்பட்ட இடிமின்னல்கள் பயத்தில் நடுநடுங்க வைத்திருந்தாலும் என் இயல்பான தைரியம் நேரங்காலத்தை நோக்கியிருந்தது. இந்நிலையில் பிரேமிளில் நான் சொக்கிவிழுந்ததற்கும் அவரைச் சந்திப்பதை முக்கியமாக கொண்டதற்கும் இரண்டு காரணங்கள் உந்துதலாகவும், தூண்டுகோளாகவும் சொல்லலாம். முதலாவதாக, அவரது பாதரசப் படைப்புகளில் சாதாரணமாக ஈர்க்கப் பட்டது, இரண்டாவது, தமிழ்மண்ணில் இலக்கியங்களைத் தூத்திப்புடைத்துத்தான் பார்க்கவேண்டும் என்ற அவரது விமர்சனக் கருத்துலகம். இலக்கியம் என்ற தனிப்பட்ட எந்தச் சொத்துக்கும் அதிபதியாக இல்லாவிட்டாலும் – கால சுப்ரமணியம் அறிமுகப் படுத்திய அவரது ஆரம்பகாலப் படைப்பு களை வெளியிட்ட உரிமையில் கூட இந்தப் பாசம் ஒரு வாசகத் தனமாக நேர்ந்திருக்கலாம்.

எத்தனை நாளைக்குத்தான் எழவெடுத்துத் தொலைப்பது, என்று இருபது வருஷங்களாக கட்டியழுகொண்டிருந்த நாடக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு – ஒழுங்காக ஓரிடத்தில் உட்கார்ந்து புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த

படிப்பகம்

padippakam

போது – புதுமைப் பித்தனின் தீவிரத்தன்மையும், ஆர். ஷண்முக சுந்தரத்தின் இனிமையும், கா. நா, சு. வின் எளிமையும் ஏறி உட்கார்ந்தது போதாதென்று பிரேமிளின் வீரியமும் ஒரே போடாக போட்டு என் நெஞ்சை அமுக்கிக் கொண்டது எதிர் பாராது தாக்கிய ஒரு காத்துக் கருப்பு விபத்துதான். எனக்குத் தெரிந்து எண்பதுகளில் ஒரு சித்திரை மாசத்துச்சீசனில், ஒத்திகை, மேடை, அது இதுவென்று அலைந்து, தொடர்ந்து 29 நாட்கள் தூக்கமின்றி கண்வீங்கி கஷ்டப்பட்டதுக்கு இது எவ்வளவோ மேலாகத் தோன்றினாலும், இலக்கிய கூட்டங்களுக்குப்போவதோ கருத்தரங்கங்களில் கலந்துகொண்டு வம்புதும்புகளிலும், வரட்டு விவாதங்களிலும் ஈடுபடுவதிலோ நாட்டமோ நேரமோ இல்லாமல் ஒதுங்கித்தானிருந்தேன். இது வரை எந்த எழுத்தாளரையும் ஓடிப்பார்த்து ஒட்டிக்கொள்ளுமளவுக்கு அவர்கள் எழுத்து என்னை ஆகர்ஷிக்கவில்லை என்பது எனது மனதுமட்ட அளவீடு. விதிவிலக்காக சிலர்.

முதன்முதலாக புதுமைப்பித்தனைச் சந்தித்தபோது அவரது நடை உடை பாவனைகள் பழக்கதோஷங்கள், பேச்சுத் தோரணைகளினால் வசீகரிக்கப்பட்டு ஏற்றமும் மாற்றமும் பெற்றது பற்றி மௌனி, கா. நா. சு, ரகுநாதன், கு அழகிரிசாமி முதலியோர் நிறைய சொல்லியிருக்கின்றனர். திருநெல்வேலி ஜிப்பா, வாரிவிட்டுக்கொள்ளும் பாகவதர்கிராப், ஸ்பென்சர் சுருட்டு குடிப்பது எந்த ஒட்டலானாலும் தேடிப்பிடித்து சுத்தச்சைவச்சாப்பாடு, பருப்புச்சாம்பார், பலகாரங்கள் உட்கொள்வது, வேகமாக எட்டிவிசிறி நடப்பது, அசுர வேகத்தில் படிப்பது பு. பியின் விசேஷங்களாக சித்தரிப்புப் பெறுகிறது. வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் சமர்த்தரான முருகதாஸர் 'ஒரு நாள் கழிந்தது' சிறுகதையில் வெத்திலைபோடுவதும், காபிக்கு ஏற்பாடு செய்வதும் பு. பியின் நாக்குச் செத்த வெறிதான். தன் கதை ஒன்றை பத்திரிக்கையில் பிரசுரிக்கக் கோரி காக்காய் வலிப்புக்கார தோஸ்தாவோஸ்கியை நெருங்கிய அழகி திரும்பிவரும் போது கற்பை அங்கேயே விட்டு விட்டுவிட்டு வர நேர்ந்த விபரீத சம்பவமும் இலக்கியத்தில் இருப்பது மனத்திரையில் ஒரு நிமிஷம் ஓடி மறைந்தது. சில குருட்டுத் தடவல் கூமட்டைகளுக்கெல்லாம் வாசகவைப்பு தேவைப்படுகையில் பிராய்டையும், ஐயின்ஸ்டீனையும் பாதித்த வனுக்கு தற்ச் செயலாக நடந்ததில தப்பென்ன? பின்னால் அவளை வாழ்க்கைத்துணைவியாகவும் சொந்தக்காரியதரிசி யாகவும் வரித்துக் கொண்டது ஒரு மேதையின் காருண்யத்தை யும் காதலையும் ஒரு சேர பறைசாட்டுகிறது. குளத்தில் சில கற்கள் விழும்போது அலைகளின் அதிர்வு இப்படி சில அழகை, அசிங்கத்தை ஏற்படுத்தத்தான் செய்யும்.

கணிதராமாநுஜத்தை ஈன்று உலகப் புகழ் பெற்றிருந்த கும்பகோணம் மௌனி, கு ப.ரா, நா. பிச்சமூர்த்தி. தி ஜானகிராமன் கரிச்சான் குஞ்சு, எம். வி. வெங்கட்ராம் முதலியோரையும் தமிழுக்குத்தந்து இலக்கியத்திலும் பிரதான இடத்தை பெற்றிருக் கிறது. வைணவத்தில் தென்னாட்டுக் காசியான இத்தலம்

படிப்பகம்

padippakam

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் மகாமக மகிமை பெற்றது. அரசலாறு பாயும் இவ்வூரில் தடுக்கிவிழுந்தால் கோயில்கள்தான். யானைக்கால் வியாதியும் இவ்வூரின் விசேஷம் பித்தளைப்பாத்திர உற்பத்தி பூகோள பாடத்தில் படித்தது. பட்டு நெசவுத் தொழில் சமாச்சாரங்கள் எம். வி. வி. யின் சௌராஷ்டிர வாழ்க்கையை விளக்கும் **'வேள்வித்தீ'** மூலம் தெரிந்து கொண்டது.

இத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தில் 19-2-95 நன்னாளில், பிரேமிளுக்கு **'புதுமைப்பித்தன் சாதனை வீறு'** வெ.மு. பொதிய வெற்பன் வழங்குவதாக கால சுப்ரமணியம் கடிதம் மூலம் அறிந்து சொல்லாமல் கொள்ளாமல் அழையா விருந்தாளியாக பிரேமிளை சந்திக்க முடிவு செய்தேன். கும்பகோணத்திற்கு இது இரண்டாவது தடவை. **'மோகமுள்'** முடித்து, உடனடியாக மூட்டை கட்டிக் கொண்டு போய், பாசிபடிந்த மாமாகங்குளத்தில் தங்கம்மாள் தற்கொலை செய்து கொண்ட தென்மேற்கு ஈசான மூலையை தரிசித்துவிட்டு, கஷ்டப்பட்டு கைக்காட்டித் தெருவை கண்டுபிடித்து 'அது' இப்போது இல்லாமல் ஏமாற்றத்துடன் திரும்பியது ஒரு பழைய விசித்திர முன் அனுபவம். இதேபோல் ஆர், ஷண்முக சுந்திரத்தின் நொய்யல் கிராமங்களான கீரனூர் வெங்கமேடு சிவியார் பாளையம், ஒரத்தப் பாளையம் இவற்றை இட்டாரி இட்டாரியாக சுற்றியபோது, அங்கு நாகம்மாளும் கெட்டியப்பனும் கூடிக் குலவிய ஓலைக் குடிசையோ, முத்தாயள் எட்டிக்குதித்துச் செத்தநல்ல தண்ணிக் கிணறோ அல்லது நீர்மலாவோ ஒரு குஞ்சுக் குருவியைக் கூடக் காணோம், வெய்யிலையும் கானலையும் சுவாசித்துக் கொண்டிருந்த கிளுவ முன்கூட்டங்கள்தான் இருந்தன. எங்களை ஒன்றும் செய்ய முடியாதென்ற தைரியத்தில். இப்படித்தான், நீலபத்மநாபனின் **'பள்ளிகொண்டபுரம்'** வாசித்த உடனே ஒரு ரஷ்ய இளம்பெண், திருவனந்தபுரத்திற்கு ஓடிவந்து பத்மநாபசாமி கோயிலின் இருண்ட பிரகாரத்தில் உள்ள 'கார்த்தியாயினி' விக்கிரகத்தை தொட்டுத்தழுவி தான் அதுபோல் கட்டுமஸ்தாக இல்லையே என்ற ஏக்கத்தில் முத்தங்கள் பொழிந்ததாக ஒரு சம்பவம் காற்று வாக்கில் கேள்விப்படுகிறேன்.

பிரேமிள் என்ற படுபாதாளக் கிணற்றுக்குள் எட்டிப்பார்த்து அதில் என்ன இருக்கிறது, ஒரு a b c ஆவது தெரிந்துகொள்ளலாம் என முயல, அதற்குள் தன்னகங்காரத் தன்மை கொண்ட ஒரு மெடபிசிக்கல் தர்க்க உலகம் வியாபித்துக் கிடக்கின்ற பயங்கரம் மட்டும் 'a sight to dream of not to tell' போல் என்னை ஓட ஓடத் திருப்பித் துரத்தியிருக்கிறது. தமிழின் சராசரி வாசகத் தன்மை இன்று சினிமாத்தனமாக இருக்கும்போது சிறுகதையில் புதுமைப் பித்தனையும், கவிதையில் பிரேமிளையும், சாதனை யாளர்களாக சொன்னால் பலரது கண்களும் அகலவிரியத் தான் செய்கிறது.

பிரேமிளின் பெயர் மாரீசம் **'எழுத்து'**வுக்கு முன்னும் பின்னும் ஒரே தாவலாக பறந்தடித்து **'லயம்'** பத்திரிக்கையில்தான் ஒரு

படிப்பகம்

padippakam

கிளையில் நிலைத்து அமர்ந்திருக்கிறது. வானவில்லின் நிறங்களாய் ஒன்றிலேயே – தருமு, தர்மு, தர்மோ, தர்ம – சிவராம், சீவராம், ஜீவராம், அஜித்ராம் – பிருமிள், பிரமிள், பிரேமிள் ... என்ற வண்ண ஜாலங்கள். இவ்வேஷங்கள் நாடோடித்தனமாகத் தெரிந்தாலும் இவைகள் நியுமராலஜியின் அடிப்படையில் அவ்வப்போது கூட்டிக் குறைத்துக் கொண்டிருக்கலாம் என்பது என் அனுமானம். தன் மீது மோதும் போலிகளை வம்புக்கு இழுத்து 'ராவுடி' பண்ணுவது வழிமறைத்து 'கலாட்டா' செய்வது, 'திடீரென்று' தாக்குவது இப்படியான வாடிக்கைகள் இவரை இலக்கிய கொரில்லா வாக்கியுள்ளது. நிலைமை முற்றும்போது விஷயத்தை விட்டு விட்டு, ஆள்மேல் ஏறுவதும் தமிழில் பிரேமிள் தோற்றுவித்த புதுவகையான கலக விமர்சனம். ஒருவன் எந்த அமைப்பிலிருந்து ஜாதியிலிருந்து, வர்க்கத்திலிருந்து, தொழிலிருந்து கொண்டு எழுதினாலும் அது கீழ்மை செய்யக் கூடாது. வறுமையில் அடிபட்டு இலக்கியத்தை செம்மைப் படுத்தியது புதுமைப்பித்தன் போன்றோரது பெருந்தியாகம் சூழ்ச்சியைப் புரிந்து கொள்பவன் எழுதினாலும் எழுதாவிட்டாலும் கலைஞன் தான் என்பது பிரேமிளியத்தின் மிக முக்கியமான நாடிகளில் ஒன்று. பிரேமிள் பிரபலமானவர் / ஒதுக்கப்பட்டவர் என்ற இரண்டு தட்டிலும் சரிசமமாக நிற்கிறார். வணிக பத்திரிக்கை களுக்கு இவர் ஜென்ம எதிரி; பிரசுரகர்த்தாக்களுக்கு வேதாளம். போலிக்கவிஞர்களுக்கு இன்றைய ஒட்டக்கூத்தன். வறட்டு விமர்சகர்களுக்கோ எமன். இவைகள் பிரேமிளின் நவீன ஆயுதங்களாய் அடையாளங்களாய் தெரிகின்றன.

"என் கதை நெருப்பப்பா, நெருப்பு, அதைப்போட்டால் உன் பத்திரிக்கை எரிந்துவிடும்'' என்று புதுமைப்பித்தன் சம்பிரதாயத்துக்கு கதை கேட்ட ஒரு பத்தாந்தரத்தை சொடுக்கிய விஷயம் நமக்குத் தெரியும். பிரேமிள் விஷயங்களிலும் இந்தவித ருத்ரதாண்டவமான கொந்தளிப்புகளும், காரத்தன்மையும் நடந்திருக்கின்றன. எது எப்படியாயினும் பிரேமிளின் இலக்கிய இயக்கம் புதுமைப்பித்தனுக்கு நேர் அடுத்தது என்பது நடந்து முடிந்த சரித்திரம். பித்தனில் தெரித்தது எஃகு இரும்பின் தீவிர உறுதித் தன்மையென்றால் பிரேமிளில் தேக்கின் சேவேறிய திரட்சித்தன்மைகள் படிமங்களாய் லகுவில் பிளக்கவோ பிரிக்க வோ முடியாதபடி உருண்டுகிடக்கின்றன. இவைகள் பலராலும் புரிந்துகொள்ள முடியாத கடினத்தன்மையும் ஈஸியாக இமிடேட் பண்ணமுடியாத தனித்தன்மையும் கொண்டவை. தமிழின் விமர்சனதரித்திரத்தை போக்கிய பிரேமிளின் ஆன்மீக ஞானமார்க்கம் முன்னேறிய ஒரு நான்காவது நவீனத்தமிழை உற்பத்திசெய்துள்ளது மறுப்புக்கூற முடியாத சவாலாகும். இவர் இலங்கைத்தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இதை இருட்டடிக்கும் முயற்சிகளும் சிறுபத்திரிக்கைகளில் நாளும் நடந்துவருகின்றன. தமிழ் நாட்டில் வாழ்ந்து இங்கே மட்டும் எழுதுவதால் இலங்கையலும் இவர்மேல் ஒரே கொதிப்பு. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஆங்கில படைப்பாளிகள் சமமாக பாவிக்கப்படும் போது இலங்கை, தமிழ்நாட்டில் மட்டும் ஏன் பேதம்? இந்த மாதியான அகௌரவங்கள் மொழிக்

படிப்பகம்

padippakam

கொலையை ஏற்படுத்திவிடும். யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் வாழ்க்கை முறையில் சில வட்டாரமான அம்சங்கள் தவிர வேறு என்ன வித்தியாசம்? கோல்டுஸ்மித்தையும், ஸ்காட்டையும், பெர்னாட்ஷாவையும், ஜாய்சையும் லண்டன் மக்கள் கரகோஷத்துடன் வரவேற்கவில்லையா? இச்சூழ்ச்சிச் சூழலில் துணிந்து தமிழின் நவீனத்துவம் தொகுத்தும், பிரேமிள் கவிதைகளில் Phd ஆய்வு செய்தும், பிறபடைப்புகளை பிரசுரம் செய்தும் பிரேமிளை முன்னணிக் கலைஞனாக காட்டி வந்த / வரும் கால சுப்ரமணியம் மிகவும் கவனத்திற்குரியவர் இதில் சோதனைகளை சந்தித்திருந்தாலும் கால. சுப்ரமணியம் செய்த வேலை தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருமைக்குரியதாக பின்னால் வரும் வாசகர்கள் படிப்பார்கள். ஜான்சனுக்கு ஒரு பாஸ்வெல் என்றால் பிரேமிளுக்கு கால. சுப்ரமணியம் அதைவிட பல பங்குமேல் என்பது இன்னும் எழுதப்படாத பையாகிரப்பி. உலகக்கவிதை இயக்க வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி பிரேமிள் என்பது விசாலமான ஆந்தைக் கண்களுக்குத்தான் தெரியும். தமிழில் இந்த அற்புதம் நடந்திருப்பது நம்ப முடியாததாகவே இருக்கிறது.

பரிசளிப்பு ஞாயிற்றுக்கிழமை. நேரம், காலம், இடம், எதுவும் தெரியவில்லை. தஞ்சையைத் தாண்டி சி. எம். முத்து வின் இடையிருப்பு கிராமத்தில் சனிக்கிழமை இரவு கழிந்தது. காலையில் நாங்கள் புறப்பட்டு வந்து சேருவதற்குள் மணி இரண்டாகிவிட்டது. வந்த நேரத்திற்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாதது பெருத்த ஏமாற்றத்தில் முடிந்தது. ஏனெனில் ஒரு மேடை, பந்தல், மாலை, மைக் இல்லாமல் கோயிலில் தாலிக் கட்டியதைப் போல் விழா ஒரு பத்துப்பேருடன் சுருக்கமாக நடந்தேறியிருக்கிறது. இதற்கு முந்தைய ஆண்டு எம். வி. வெங்கட்ராமுக்கும் இதே கதிதான் நேர்ந்திருக்கிறது என்று சி. எம். முத்து சொன்னார். பரிசித்தொகையும் மிகவும் சொற்பம். ஒரு ஆயிரம் ரூபாய்தான். ரவிசுப்ரமணியனுக்கு சொந்தமான செல்லம் லாட்ஜில் பிரேமின் தங்கியிருப்பதாக கேள்விப்பட்டு நானும் சி. எம். முத்து இருவரும் அறிவிப்பின்றி நுழைந்துவிட்டோம். வி. எஸ். சத்யா, 'மீறல்' தண்டபாணி உ. செ. துளசி, 'களம்புதிது' கரிகாலன் இன்னும் பெயர் தெரியாத சில நண்பர்கள் சூழ்ந்திருந்தனர்.

"கல்கி இறந்து விட்டார். இனித்தமிழும் செத்துவிடுமே! என்று கவலைப்பட்டாராம் ஒருவர். அதனாலென்ன கி. வா. ஜகந்நாதன் உயிரோடு இருக்கிறார். பிழைத்துக்கொள்ளும் அழவேண்டாம்! என்று ஆரஞ்சுப்பழம் கொடுத்து தேற்றினாராம் இன்னொரு ரசிகர்" — என்று பொதியவெற்பன் பழைய ஜோக்கை அவிழ்த்துவிட்டதும் அறை முழுதும் ஒரே சிரிப்பு வெடிகள்!

'மணல்வீடு மாரப்பன் ...' ஆசிரியர் 'சதுக்கப்பூதம்' ... ஏற்கனவே தெரிந்திருந்த பொதிய வெற்பன் என்னை வரவேற்று அறிமுகப்படுத்தினார். பிரேமிளைப் போன்ற இன்னொரு

படிப்பகம்

மழுங்க மீசை மழித்த இந்திதர்மேந்திரா ஸ்டைல் இளைஞரும் இன்னொரு பெட்டில் இணையாக உட்கார்ந்திருந்ததால் சற்று நேரம் ஆள் மாறாட்டமும் (திருதிரு) விழிப்பும் இடம்பெற்றது. இவர் சரவணன் என்ற பிரேமிளின் நண்பர் என்பது பின்னால் தெரிந்தது.

மீறல் – 4 பிரேமிள் சிறப்பிதழ் அட்டை படத்தை நினைவு படுததிசகொணடு 'வணககம' என்றேன் 'நான் பிரமிளில்லை அவன் தடிபபயல் இது கொட்டைக்குச்சி' ஒரு நிமிடம் சாதித்துப்பார்த்தும் என் உடும்புப்பிடியில் ஒனறும் நழுவ முடியவில்லை.

போட்டோவுக்கும் நேரிலும் நிறைய வித்தியாசம்' என்றேன் 'அதில என்ன ஆச்சரியம்' எனறார் பிரேமிள் ஏதோ கூழையாக கூனதள்ளி ஒரு 'Hunchback of Notterdame' போல் மனிதர் ஜிப்பாபோட்ட வயோதிகராக காட்சியளிப்பார் என்றிருந்தேன் சொடுககி விட்டாற் போன்ற உடம்பிலோ முதுகிலோ ஒரு ஒடுக்கும் இல்லை ஒரு லேசான மஞ்சள் கலந்த வொயிட் சபாரி. ஜேப்பில் ஒரு ரோட்டமாக் பால்பாயின்ட் குடிகொண்டிருந்தது குளிதது வாரிவிட்டிருந்த தலையில் பொதுபொதுப்பான லேசான நரைத்த தலைமுடிகள் சொன்ன பேச்சைக் கேட்டுக் கொண்டு அடங்கியிருந்தன. மூக்குக்கண்ணாடியும் படிக்கும் போது போட்டுக்கொண்டார். விழிகள் இரண்டும் கூரிய பார்வைகளை கொண்டிருந்தன. சுற்றி சிறுபத்திரிக்கைகள் கொட்டிக்கிடக்க, மண்டியிட்டும், கையசைத்தும் விளையாட்டுப் பையனைப் போல் கறுசுறுப்பாகவும் சுவாரஷ்யமாகவும் பேசிக் கொண்டே போனார் அந்த அறை இரண்டுபெட்கள் கொண்ட பெரிய ஹாலைப்போல் இருந்தது. பலரும் சுற்றிபோடப்பட்ட சேர்களில் வட்டமாக அமர்ந்திருந்தனர். பிரேமிள் அவர் அருகாமையிலேயே என்னை உட்காரவைத்து கொண்டதும் வேர்த்து வெலவெலத்துப்போனேன். **'தமிழின மாமேதை'** யின் அருகில் அமர்ந்திருக்கிறோம் என்ற பயத்தில் வெகு நேரம் வரைக்கும் உஷாராக வாயைக் கட்டிவைத்துக்கொண்டிருந்தேன். வேறுசில விவாதங்களும் காரமாகத் தொடர்ந்தன. பிரேமிள் அவற்றை சமாளித்தபோது 'அய்யோ நாம் சிங்கத்திடம் தாம் சிக்கிக் கொண்டோம்' என்ற நினைப்பு எழுந்தபோது 'இல்லை, இல்லை ஒரு தாயின் அன்பான அரவணைப்பில் தான் பாதுகாப் பாக இருக்கிறோம் 'என்ற மகிழ்ச்சியாக அதுபின்னால் மாறியது ஒரு வழியாக பிரேமிள் என் விஷயங்களுக்குத் திரும்பினார்'. 'பேர் என்ன கல்வீடு காளியப்பன் போல் ஒரே ரொமான்டிக்கா இருக்கிறது.' லேசான நகைப்பு. பலரும் சுட்டிக் காட்டியதை பிரேமிள் அழுத்தமாக சொன்னார். ஆர். ஷண்முகசுந்தரம் பற்றி கட்டுரைகேட்டபோது பிரேமிள் என்னை Marrappan என்றும் சுருக்கி 'மாரி' என்றும் குறித்திருக்கிறார். பெயர் விஷயங்களில் கூட பிரேமிளது விஞ்ஞானப்பார்வைதான்.

பழைய நாடக வாழ்க்கைப் பேர்... என் துக்கத்துக்கும், தோல்விகளுக்கும் வேறுசில பாதுகாப்புகளுக்கும், ஒரு குறியீடாக

padippakam

சேர்த்துக்கொண்டது. சொல்லிவிட்டு முகத்தை உற்றுப்பார்க்க அவரும் அதே தர்மசங்கடத்துக்கு ஆளானர். இனிமேல் இரா· மாரப்பன் அல்லது வெறும் மாரப்பனாகவே இயங்குங்கள் என்றார் என் முடிவும் அதுதான்.

'இந்த உடையில் நீங்கள் வித்தியாசமாகத் தெரிகிறீர்கள்' 'ஆடையில் ஒன்றுமில்லை. அதிகமாகப் படிப்பதிலும்தான்.' நான் காவியைக் கூட கட்டிக்கொண்டு திரிவேன், உங்களைத்தெரியாது பிரேமிள் படிப்பதற்கான வசதிக்காகவே சென்னையில் இருப்பவர். தமிழில் நாளைக்குத்தான் புதிதாக புள்ளையார் சுழி போடுபவர்போல் பேசியது ஒரு இளைஞனின் ஆவேசத்தை யும் தோரணையையும் ஒன்றாய்க் காட்டியது. வேறுசிலருடன் பேச்சுக்கொடுத்த வேளையில் மீண்டும் ஒரு வினாடி உற்றுப் பார்த்தபோது ஒல்லியான உடலும் மாநிறமும் தெரிந்தது. இறுதியாக படம் பிடித்தபோதுதான் 59 வயது ஆரோக்கியமான ஆனால் வாடிச்செழித்த செடி போன்ற உருவம் உறுதிப்பட்டது. பிரேமிள் ஒற்றை நாடியான உயரத் தோற்றம் கொண்டவர். நல்லவேளை, பத்திரிக்கைக்கு போட்டோ கேட்ட போது சமீபத்தில் எடுத்த எஸ்ரே படத்தை தரட்டுமா? என்ற புதுமைப்பித்தனின் மோசமான நிலையில்லை.

"நீங்கள் நாடகத்துறையை சேர்ந்தவரா?"...

'ஆம். அமெச்சூர் வகையறா...' என்ற போது அவரது மாஸ்டர் பீசான 'நக்ஷத்ரவாஸி' வானில் வெடித்துச் சிதறிய பிளம்பாய் ஒரு நிமிடம் பிரகாசித்து மறைந்தது. வழக்கமில்லாத வித்யா பாத்திரமும் அற்புதமான காட்சியமைப்பு பிரதிமைகளும் கச்சிதமான படிம சம்பாஷணைகளும் நிரம்பித் ததும்பும் இந் நாடகம், மேடை மரபுக்கே புதிதானது. லண்டன், கொழும்பு நகரங்களில் அரங்கேறியும் தமிழ்நாட்டில் இதுவரை நடிக்கப் பெறாதது துரதிஷ்டமாகும். இது நிறைவேறாமையினால் பிரேமிள் தொடர்ந்து எழுதியிருக்க வேண்டிய நாடகங்கள் நின்று விட்டன. இதன் குறியீடுகள் ஒரு காலத்தில் தமிழகத்தில் கொடி கட்டிப் பறந்த தோல் பொம்மை ஆட்டங்களில்தான் பார்த்திருக்கிறேன். இதன் விஞ்ஞானக் கருவும் நவீனபாணி யுக்தியும், T. S. எல்லியட்டின் மதவிமர்சனத்தை மையமாகக் கொண்ட, கவிதை நாடகமான 'மர்டர் இன் தி கத்தீட்ரல்'-க்கு சமமாக அமைக்கப்பட்டிருக்கிறது. கதை-வசனத்தை நாடகம் என்று கூறிக்கொண்டு பலரும் இன்னும் கண்டதை கட்டிக் கொண்டு அழுகையில் பிரேமிள் அதை உடம்பின் மொழியாக்கி வானில் சஞ்சரிக்க வைத்திருப்பது புதுவகை விஞ்ஞானத் தமிழ்'.

'ஆமாம் காலில் எப்படி ஊனம்... எங்கே பார்க்கலாம்' என்று என் பேன்டை தொட்டுப் பார்த்து மிகவும் இரக்கப்பட்ட அதே சமயத்தில் வித்தியாசமின்றி நடக்கும்போது முகம் மலர்ந்தார். குளிப்பதற்காக கிணற்றில் இறங்கிய போது தவறி விழுந்தது .. என் சோகத்தை சொல்லி முடித்தபோது விசனமாக கேட்டுக் கொண்டிருந்த பிரேமிள் என்ற மனிதர் உருகி ஒரு

படிப்பகம்

padippakam

சொட்டுக் கண்ணீர்விட்ட நிலைக்கு ஆளானார். இரும்பு என்றும் நெருப்பு என்றும் பலர் பிரேமிளை வருணித்தது பொய்யாகிப் போயிற்று. இலங்கையில் இளமைப் பருவத்தில் தன் தாயார் பட்டினியால் துடித்ததும் மேல் படிப்பைத் தொடர முடியாமல் ஓவியத் தொழிலுக்கு வந்ததும் பின் புலம்பெயர்ந்து தமிழகத்தில் நிலையாகத் தங்கியதும் – பேட்டிகளில் குறிப்பிட்டிருந்தது நெஞ்சில் எழுந்து மறைந்தது. ஒரு நிமிடம் நீடித்த இந்த மௌனத்தை பிரேமிள் கலைத்தார் சுற்றியிருந்த தலைகளை எண்ணிவிட்டு, 'எட்டு குட் டீ' என்று ஆர்டர் கொடுத்தார். பாக்கெட்டில் இருந்த காசை ரூம் பையனிடம் முந்தி நீட்டிய போதுதான் தெரிந்தது கையில் காசிருந்தால் பிரேமிள் செலவுக்கு அஞ்ச மாட்டாதவர் என்று. ஆனால் அவர் கை ஓட்டைக் கை. இருந்தால் வள்ளல்தான் கண்முன் தெரியாமல் வாரி இறைத்து விடுவார். நண்பர்களுக்கும் புத்தகங்களுக்கும் என்று.

என் கட்டுரைகள் வெறும் தகவல்கள் தான். என் செக்கு மாட்டுத் தொழிலிருந்து தப்பித்துக் கொள்ளும் ஒரு நிவர்த்தி. எழுதிப் பழகும் முயற்சி என்றேன்.

'பரவாயில்லை' ஆனால் இறுக்கிப் பிடித்து செயற்கை சொற்களைச் சேர்க்க வேண்டாம் என்றார் பிரேமிள்.

'எங்களூர் சரவணமுத்துப் பிள்ளைதான் தமிழின் முதல் நாவலாசிரியர் விட்டு விடாதீர்களே சிட்டி. பெ. கோ. சு. கூட நிருபித்திருக்கிறார்.'

'தெரியும்' நான் ஆராய்ச்சிக்குப் போகவில்லை. Once established நாவல்களைத்தான் எந்த நோக்கமுமின்றி ஒரு விமர்சனத்துக்கு மட்டும் எடுத்துக் கொண்டேன் என்றேன். அதோடு புதுமைப்பித்தன் மீது மாப்பஸான் தழுவல் சாணியை வீசியது, கு. சின்னப்பபாரதியின் 'தாகம்' நாவலை சிறந்த பத்து இந்திய நாவல்களில் ஒன்றாக உயர்த்தியது முதலிய சிட்டியின் குட்டுக்களையும் எடுத்துக் காட்டினேன்.

'கமலாம்பாள் சரித்திரம் முற்பாதி நாவல், பிற்பாதி கனவு' புதுமைப்பித்தன் கூறியிருக்கிறார் என்றார் பிரேமிள்.

'ஒத்துக் கொள்கிறேன்' அதே பு. பி.தான் பிரதாப முதலியார் சரித்திரத்தை குறையே ஆனாலும் அதுவே முதல் தமிழ் நாவல்' என்றிருக்கிறார். அது உங்களுக்குத் தெரியுமா? என்று பதிலளித்த போது ஒரு அசட்டுத் தைரியமும் பிறந்தது. விஷயம் வேறு பக்கம் திரும்பியது. தொகுதி தொகுதியாக எழுதித்தள்ளாத பிரேமிள், பேசும் போதும் கண்டிப்பான அளவுதான். பல அறிவு ஜீவிகளை ஸ்தம்பிக்க வைத்த அவரது கட்டுக்கல்லான நடை விவாதத்தின்போதும் பிரதிபலித்தது. அவரது ஆரம்ப விமர்சனங் களின் காட்டம் தாங்க முடியாமல் சில கந்திரிகள் அவரை அடிக்க கை ஓங்கிய நிகழ்ச்சிகளும் நாகர்கோவிலில் நடந்ததாகச் சொன்னார்.

படிப்பகம்

padippakam

சி. மணி வைத்திருக்கும் சில எழுத்து 'பிரதிகளில் அவசர அடியாக தருமு சிவராமை பார்த்திருந்தாலும் '**தமிழின் நவீனத்துவம்**' தான் அவரை முழுக்க தெரிந்து கொள்ள உதவியது. இப்போதைய பேட்டிகளைவிட அக்காலத்திய கட்டுரைகளில், விமர்சனத்துக்கு எதிர் விமர்சனம் எழுதி வெட்டு ஒன்று துண்டு இரண்டாக விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் பிரேமிள். உண்டு, இல்லை என்ற இரட்டை முகம் கொண்ட உராய்வுத் தத்துவத்தில்தான், சமூகம், இயற்கை மற்றும் இலக்கிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பது அவரது அக்காலக் கருத்துலகம். அப்போது பச்சைப் பாலை மரத்தில் அடித்த ஆணிபோல் என்றால் இப்போது அதுவே ஒரு முதிர்ச்சியைத் தொட்டிருக்கிறது.

தன் தாயார் சாது அப்பாத்துரையிடம் அழைத்துச் சென்ற விபரம் அவர் தொகுத்த '**தியானதாரா**' – வரலாறும் தொகுப்பும் தெரிவிக்கிறது. இந்நூலில் இன்னபிற இலங்கை–தமிழ்ச் சூழல்கள் சிறுவன் பிரேமிளை விடாப்பிடியான லௌகீக வாதத்திலிருந்து சமூக ஆன்மீகத்திற்கு இழுத்துவிட்ட சுவடுகளையும் பார்க்கலாம். **ஜே. கிருஷ்ணமூர்த்தி**யின தத்துவ உலகிற்குள் நுழைய இதை ஒரு வாசறபடியாக எடுத்துக் கொள்வது மிகவும் வசதியானது. '**ஆயி**' குறுநாவல் ஒரு மூச்சில் எழுதப்பட்டு ஒரு வறண்ட பாலை வனத்திற்குள் பயணம் செய்த தாகத்தை ஏற்படுத்துகிறது. முடித்து நிறுத்தி விட்டோமானால் குடம்குடமாக தண்ணீர் குடித்துத் திர வேண்டும் தமிழில் குறுநாவல் செய்வோர் பிரேமிள் உருட்டி வைத்திருக்கும் இந்தப் பாராங்கல்லைப் புரட்டாமல் மேலே முன்னேறுவதில் பயனில்லை. 'கணையாழி' யிலோ 'கல்பனா'விலோ வந்து, பக்க அளவீடுகளில் குறுநாவலை எடைபோடுவது பைத்தியக்காரத்தனம். டால்ஸ்டாயின் 140 பக்க 'Recollections of Sevastopol' சிறு கதையும் அல்ல, குறு நாவலும் கிடையாது. ஒரு கதை அவ்வளவுதான். ஆர். ஷண்முக சுந்தரத்தின் நாவல்கள் அளவில் சிறியவைகளாக சொற்சிக்கனம் கையாளப்பட்டு யதார்த்தமாக வெளியான போது கழுதை விட்டையானாலும் கை நிறைய இல்லையே என்ற பொட்டைக் கண் பார்வைதான் நிலவியது. இந்த அசிங்கமான, அதிமேதாவித் தனங்கள் இன்றும் பலரை பாதிக்கின்றது. இத்தடிநாக்கு ரசனையை வளர்த்துவிட்டது யாரோ?... அழகான அட்டை ஓவியம் 'ஆயி' ஆசிரியரே தீட்டியிருக்கிறார். பிரேமிள் கல்யாண மாகாத கட்டைப் பிரமச்சாரியானாலும் 'ஆயி' அவரது பேர் சொல்லும் பிள்ளைகளில் ஒன்று. 'லங்காபுரி ராஜா'வில் வரும் 'ப்ரசன்னம்' சுந்தரராமசாமியின் 'ஜே. ஜே. சில குறிப்புகள் மீதான ஒரு எதிரடி. Parody – யானாலும் அதையும் மீறி வேறு பரிமாணத்துக்கு செல்வது. செயலின் ஊற்றுக்கண் சிந்தனையை பாதிக்கிறது என்ற ஜாதிய அழுக்கு முகத்தைக் காட்டாமல் காட்டி மொழிகளின் மூலம் இந்தியாவை ஒருங்கிணைக்கும் புதிய பிராமணீயத்தை சு.ரா அரசியலாக்கிய போது இது 'BECH – a book' என்பதன் அப்பட்ட தழுவல், ('பழைய புட்டியில் புதிய புளுகு' (விருட்ஷம்)) என்று பிரேமிள் அம்பலப்படுத்தினார். திராவிடப் பாரம்பரியத்தின் மீதான

படிப்பகம்

padippakam

அத்துமீறலை தடுத்து நிறுத்திய பதிலடிச் செயலாகவே இது பட்டாலும் அழுக்கை உருட்டி வைத்த சு. ராவும் ஆரோக்கியத்திற்கு வெளிச்சமிட்ட பிரேமிளும் இங்கு பிரித்தறியப்படுகிறார்கள். சார்த்தர், காம்யு, காப்கா, ஜே. கிருஷ்ணமூர்த்தி சாரங்களின் சுலபமான ஓரங்களை மட்டும் வெந்தும் வேகாமல் பச்சையாக விழுங்கி செரிமாணிக்க முடியாமல் விட்ட குசுவின் பிணநாற்றந்தான் ஜே. ஜே என்பது பாமர வாசகர்களுக்கு திரை போட்டு மறைக்கப்பட்டுள்ளது. 'கலைஞன் அந்நியமானவன்' ஸ்லோகம் 'The outsider' என்பதின் தத்ரூப கார்பன் காப்பி. ஜோசப் கே அல்லது ஜே. கே. தான் ஜே ஜேவாக மாற்றி ரப்பர் ஸ்டாம்பாக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி மேற்கத்திய மேஜிக்கல் ரியலிஸம், போஸ்ட்மாடர்னிஸம் பாலிம்ஸெஸ்டு சரித்திரங்கள் யாரும் சீந்தாமல் சீழ்பிடித்து இன்றோ நாளையோ என்று மரணத்தறுவாயில் கிடக்க – அது பழைய ஐரோப்பிய ரொமாண்டிசிஸத்தின் நவநவீன வடிவம் என்று கண்டுபிடிக்கப்பட்ட வேளையிலும் – அது அறிவியல் ரீதியானது என்று தமிழவன் இறக்குமதி செய்த ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்' கதை சொல்லி முறையில் புதுவகை மரபானது என்றபோது அதற்கு **சல்மான் ருஷ்டியின்** (Shame) முன்னோடியாகவும் **கேப்ரியல் கார்ஸியா மார்க்வெஸின்** 'One Hundred Years of Solitude' நகலாகவும் வாந்தி எடுத்ததை சிறு பத்திரிக்கைகள் பலவும் சாடியுள்ளன. தமிழில் தனக்கு நிகரில்லை என்பது ஆடிக் குதித்த போது **ஜெயமோகன்** ஆர். எஸ். எஸ் க்கு மணியடிக்கும் பூசாரியாக பிரேமிளால் முகமூடி கிழிக்கப்பட்டார். (லயம்–12) கள்ளக் கடத்தலும், நாணயத் திருட்டும், 'நகாசு வேலைகளும் தமிழ் இலக்கியத்தை வணிகமாக்கியபோது பிரேமிள்தான் இவற்றை துணிந்து தோலுரித்துக் காட்டினார். **'விமர்சன ஊழல்கள்'** இன்றைய தினமணியில் இருக்கும் **ராஜமார்த்தாண்டன்** அன்று **'கொல்லிப்பாவை'** வெளியீடாக பிரேமிளுடன் நடத்திய பேட்டி. இதன் பிரதி இப்போது கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதிலிருந்துதான் பிரேமிள் உக்கிரங்களை உமிழ ஆரம்பித்துள்ளார். இவைகள் தமிழுக்கு மணியான, மாணிக்கமான நவீன விமர்சனங்கள். நா. **முத்துசாமி**, **மௌனி**, நா. **பிச்சமூர்த்தி**, **ஞானக்கூத்தன்**, சா **கந்தசாமி** முதலியோருடன் கட்டிய குழாயடிச் சண்டைகள் போல் இவைகள் தெரிந்தாலும் வகுப்புவாதம், வைதீகம், அறைகுறையான இலக்கியத் தன்மை முதலிய பிற்போக்குத் தனங்களில் ஒளிந்திருக்கும் சனாதன எழுத்தாளர்களை அம்முகாமிலிருந்து கொண்டே திருப்பித் தாக்கிய போக்கு இதில் தெரிகிறது. தொடர்ந்து **சாருநிவேதிதா**, **அசோகமித்திரன்**, **ஜெயகாந்தன்**, தி. க. சி, **வைத்தீஸ்வரன்**, **ஞானக்கூத்தன்**, முதலியோருடன் வெளிப்படையாகவே மோதி தன் பலத்தைக் காட்டியிருக்கிறார் குமுதம் பரிசுக் கதைகளை சுஜாதாவுக்காக 'செலக்ஷன் செய்ததாலும்' 'புதிய தரிசனங்களின்' கடிதங்களை தொகுத்ததாலும் ஞானியின் 'பஞ்சாயத்து பண்ணும் வேலையை பிரேமிள் ஆரம்பத்திலிருந்தே பேசியிருக்கிறார். **பெரியார் ஈவேரா**, **அண்ணாத்துரை** இவர்கள் சாகித்ய அகாதமியில் இடம் பெறாது உண்டவீட்டுக்கு ரெண்டகம் செய்த ஜெயகாந்தன், தமிழவன், சா. கந்தசாமி மூவரையும் சுயத்தன்மையில்லாத

படிப்பகம்

padippakam

இரவல்களாக, கையலாகாத இலக்கியப் போலிகளாக இனம் காட்டியபோது ஏகப்பட்ட சிறுபத்திரிக்கை வாசகர்கள் உஷாரானார்கள். கா.நா சுக்கு ஆங்கிலம் தவிர பிறமொழிகள் தெரியாது; கருப்பான காமராசர் காலண்டரில் சிவப்பாக தெரிவது வெறும் சாயத்தில்தான் என்ற விமர்சன உறுதிகள் பிரேமினின் கருத்து யதார்த்தத்தை காலம்முழுவதும் பறை சாற்றும். ஸ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை 'அற்புத வரலாற்றுச் சுருக்கம் இதன் எளிய நடையில் - நாம இன்றைய இலங்கையின் இனப்பிரச்சினையை தெளிவாக பார்க்கலாம். அன்று புதுமைப் பித்தனுக்கு ஒருசிலர்தான். இன்று பிரேமிளுக்கோ பலாச்சுளை ஈக்கள் போல் பலரும் கடிக்கும் நிலை. விமர்சகர்களுக்கெல்லாம் விமர்சகராய் விளங்கும். பிரேமிளின் போக்கு தம் பிரகஸ் பதித்தனத்தை புலப்படுத்திய நிறைய மேதாவிகளுக்கெல்லாம் கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

'கண்ணாடியுள்ளிருந்து' 'கைப்பிடியளவுகடல்' 'மேல்நோக்கிய பயணம்' இவைகளிலிருந்து 'கவுன்டர்கல்ச்சர்லிமிடெட்' அதிரடிக் கவிதைகள் வரை நிறையவந்தும், பிரேமிளின் கவிதைகள் ஒரு முழுத் தொகுப்பாக இன்னும் கிடைக்கவில்லை; ஜே.கே.யில் ஊறி தன்னைக் கரைத்துக் கொண்ட பிரேமிள் லயம் பேட்டிகளில் இலக்கியமல்லாதவற்றை துணிந்து தோலுரித்து வருகிறார். முன்றில் 'கவிதாசரண்'கள் இவரை தாக்குப்பிடிக்கமுடியாமல். ஒதுங்கிக்கொண்டன.

கவிதையில் பிரேமிள் சாதனை இயற்கையின் கரடுமுரடான காட்டுத்தனமும் காண்டாமிருக மூர்க்கப்பலமும் கொண்டது. குறைந்தபட்ச சங்க இலக்கியப் பயிற்சிகூட இல்லாமல் இன்றைய குருட்டாம் போக்குக் கவிதைகளை வைத்து பிரேமிளை நெருங்குவது அபாயகரமானது. அடிப்படையான பௌதீக அறிவில்லாமல் பிரேமிளைத் தொட்டால் 'ஷாக்'தான் அடிக்கும். வண்ணதாசன்/வைரமுத்து வழ வழா, கொழ கொழாக் களையும், வழக்கமான எதுகை மோனை, வார்த்தை மடிப்பு களையும் கொண்டு போனால் நிச்சயம் அவர் அதில் அடங்க மாட்டாமல் திமிறிக்கொண்டு ஓடிவிடுவார். பிரேமிளின் படிமவியல் 2000 வருட தமிழ்க்கவிதைச் சரித்திரத்தில் புதுமை யானதாக சி.சு. செல்லப்பா கணக்கிடுகிறார். ஒரு கவிதையான உரைநடை அல்லது உரைநடையான கவிதை அல்லது இரண்டும் மருவியநிலை வால்ட் விட்மனின் 'leaves of grasses'-ல் உலவியது உண்மைதான். ஆனால் கட்டுப்பாடற்ற இந்த 'Free verse'போக்கு பிரேமிளிக்குப் பொருந்தாது. எஸ்ரா பவுண்டுடன் இவரை இணைக்க முடியாது. 'We are all hollowman moving in the waste land' என்ற எல்லியட்டின் தப்பித்தல் தத்துவம் பிரேமிளுக்கு நேர் எதிரானது.பின் பிரேமிள் கவிதையின் குணாம் சம்தான் எனன்?

இதைத் தெரிந்துகொள்ளுமுன் 'மெடபிசிக்ஸ்' என்றால் என்ன? என்ற கேள்வியைப்போட்டுக் கொள்வது அத்தியாவசியம் தமிழ் அகராதியில் இதற்கு 'அப்பர்லைத்தத்துவம்' எனப் பெயரிடப் பட்டிருக்கிறது, மீபௌதிக வகைக்கு அரிஸ்டாட்டில்

படிப்பகம்

padippakam

சூட்டிய பெயரான இது அடிப்படையில் ஒரு குணரூபம் (abstract) ஆகும். பொதுவாக இது டையல்கடிகல் மெட்டீரியலிசத்துக்கு எதிரான ஒரு Supernaturalism அல்லது Preternaturalism ஆக கருதவும் இடம் உண்டு. METATA PHYSIKA என்ற ஜெர்மன் மூலப்பதமான இது மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளும் உயர்வகை ரியலிசம். பொருட்களின் ஸ்தூலத் தன்மையான பௌதீகத் தோற்றம் முதன்மையாகவும் அதைச் சுற்றிச்சுழன்று உற்று உணரும் மனித ஞானத்தை இரண்டாம் பட்சமாகவும் ஏற்றுச்சொல்லும் ஒரு மனோதத்துவ ஆன்ம விஞ்ஞானம் இது. முழுக்க முழுக்க அறிவியல் பார்வை கொண்ட இதன் தளங்களில் தமிழில் முதன் முதல் சோதனை செய்தவர் பிரேமிள். இக்கடினமான கலையில் உலக அளவில் ஒரு சிலரே வெற்றி கண்டுள்ளனர். எனவே "That man is a fox" is a metaphor, but "that man is like a fox" is a Simile என்ற உவமான உவமேய பள்ளி இலக்கணங்களை பிரேமிளுக்கு பொருத்திப்பார்ப்பது பாமரத்தனம். பிரேமிளின் படிமக் கவிதையில் ஒரு ஓங்கிய தன்கைங்காரத்தன்மையில் (Cooceit) ஆழ்ந்த அறிவுச்சிந்தனை அவருக்கேகூட தெரியாமல் பிறந்து இருக்கலாம். விஷயதார்த்தத்தின் கர்வத்தன்மையான இவரது கவிதைகள் புரியாமல் பலரும் திண்டாடக் காரணம் பல்துறை அறிவு அதளபாதாளத்தில் கிடப்பதுதான்.

இங்கே கொஞ்சம் ஆங்கிலத்தை முடிச்சுப்போட்டுப்பார்ப்பது அவசியம். எலிசபெத்கால கவிதைகளில் அலங்கார அடுக்குகள் சொல்ஜாலங்கள் தலைவிரித்தாடியபோது ஜான் டன் (John Donne) இயக்கம் அதை சிந்தனைக்கு திருப்பிவிட்டது, அரைத்த மாவையே திருப்பி அரைக்கும் இது வெறுப்பில் நிகழ்ந்த ஒரு மரபு மாற்றம்தான். படிமக்கவிதையின் தந்தையாக டாக்டர் ஜான்சன் இவரை அடையாளம் கண்டபோது 'He affects the metaphysics' என்ற டிரைடன் வார்த்தைகளில் கேலியாகக் குறிப்பிட்டார் தொடர்ந்து ஆங்கில மெடபிஸிகல் கவிஞர்களாக ராபர்ட் ஹெர்ரிக், (Robert Herrick) தாமஸ் கேரு (Thomas Carew) ரிச்சர்ட் கிரேஷா (Richard Crashaw) ஹென்றி வாகன் (Henry Vaughan) ஜியார்ஜ் ஹெர்பர்ட் (George Herbert) சர். ஜான் சக்லிங் (Sir. John Suckling) ஜான் கிளீவ்லேண்ட் (John Clcaveland) ஆப்ரஹாம் கவ்லி (Abraham Cowley) முதலியோர் வருகிறார்கள். இவர்கள் புதியசிந்தினைகளில் திளைத்து ஓசைநயம், ஒலிவடிவம் இவற்றின் முதுகெலும்பை முறித்து எறிந்தார்கள். ஆரம்பத்தில் அங்கதத்திற்கு (Satike) மட்டும் பிரயேகிக்கப்பட்டு படிப்படியாக மதமும் பாடு பொருளாகியது. தூரப் பறக்கும் கற்பனைகள். சுற்றி வளைத்து மூக்கைத் தொடும் எடுத்துக்காட்டுகள் புரிந்துகொள்ள முடியாத வார்த்தைக் கட்டுமானங்கள் இதன் விஷேசத்தன்மைகள். காதலை ஆன்மீகமாக்கிய ஜான் டன்.

> "John Donne
> Anne Donne
> Un- done

படிப்பகம்

padippakam

என்று தன் மனைவி அன்னிக்கு (Anne) சிறையிலிருந்து எழுதிய கடிதத்தின் முகவரியில் கவிதை எழுதியிருக்கிறான். இந்த மாதிரி ரிஷிமூல நதிமூலங்களில் பிரேமிளைத்தேடமுடியாது. பிரேமிளது தனிரகம். அவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவது வருங்காலத் தமிழ் மாணவர்களுக்கு தேவையானது.

சில சிறுபத்திரிக்கைகளை உதாரணம் காட்டி என்தவறு களை நேரிலியே சுட்டிக் காட்டினார். பிரேமிள் ஜர்னலிசத்தின் தொழில் நுட்பங்களை கலையம்சங்களை நிறையச் சொன்ன போது ஒவ்வொன்றும் என் நன்மைக்காக ஒரு மேதையின் முதல் சந்திப்பில் கிடைத்த மோதிரக் குட்டாகவே பட்டது. மாலை 5–00 மணியான போது எல்லோரும் பிரிந்தனர். கடைசியாக நான் மட்டும் திரும்பிப் பார்த்தபோது "கால சுப்ரமணியம் மட்டும் இல்லாவிட்டால் மிஸ்டர் மாரப்பன் இன்று நீங்கள் இந்த பிரேமிளை உயிரோடு பார்த்திருக்க முடியாது" என்று நன்றியுடன் நாத்தழுக்கக் கூறியது என் நெஞ்சில் அப்படியே பாய்ந்தது. அவர் கட்டியிருக்கும் இலக்கியகோட்டைகளுக் கெல்லாம் அஸ்திவாரம் பொருளாதாரப் போராட்டமும்தான் என்ற உண்மை அப்போதுதான் புரிந்தது. பிரேமிள் ஊருக்குப் புறப்படத்தயாராகவே, 'மீண்டும் சந்திப்போம்'! என்று கை குலுக்கு விடைபெற்றபோது.

"சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராதபக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை

எழுதிச் செல்கிறது (காவியம்) என்ற கவிதை அவரது ஒண்டி வாழ்க்கையின் சோகத்தை சொல்வதாகவே திருப்பித் திருப்பி என் காதில் ரீங்கரமிட்டுக் கொண்டிருந்தது. தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் உட்சபட்ச சாதனையை எட்டிய ஒரு மேதையை சந்தித்த நிறைவுடன் வெளியேறி பஸ்சை பிடித்து ஓரத்தில் உட்காந்தபோது நிலவின் வருகையால் நீலவானம் வெள்ளையாகியிருந்தது.

படிப்பகம்

padippakam

2. பெருமாள் முருகனின் இரட்டை நாவல்கள்

ஆரம்பத்தில் அலுங்காமல் குலுங்காமல் அசைந்து வந்ததேர் ஒரு முடக்கில் கிடைதட்டி நின்று விட்டபோது பெருமாள் முருகன் ஒரு பக்தி ஆவேசத்துடன் அலைக்கூட்டி தனிமனிதனாக வடம்பிடித்து ஓடவைக்க முயற்சித்திருக்கிறார் என்ற பட்சபாத மற்ற வாதம் ஒரே மூச்சில் தம்கட்டி ஒன்றன்பின் ஒன்றாக கொண்டு வந்த அவரது 'ஏறுவெயில்' 'நிழல்முற்றம்' - இரட்டை நாவல்களின் – வேகத்திலும் விறுவிறுப்பிலும் தெளிந்து கிடக்கின்றன. இன்னும் சரியாக குறிக்கவேண்டுமானால் ஒரு விதமான சேத்துவேஷம் போட்டுப் புரண்டு விசுவரூபத்தை காட்டியிருக்கிறார் – மொன்னை அரிவாளை வழக்கமாக தூக்காமல் சாணை தீட்டிய கூரான வாளை சுழட்டிக்கொண்டு வீரக்களத்தில் விளையாட இறங்கியிருக்கிறார்–என்றும் நீட்டிக் கொள்ளலாம். ஒரு சனி ஞாயிறு விடுமுறையில், வேப்பமரத்து நிழலில் கட்டில் போட்டு வரிசைக்கிரமமாக இருநாவல் களையும் வாசித்தபோது அதன் சங்கிலித் தொடர்ச்சிகள் என்னில் சிலப்பதிகாரம்- மணிமேகலை இரட்டைக்காப்பியங் களைத்தான் முன்னிறுத்தியது. இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் கதையை ஆளுக்குப் பாதியாக அறுத்துக் கூறு கட்டிக் கொண்டதைப்போலவோ–ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு பாடியதைப் போன்றோ – பங்குப் பாகப்பிரச்சினையோ, அசிரத்தையோ பெருமாள் முருகனுக்கு ஏற்படவில்லை. கதையிலும் சரி, களத்திலும் சரி–ஒட்டி உறவாடிய உற்றார் உறவினர்களும் ஓடிவிளையாண்ட ஊரும் கைகொடுத்திருக்கிறது. தன் சொந்த மண்ணை ஏர்கட்டி உழுததில் பெருமாள் முருகன் பெருவெற்றி ஈட்டியிருக்கிறார். இதில்தன்னோடு அண்ணன், அக் காள் அம்மா அப்பா, பாட்டன்–பாட்டிகளையும் இழுத்துவிட்டிருக் கிறது தெரிகிறது. ஒரு கொங்குக் குடும்பத்தின் பெற்றோர் உடன்பிறப்பு, வேலைக்காரி போன்ற நிலைத்த உறவுகளில் பணத்தின் வரவு எப்படியெல்லாம் வேலையைக்காட்டி விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது என்பது திருச்செங்கோடு வட்டாரத்தின் பின்னணியாக பெருமாள் முருகன் தரும் மறைமுக விமர்சனம். இவரது கண் முன்னால் கூட்டப்பள்ளி மண் கத்தக் கத்தக், கதறக்கதற புல்டவுசர் அரக்கனால் கற்பழிக்கப்பட்டு காலனி என்ற திருட்டுக் குழந்தையையும் பெற்று இக்கத்தில் இடுக்கிக் கொண்ட போது, இந்தக் கன்றாவியைக் காணச்சகிக்காமல்

படிப்பகம்

padippakam

தலையில் துண்டைப்போட்டு சந்தைப்பேட்டைமேடு விஜயா தியேட்டரில் நிழலுக்கு அன்டிய போது அங்கும் வெயில்தான் தகித்தது. நேராக மேற்கில் ஈரோட்டுக்கோ, கோயம் புத்தூருக்கோ, போகத்தெரியவில்லை. கிழக்கே திருச்செங் கோட்டுக்கோ, சேலத்துக்கோ, சென்னைக்கோ சடீரென்று பறந்துவிடமுடியுமா?.. இந்த இடைப் பகுதி – in between-தான் 'நிழல்முற்றம்'. காலங் காலமாக காப்பாற்றிய பூமி-கரைசேர்த்து வைத்திருந்த பிதுராஜித சொத்துக்கள்-பறிபோனபின் வெளியில் எட்ட இருந்து பார்க்காமல் மேடையின் உள்ளே ஓரத்தில் நின்று பிராமிட்டையும் எடுத்துக்கொடுத்து நாடகத்தையும் ஓட்டி யிருப்பதைப் போல் செயல்பட்டிருக்கும் பெருமாள் முருகனின் இந்தப் புதிய யுக்தி தமிழ்நாவல்களுக்குப் ரொம்பவும் புதுசு தான் அமைப்பு மாறும் போது அகராதி விரிவடைவதில்லை. தமிழ்அகராதி நவீனப் படுத்தப்படும் போது நிச்சயம் பெருமாள் முருகனின் சில கண்டு பிடிப்புச் சொற்களை சேர்த்துத்தான் தீரவேண்டும்.

ஆ. ஷண்முகசுந்தரத்தின் அடியொற்றிய கொங்கு நாவலா சிரியர்களான கு. சின்னப்ப பாரதி, சி. ஆர். ரவீந்திரன், க. சுப்ரமணியன், சூர்யகாந்தன், இரா. வடிவேலன், விட்டல்ராவ் ஜி.சித்தார்த்தன் வரிசையில் பெருமாள் முருகன் வந்தாலும் அவர் களிடமிருந்து கத்தரித்துக் கொண்டும் பிற பிரபல தமிழ் நாவலாசி ரியர்களிடமிருந்து வெகுதூரம் விலகியும் இவர் நிற்கிறார்.கொங்கு நாவல்கள் தமிழில் வித்தியாசமான ஒரு இனிமையை பெறுவதற்கு ஆர்.ஷ. வின் கெட்டியான அஸ்திவாரம் மட்டுமல்லாமல் அதன் கிராமங்களின் மண்வாடையும் ஒரு மூலகாரணம். அளவில் ஓங்கி நிற்கும் கரிசல் இலக்கியங்களில் நீர்வரட்சியைத் தவிர இதர கரிசனைகள் கிடைப்பதில்லை. தஞ்சை கிராமங்களின் வயல்வாசனையை சி. எம். முத்து தனது 'நெஞ்சின் நடுவே' 'கறிச்சோறு' நாவல்களில் தன்னை மீறிச் சிறப்பாகச் செய் திருக் கிறார். ஆர். ஷண்முகசுந்தரத்தை கி. ராஜநாராயணனோடு ஒப்பிட்டு பூச்சாண்டி காட்டி அற்பசந்தோஷமடைவது பாதி வயிறு தின்றுவிட்டு பத்தாதற்கு பச்சைத் தண்ணீரை 'மொடக் மொடக்' என்று குடித்த பரம்பரை ரசனைப் பஞ்சத்தைதான் காட்டுகிறது. ஆர். ஷண்முகசுந்தரத்தை தாமஸ்ஹார்டிக்கு முன்னால் நிறுத்ததிரணியில்லாமல் தமிழ்த் தூசிகளுக்கு முன்னால் நிறுத்துவது குண்டுசட்டிக் குதிரை விமர்சன வறட்சியன்றி வேறென்ன?ஹார்டிடோர்சஸ்டர் மண்ணையே எழுத்தாக்கியதால் தான் அவன் ஆவி அங்கேயே திரிகிறதாக இன்றும் கூறுகின்றனர். ஆர். ஷ–வுக்கு 'இந்தா பிடி' என்று கையில் திருவோட்டைத்தான் திணித்தது தமிழ்நாடு. உலகின் எந்தப் பெரிய நட்சத்திர நாவலாசிரியர்களும் நிலத்தின் பூலோகத்தன்மையை, ஒரு குறிப்பிட்ட வட்டார வாழ்க்கையின் விசேஷத்தை இவர்களைப் போல் தோண்டி பேச்சு இலக்கிய மாக்கியதில்லை. ஒரு வெங்கமேட்டுச்சந்தையும், (நாகம்மாள்) எட்ஜான் ஹெத்தும். (Edgon Heath – in 'THE RETURN OF THE NATIVE') உலக இலக்கியத்தில் என்றும் நிலைத்திருக்கும் அதன் ஆசிரியர்கள் பெயர் மறந்துவிட்டால் கூட. இவர்கள் கமிட்டி

படிப்பகம்

padippakam

முடிவு செய்யும் உலகின் விலையுயர்ந்த பரிசுகளையோ குருட்டாம் போக்கான வாசக கும்பலையோ கொண்டவர்கள் அல்ல. இப்படித்தான் ஒருகாலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் உறுப்பினராக இருந்தால் ஜெயகாந்தனும் சுந்தரராமசாமியும் அலக்காகத் தூக்கப்பட்டு பிறகு தொப்பென்று கீழே போடப்பட்டார்களே ஒழிய, இவர்களது இலக்கியம் என்று அல்ல

இவர்களது படைப்பில் பிரச்சாரவாடை இல்லையென்றாலும்கூட நாவல்களைப் பொறுத்த வரையில் வடிவமோ, கணமோ இம்மிகூட தென்படாதது பரிதாபந்தான் இருக்கிறது என்றால் 'ஒரு காலத்தில் இவங்க நம் ஆளுங்கைய்யா' - என்ற தி.க சி பாணி வரட்டுசப்புக்கட்டுத்தான். சுயநலத்திற்காக இன்று 'இந்தியம்' 'தேசியம்' மாயைகளைத் தழுவிக் கொண்ட இவர்கள் முதல்தரமோ, கலைஞர்களோ கிடையாது என்பதை கா. நா. சு. அன்றே தயங்கித்தயங்கி பட்டியலில் அடித்தும் சேர்த்துமிருக்கிறார். சந்தேகத்திற்கின்றி இவர்கள் இரண்டாந்தர எழுத்தாளர்கள்தான் - டால்ஸ்டாய் / புதுமைப்பித்தனின் மட்ட/மலின பாதிப்புகள்தான் என்பதை பாமர வாசகனுக்கு புரிய வைப்பது கடினம். ஒரு கால கட்டத்திலிருந்து அடுத்ததற்கு நகரும்போது பிறமொழிப் படைப்புகள் கருத்திலும் நடையிலும் முந்தையதைவிட ஸ்திரத்தன்மை கூடியிருக்கும்போது தமிழின் துரதிஷ்டம் அதை இழந்துவிட்டிருக்கிறது. உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவிகள் வானத்தை பிடிக்கமுடியாது என்பதற்கு இவர்கள் தமிழ்சாட்சிகள். பண்டிதர்கள் தாரைதப்பட்டைகளுடன் பாடைகட்டித் தூக்கிச் சென்று சுடுகாட்டில் வைத்தபோது பாய்ந்து சென்று காப்பாற்றிய புதுமைப்பித்தனைப் போல் கட்சிக்காரர்களிடமிருந்து தமிழைக் காக்க இன்று யாரும் இல்லாதது வருந்தத்தக்கது. ஒரு கும்பலோ/கூட்டமோ தரத்தை நிர்ணயித்துவிட ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கும் ஜனநாயக அரசியல் அல்ல. இலக்கியம் 'வாழையடி வாழையாக' வரும் எவனோ ஒரு வாசகன உணர்ந்து சொல்வது...

தொண்ணூறுகளின் துவக்கத்தில் தமிழ்நாவல் இலக்கியத்தில் பெருமாள்முருகன் பெயர் பெரிதாக தெரிந்தபோது "அய்யய்யோ ... ஒரே அபத்தம் அசிங்கம்.... ஆபாசம் என்று சிலர் கண்மூடி காதுபொத்தி காரி உமிழ்ந்தனர். சம்பவங்களைப் கோர்த்துக்கொண்டு துப்புக்கெட்டாற்போல் எழுதுகிறார். ஜாதி வெறியர் ... திராவிட எதிர்ப்பாளர்... என்ற எரிச்சல் மத்தாப்புகள் எகிறிப் பொறிந்தன. ஊன்றிக் கவனித்தபோது தான் அது யதார்த்தம் என்று தெரிந்தது. பொய்யை பூசி மெழுகியிருந்தால் இந்த இயாகோவின் Motiveless malignity-க்கு பலியாகியிருக்க மாட்டார்...

நினைவோட்டக்கலை ஜாய்சின் **Ulyssus**-க்கு முன்னே ஹார்டியின் கடைசி நாவலான **Jude the Obscure**-ல் வெளிப்பட்ட போது டோரதிரிச்சர்ட்சன் (Pointed Roofs), விர்ஜ்னியா வுல்ப் (MRS. Dalloway) முதலியோர் அதற்கு தூபமிட்டிருந்தனர்... மாக்சிம் கார்க்கியின் **'அர்த்த மனோவ்'** நகுலனின் **'நினைவுப்**

படிப்பகம்

padippakam

பாதை' நீலபத்மநாபனின் **'பள்ளிகொண்டபுரம்'** – இவ்வுக்திக்கு சில சிறந்த உதாரணங்கள். ஆர். ஷண்முக சுந்தரத்தின் **'அழியாக் கோலம்'** முதல் அத்தியாயத்தில் சாமியப்ப கவுண்டர் ஒரு பகலும் இரவுமாக இருபத்திநாலு மணி நேரம் ஆல மரத்தடியில் அப்படியே கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்து மனைவி மாரக்காளும், மகள் முத்தாயாளும் வற்புறுத்தியும் சாப்பிடாமல், பேசாமல் முந்தைய முப்பத்திரெட்டு வருஷ வாழ்க்கை நிகழ்வுகளை மோனத்தில் அசைபோட்டுப் பார்ப்பது இக்கலைக்கு வளம்சேர்க்கும் தலைசிறந்த தமிழ்ப் பகுதிகள். இந்நாவலில் சினிமாத்தனம் இருப்பதாக குத்து மதிப்பிடுவது குருட்டுத்தனம். ஆர். ஷண்முக சுந்தரத்தின் கைவண்ணம் புத்துயிர் பெற்றிருப்பது 'அழியாக் கோலம்' நாவலில்தான் என்பது சிட்டி – சிவபாத சுந்தரத்தின் துணிபு. தகழியின் **'செம்மீனை'** இந்தியாவில் பத்தாது என்று வெளிநாடுகளிலும் தூக்கிக் கொண்டு காவடி ஆடியிருக்கிறார்கள் ஏதோ இந்து – முஸ்லீம் ஒற்றுமையை உடனடியாக நிலை நாட்டிவிட்டதுபோல்' அடிப்படையில் அது கருத்தம்மாவின் ஒண்ணாநம்பர் சதைக்கதை. பஷீரின் **'பாத்துமாவின் ஆடு'** **'பால்யகால சகி'**, **'எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது'** நாவல்களுக்குப் பக்கத்தில் நிற்கக்கூட அருகதையற்றது தகழியின் செயற்கைப் பூச்சுக்கள்... ஒரு காலத்தில் நோபல் பரிசு பெற்றதற்காக தாகூரின் மிஸ்டிசிச பிராண்டுகளை இன்னும் நாம் சுமந்துகொண்டுதான் திரிகிறோம். ஆர். ஷண்முக சுந்தரமும் வைக்கம் முகமது பஷீரும் பிரபலமாகாத இந்தியாவின் முதல் தரங்கள். இவர்களை குறுநாவல் வகையறாக்களில் அடைக்கும் அரைவேக்காட்டு குட்டிச்சாத்தான்கள் எர்னஸ்டு ஹெமிங் வேவின் நோபல் பரிசு பெற்ற **'Old man and the sea'**க்கு எத்தனைப் பக்கங்கள் என்றாவது தெரிந்து கொள்ள வேண்டும்? பொச்சுப் பெருத்தவனுக்கு போடுங்கடா பருப்புஞ்சோற்றை என்ற போக்கு இலக்கியத்தை அரசியலாக்கிவிடும்.

சாத்தன் பாம்பு வடிவில் ஏடன் தோட்டத்திற்குள் புகுந்தது போல் நாகரிகம் பணவடிவில் புகுந்து ஒரு கிராமத்தையே நாசமாக்கும் போது சொறிபிடித்த கொட்டத்தலையை தெரியாமல் தின்று வேகும் வெயிலில் சொக்குத் தாக்கி விழுந்த செம்மறி ஆடுகள்போல் ஜனங்கள் தவிக்கிறார்கள். எங்கு போவது? என்ன செய்து கஞ்சி குடிப்பார்கள்? இந்த உலகம் எல்லோருக்கும் Utopia ஆகிவிடுமா! சட்டென்று சந்திரனுக்கோ, சுக்கிரனுக்கோ குடியேறிவிட முடியுமா? பூமியைச் சுரண்டிய மனிதன் அங்குமட்டும் வாலைச் சுருட்டிக்கொண்டு சும்மா இருப்பானா? வீம்புக்குச் சூரி விழுங்கும் இந்த தோசிக்காலன் போன இடம் உருப்பட்டிருக்கிறதா? எல்லாம் போனபின் இடத்தை காலி செய்ய வேண்டியதுதான். ஒவ்வொன்றையும் நினைத்து நினைத்து, நெக்குருகி, நெஞ்சு பொறுக்காமல் "ஓ"வென்று வாய்விட்டழுதிருக்கிறார். ஒரு ஊமைபோல் வெளியில் சத்தம் கேட்காமல், சில இடங்களில் அவை கவிதை யாகவும் துவைந்திருக்கிறது.

படிப்பகம்

padippakam

வீடும் காடும் விலைபோனதும் பொன்னு ஏறுவெயிலில் துடிதுடிக்கிறான். அளவில் சிறிதாயினும் அது அவனுக்கு அலக்ஷாண்டர் கட்டியாண்ட சாம்ராஜ்யம். வாழ்வின் மதிப்பீடுகள், விதிவசத்தாலா அழிக்கப்படுறது. காலனிகட்டு மானம்மட்டும் கூட்டப்பள்ளியின் பொன்விளையும் மண்ணை சிமெண்டால் மூடியது என்ற சமாதானம் திருப்தியளிக்க வில்லை. இதர காரணிகள் நியமிக்கப் பட்டிருந்தால் ஏற்றுக் கொண்டிருக்கலாம்...

'பொன்னு' கொங்குவேளாளர் குடும்பத்தில் கூப்பிடப்படும் செல்லப்பெயர். பொன்னான், பொன்னையன், பொன்னுப்பயன், பொன்னுசாமி... எல்லாம் ஒன்றுதான். மாரியம்மன் கோயிலைச் சுற்றிக்கொண்டு தொடரவிளையாட்டில் மாலைவரை சோறு குடிக்கவராத வேளைகளில் 'ஏ.. பொன்னு...' என்று தாய்மார்கள் இசைப்பது செத்தபாம்பு ராகத்துக்கு அடங்காது. 'கட்டித்திண்ணி' கருப்பட்டிவாயா. 'என்றுபுருஷனைத்திட்டிவிட்டு 'கண்டாரஒழி, கழுதைமுண்டை' என்று மயிரை இழுத்துப்போட்டு செமத்தையாக வாங்கிச்சாகும் தாயாரின் பாத்திரம் எதனின் எதிரொலியுமல்ல. குடிக்குஅடிமையாகிய தந்தையோ. ரெண்டும் கெட்டான். நொனையும் நோரான்டும் பேசினாலும் பாட்டன் முப்பாட்டன் தலைக்கட்டாக இறைத்து விளைந்த கிணறு மூடும்போது பொன்னுவின் தாத்தா தேசத்தியாகிக்களைக்கூட தூசியாக்கிவிடுகிறார். பாட்டி பரவாயில்லை, ஒட்டன் உப்புலியன் களுக்கு கொடுத்து வாங்கும் கருத்தாளியாக வேலையுண்டு வெட்டியுண்டு என்று இருக்கிறாள். அக்காள் கொத்துவேலைக்கு (அதாவது கட்டிடசித்தாள் வேலைக்கு) போனவள். ஒன்னுந் தெரியாத பாப்பாளாக இருந்துவிட்டு மேஸ்திரியிடம் ஒடித் தாழ்ப்பாள் போடும்போது சிக்கிச் கொள்கிறாள். டாக்ஸி பார்டர் ரவுடிப்பசங்களுடன் சேர்ந்து கெட்ட அண்ணன், லாரி டிரைவர் பெரியப்பா, பெரியம்மாள் குடும்பவட்டங்களாக பொரிந்து கொண்டாலும் ஏன் நேர்க்கோடு இழத்தாற்ப்போல் ஒரே ரோஷமாகப்பேசுகிறார்கள்.?

'மணி'-யின் ஆவல் மனதைத்தொடுகிறது. மனிதர்களைவிட இதற்கு மண்ணின்மீது பாசம். காலால் பறித்துப்பிராண்டுகிறது. ஊத்து. வதைக்குடித்துவிட்டு அங்கேயே காவலுக்குப் படுத்துக் கொள்கிறது. இதன் தொழிலுக்கும் வேட்டுவைக்கப்படுகிறது. உயிர்விட்டபோது பொன்னு இறுதிமரியதையுடன் அதை அடக்கம் செய்கிறான். நாயைப்பதிவு செய்த ஆசிரியர் நன்றிக்குரிய வராகிறார். இப்படித்தான் விட்டல்ராவின் போக்கிடத்தில் ஊரே அழிந்தபோதும் கரியன் என்ற நாய் தன் எஜமானி பேச்சிவீட்டையே சுற்றிக் கொண்டிருந்துவிட்டு அவளிருக்கு மிடத்துக்கே கடைசியில் வந்துவிடுகிறது.

காரவேலை மோகத்தில் கருத்திழந்த அக்காள் செந்திலுடன் ஏற்காட்டுக்கு ஓடிவிடுகிறாள். இவன் ஜாதிப்பறையன் என்பதால் போலிசுக்குப் பணம் தந்து பட்டைஇழு இழத்துவிடுகிறார்கள். பி பிபி.டும்.டும்: என்று சேர்த்து வைக்காமல் இரண்டாந்தாரமாக

படிப்பகம்

padippakam

தாட்டிவிடுகிறார்கள். காலம் ஜாதிகளை உடல்மூலம்தான் இணைக்க முயல்கிறது. சுடுகாட்டுப் பிரச்சினையிலும் பல பட்டரை காலனியாருடன் ஊர்க்கட்டுப்பாடு. கூட்டப் பள்ளி மாரியம்மன் கோயில், 'சுவரை பஸ், லாரிகள் இடித்துவிட கட்டயாரும் முன்வருவதில்லை. பணம் சேர்த்தலே கடவுள் வழிபாடு என்றானபோது வெறுங்கல்லால் கோயில்கட்ட யாருக்கு அக்கறை?

நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சியாக நாவலில் இடம் பெறுவது குழிவெட்டியபள்ளத்தில் ராமாயி உடல்வியாபாரத்திற்கு நிற்பது தான். ஒருகாலத்தில் அஞ்சாங்கல்லும், பாண்டிக்குழியும் விளையாண்ட ஆருயிர்த்தோழியல்லவா — இதற்கு முன்னறிவிப்பு அவள் தகப்பனே இவளுக்கு தரகனாக மாறிவிடுவதில் தெரிந் தாலும் முரளியுடனும் நண்பனுடனும் இவன் போனதற்கு என்னசொல்ல,... பொன்னு பெரியமனிதன் ஆகிவிட்டான் மீசை முளைத்துவிட்டது. பொம்பிளை தேவைப் படுகிறது. திருச்செங் கோடுமலை அர்த்தனாரீஸ்வரரும் – புஷ்பகவிமானத்தில் கணவனுடன் வானுலகம் சென்ற கண்ணகி நின்றஇடத்தில் தோன்றிச்சிரித்த சந்திரனும் சாட்சிதான் இக்காட்சிக்கு. ஆள் அடையாளம் தெரிந்து திக்குழி இறங்கியது போன்று தாக்கி பின்பல்டி அடித்த போதுதான் – பீச்சியபாலை கைதவறி கீழே கொட்டியபோதுதான் பெருமாள்முருகன் பிரகாசமாகத் தெரி கிறார். மார்மீதும் மடிமீதும் தோள்மீதும் துடைமீதும் தூக்கி வளர்த்தவளையா... தாயையா,... புணர்வது? அய்யய்யோ... இதற்குப் பதில் ஒரு லிட்டர் பெட்ரோலை தலையில் ஊத்திப் பெருத்தி உயிரை மாய்த்துக் கொள்ளலாமே'... இது தெரியாது நடந்த பிறகு ஒடிபஸ் கண்களை பிடுங்கிவீசிவிடுன்றான் தி. ஜானகிராமன்' மோகமுள்களில் செய்த தவற்றை ஏறுவெயிலில் பெருமாள் முருகன் செய்யவில்லை என்பதை ஒரு கைதேர்ந்த கலைஞனாக்குகிறது. இதில் எதுயதார்த்த மனம்? அவசங்கள் பாலுணர்வுக்கு எல்லாச் சமயத்திலும் கூச்சமாக இருப்பதில்லை. ராமாயி பாத்திரத்தை வைரக்கல்லாக்கியபோது அக்காளை மட்டும் தப்பிக்க வைத்து புனிதமாக்கி ஏன் பித்தளையாக்கியிருக்கிறாள். இது ஓரவஞ்சனையல்லவா... ஒரு பக்கத்தீர்ப்பல்லவா? இங்கே '**தலித்திய**' 'பெண்ணீய' வாதிகளின் வசவுக்கு ஒரேசமயத்தில் ஆளாகிறார்.

கவிதை எழுதித்திரிந்த **காரல்மார்க்ஸ்** பொருளாதாரத்தில் நுழைந்து மேதையாகக்காரணம் இதே வறுமைதான். ஒரு Struggle for existence தான் எல்லா இயக்கங்களுக்கும் முக்கிய காரணம். கற்பு நிலமான்யம் வளர்த்திவிட்ட மூடத்தனத்தின் உச்ச பிற்போக்குத்தனமும் கடவுள் தத்துவத்தின் உடன்பிறப்பு மாகும். இது அரசியலின் அடிமைப்பெண்ணாகவும், பணத்தின் வேலைக்காரியாகவும் மாறி சமயங்களில் சாகசவேலைகள் செய்கின்றது. கிராமங்களில் பெரியபண்ணையக்காரனிடம் கூலிக்கு ஊழியம்கட்டும் கீழ்ச்சாதிக்காரன்தான் அடுத்தவன் பொழியைப் புரட்டவும், வாய்க்கால் வரப்புகளைச் சேர்த்தும் சிறுவிவசாயிவயிற்றில் மண்ணைப் போடுகிறான். இந்த நிலத்தின்

படிப்பகம்

padippakam

உட்பூசல்களும் பகையும் தலை வாலை விழுங்கி தன்னையே அழித்துக் கொண்டதுபோல், அண்ணன், தம்பியைக்கூட பிரித்துக் குத்துக் கொலையிலும் கோர்ட்டிலும் நிறுத்தியிருக்கிறது. அரசியல் சமூக அமைப்புகள் கருப்பு சிவப்பு கொடிகளையும் கொள்கைகளையும்தான் மாற்றிக் கொள்கின்றன. மற்றபடி அதிகாரம்' தனிமனிதனுக்குத்தான் இதுநாள்வரை தலை வணங்கியிருக்கிறது. மாக்கியவல்லியின் சித்தாந்தப்படி எல்லாமே ஒரு 'Power pulitics' தான்.

நாவலின் கதைசொல்லவேண்டுமானால் முழுவதையும் அப்படியே திருப்பித்தான் எழுதவேண்டும். அணைக்கட்டு திட்டத்தில் ஊர்கள் மூழ்கியபோது க. சுப்ரமணியன் 'வேரும் விழுதும்' மூலம் வேதனையை தெரிவித்தார் சர்க்கார் சம்பளத்தையும் வாங்கிக்கொண்டு. டேனிஷ்பேட்டை கிராமம் இரும்புச்சுரங்கத்திற்காக தத்து எடுக்கப்பட்டபோது விட்டல்ராவ் 'பேக்கிடம்' வழியாக ஆசிரியாரக அனுதாபம் தெரிவித்தார். சா.கந்தசாமியின் 'சாயாவனம்' காட்டையழித்து சர்க்கரை ஆலை நிறுவியவிபரம். பெருமாள் முருகனின் 'ஏறுவெயில்' கூட்டப்பள்ளி குக்கிராமம் காலனிக்கு இரையானபரிதாபக்கதை. குடிசைகளைப் பிய்த்து எறிந்து குண்டுகுழிகளை நிரவி, கான்கிரிட்போட்டு கதவு, நிலவு கண்ணாடி ஜன்னல்களுடன் ஒரு கட்டிடம் எழுப்பி காம்பவுண்டுக்குள் ஒரு குரோட்டன்ஸ் வைத்துவிட்டால் மனிதன் முன்னேறி விட்டதாகவும் நன்றாகப் பிழைத்துக் கொண்டதாகவும் பூரித்துப் போய்விடுகின்றான். அந்த சொர்க்க மாளிகைக்குள்ளேதானே பூசையறையையும்- பொச்சுக்கழுவும் கக்கூஸையும் ஒருசேரவைத்திருக்கிறான். பத்தாதற்கு மாடிமேல் மாடியும்... டி வி. ஆன்டனாக்களும்... மலத்தை இலைபோட்டுத் தின்னும் மாயாஜாலப் போதையான இந்த வீடுகட்டும் வேட்கையில் அடிமட்டமனிதன்கூட ஆகாயவிமானத்தில் ஏறிக்கனவு காண்கிறான். கையில்மட்டும் காசிருந்தால் கல், மண், இரும்பு, செங்கல், புளுபிரிண்ட், மேஸ்திரி கான்ட்ரக்டுகள் பறந்தடித்து ஒடிவந்து பத்து நாளில் கிரகப்பிரவேசமும் நடந்துவிடும். 'பாரதி இல்லம்' நிமிர்ந்து பாரதியார் தம் தலைப்பாகையுடன் சிரித்துக் கொண்டு வீட்டுக்கு காவல் இருப்பார். அரசின் வீட்டுவசதி வாரியங்கள் ஒட்டுமொத்த விளை நிலங்களையும் இயற்கையையும் இப்படித்தான் அழித்து சுகாதாரச் சீரழிவை வளர்த்து விடுகின்றன. சுற்றுச் சூழலியம்/ சமீபத்தில் இலக்கிய மார்க்கெட்டில் 'Leading' ஆக ஓடிக்கொண்டிருக்கிறது. விரைவில் வெள்ளி விழா கொண்டாடலாம்.

நகரங்களின் கிராம ஏஜெண்டுகளான- இந்தி எதிர்ப்பு போராட்ட மொழிப்போர்த்தியாகி தி.மு.க மொண்டிமாரி, அ.தி.மு.க. பழனிச்சாமி இருவரும் அசல் நாட்டு நடப்புகள். வீரபாண்டியார் உண்மைநபர். அமைச்சர் சின்னையன் ... ...? வயிற்றுப் பிழைப்புக்காக சுரண்டினாலும் முழுக்கத்துண்டித்துக் கொள்ள முடியாத பாவ ஜீவன்கள் இவர்கள். ஓட்டு வேட்டையின் போது 'மாண்புமிகுகளுக்கும்' மாவட்டச் செயலாளர் களுக்கும்' இவர்கள் தயவு தேவையல்லவா? ஜனநாயகத்தை கட்டிக்காக்க

படிப்பகம்

padippakam

ஐந்தாண்டுகளுக்கு முன்னமே கூட தேர்தல்கள் அவதாரம் எடுத்தே தீரும் எந்த ஷேசன் தடுத்தாலும்.

இது எம்.ஜி.ஆர் யுகம். அண்ணாவின் வாரிசானாலும் பெரியாரின் பக்தரானாலும் திராவிடத்தின் தந்தை எம்.ஜி.ஆர் தான். தமிழகத்தைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்ட சக்கிலியர்களுக்கு குலதெய்வம் போல் உண்மையான 'மதுரைவீரன் எம்.ஜி.ஆர். தான். காதலி 'பொம்மி' பானுமதிதான். பிறஜாதி ஏழை எளியோர்க்கு 'நாடோடி மன்னன்' 'ஆயிரத்தில் ஒருவன்' 'எங்கவீட்டுப்பிள்ளை' 'விவசாயி' 'மீனவநண்பன்' இப்படி வாரி வழங்கும் பாரிவள்ளல், பொன்மனச்செம்மல். புரட்சித் தலைவருக்கு குழந்தை இல்லாததால் அவர் சொத்துக்கள் தங்களுக்குத்தான் சொந்தம் என்பது அவர்கள் ரத்தத்தில் ஊறிய சித்தாந்தம். 'வவரன்' சிவாஜிக்கு ரசிகர் மன்றங்கள் கூடகம்மிதான். 'செவாலியர்' விருதெல்லாம் யாருக்குத் தேவை? சத்துணவுத்திட்டம் மகத்தான ஐந்தாண்டுத் திட்டம்தான். தந்தவர் சரித்திரநாயகன் எம்.ஜி ஆர். அல்லவா? இதை எதிர்த்து எந்த எதிர்க்கட்சியாலும் ஒன்றும் வால்வீச முடியாது. தமிழகத்தின் சினிமா அரசியலை அற்புதமாக அலசியுள்ளார். பெருமாள்முருகன். இதுவும் நாவலுக்கு புதிய பரிமாணந்தான்.

கூட்டப்பள்ளி சிறுசுகளுக்கு கிழக்கே திருச்செங்கோட்டு மலையில்தான் சூரியன் உதிக்கிறது என்பது சொல்லித்தராத பூகோளப்பாடம்... பெருமாள்முருகன் பாரதிதாசனைப் படித் திருப்பார்போல் தெரிகிறது.

ஏ வானத்துப் பெரு நிலவே
வந்துவிடு என்னோடு
மோனப்பெரு வெளியில்
மூழ்கிடுவோம் நெடுங்காலம்.

என்று நிலவு பாலாய் கொட்டுவதை பவுர்ணமிகளில் ரசித்திருக் கிறார். நீச்சல் தெரியும் என்பதை 'தொப்' என்று கிணற்றில் குதித்து இருநாவல்களிலும் நிறுபித்திருக்கிறார். திருச்செங் கோட்டுத் தேரின் ஒருமாத விஷேத்தையும் ரதவீதிகளையும் மலையடிவார அமைப்பையும் குளம் நிரம்பி மழைக்காலங்களில் கடைபோயி குட்டைகளை அடைவதையும் உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையையும் யதார்த்தமாக காண்பித்தவர், சங்ககிரி ரோட்டின் சித்தாராமபாளையம். நாமக்கல் ரோட்டின் குமர மங்கலம் மற்றும் சேலம் வேலூர் ரோட்டின் முதல் கிராமங் களையும் தொட்டிருந்தால் ஏறக்குறைய திருச்செங்கோடு வட்டார வாழ்க்கை முழுமை பெற்றிருக்கும். நிலத்தில் கிடைத்ததை சுருட்டிக்கொண்டு பைனான்சில் போட்டு முடக்க- அந்த ஆசைக்கப்பல் திவாலாகி கவிழ்ந்ததும் கன்னத்தில் 'கொர்' என்று கைவைத்துக் கொள்கிறார் தந்தை. தாய் சிறுவாடு சேர்த்து வைத்ததை காலனிக்காரிக்கு கந்துகொடுக்க கபக் என்று அவள் விழுங்கி கைவிரித்து விடுகிறாள். உழைப் பில்லாத உறிஞ்சல்தொழில் நஷ்டத்தை வேறு இடத்தில் பிடித்தகாடு ஈடுசெய்கிறது. பிணந்திண்னிக் கிணறாக

படிப்பகம்

padippakam

இருந்தாலும் பின்னால் நல்ல விலை போகிறது நிலம். 'ரிக்' வாங்கிவிட்டு ஆந்திரா, ஓரிசா வடமாநிலங்களில் நல்ல காசு கிடைக்கிறது. லாரி தறி, இத்யாதி தொழில்களில் விவசாயம் இடமாற்றம் செய்யப்பட்டு, விளைநிலங்கள் வீடாகவும் வியாபாரக்கிடங்காகவும், புதுவடிவம் பெறுகின்றன. சட்டி அகப்பைகள் கம்பு சோளச்சோறுகள் மாறி கோழிக்கறி, கொத்துப்புரோட்டா, குருமா- என்ற ஓட்டல் சாப்பாட்டு மோகம் வலுக்கிறது. கள்ளு, பட்டை சாராயங்கள் தள்ளப்பட்டு பிராந்தி, விஸ்கி, பீர், ரம் என்று பாட்டில்கள் விளையாடுகின்றன. இத்துணைச் சீரழிவிலும் சாவடியில் தாயம், சீட்டாட்டங்கள் காசு கட்டி நடககின்றன. கோயில் நோம்பி கொண்டாட்டங் களும். தொத்திக் கொண்டு தொடர்கின்றன.

திராவிட இயக்கத்தின் இருபெரும் கொடைகள் அடுக்குப் பேச்சும் மேடைநாடக உற்பத்தியும். பெரியாரின் மழலைநடை கா.நா.சு வை காந்தமாய் கவர்ந்திருக்கிறது. இவற்றில்தான் நாம் திராவிட இலக்கியத்தை அகழ்ந்தெடுக்க வேணடும். சி என். அண்ணாத்துரை தொடர்ந்து ஏ வி.பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி வரை அடுக்குத்தமிழ் அழகுபெற்றிருக்கிறது. அதறகுப்பின் அது வாழவில்லை என்பதை இன்றைய மவினங்கள் நிரூபிக்கின்றன இது சினிமாவிலும் பூந்து தமிழ்ச் சமூகத்தை சீரழித்து நிறுத்தியிருக்கிறது. கண்ணதாசனும் வைரமுத்தும் எம்.எஸ். விஸ்வநாதனும்' இளையராஜாவும், டி எம் சௌதராஜனும் எஸ் பி பாலசுப்ரமணியனும் தமிழ சினிமாவுக்கு தேவையற்றவர்கள் திருமண நோடீசில கருவைக்கதாநாயகன் வேலுச்சாமியையும் கூடடப்பளளி கதாநாயகி வேலுச்சாமியையும் ஜோடி சேர்த்து 'மாட்டிக் கொண்டார் மாப்பிள்ளை' 'ராசமணி மடியில்' குவா! குவா!' படங்களைத் தருகிறார்கள். அசல் நடப்பை ஒட்டிய ரசனையல்லவா? அந்தக்கால 'காகிதப்பூ' 'ஓரிரவு' 'வேலைக்காரி' 'இழந்தகாதல்' 'ரத்தக்கண்ணீர்' நாடகங்கள் பெரியாரின பகுத்தறிவை புயல வேகங்களில் பட்டி தொட்டிகளில் பரப்பியவை. இச்சீர்த்திருத்த இயக்கம் தீவிரயாக வேலை செய்ததின் விளைவுதான் இன்று பிராமணர் களை விட மற்றவகுப்பார் படிப்பிலும் வேலை வாய்ப்பிலும் முன்னேறியிருப்பது. ஒரு ஏழை பிராமணன திருமணத்தின் தாலி கட்டு முடிந்ததும் மேடையில் தேங்காயைத் திருடி பஞ்சகச் சத்தில் மூடி பூணூலை இறுக்கிக் கட்டிக்கொண்டு பிறகு வேலைக்காரனிடம் சிக்கிக் கொண்டு அந்த 'அம்பி' / 'அய்யரின் வேஷம் வெளியானதும் கொள்ளென்று சிரித்து குடுமி அவிழ ஓடுவது அக்கால நாடகங்களில் தலைசிறந்த காமெடிக்காட்சிகள். ஆரிய அழிப்புப் போராட்டத்தில் திராவிடத் தலைவர்கள் கையாண்டஆயுதங்களில்நாடகமும்ஒன்று.கல்லாங்குத்தில் இன்றும் 'சேலம் மாவட்ட சங்கரதாஸ் சுவாமிகள் நாடக நடிகர் சங்கம்' சென்னை தென்னிந்திய நடிகர் சங்கத்துக்கு அடுத்துப் பெரியதும் அதனுடன் இணைக்கப்பட்ட பெருமையும் கொண்டது. இதில் சிவாஜிகணேசனுக்கு ஜோடியாக நாடகத்தில் நடித்த நடிகை களும் இன்று கிழவியாகி கலைக்கு உழைத்ததற்காக OAP பென்சன் வாங்கிக்கொண்டு இருக்கின்றனர். 'மந்திரிகுமாரி' படம்

படிப்பகம்

padippakam

சேலம் மாடர்ன் தியேட்டர்சில் தயாரான போது ஏற்காட்டில் அதன் 'சூட்டிங்' பார்க்க பல ஆசாமிகளும் கட்டிச் சோற்றுடன் போய் வாயில் ஈ ஆடாமல் காத்துக்கிடந்திருக்கின்றனர். இதன் ஓதங்களை இன்னும் சேலம் பெரியார் மாவட்ட திருவிழாக்கால அமெச்சூர் நாடகங்களில் பார்க்கலாம், மாலா, ஜீவா, சந்திரிகா, மகாலட்சுமி, சித்ரா காஞ்சனா, சியாமளா, வசந்தி, சுமதி முதலிய நடிகைகள் இங்கே பிரபல கதாநாயகிகளாக வரலாறு படைத்திருக்கிறார்கள். இவற்றை சக்திவேல் கதை, வசனம் எழுதி வில்லனாக நடித்து இயக்கிய "மீண்டும் மணக்கோலமா?" நாடகத்தின் பின்புலத்தில் பார்க்க வேண்டும்... விதவை மறு மணத்தை வற்புறுத்தி வாழத்தான் வேண்டும் கதையாக இது இருக்கவேண்டும். கதாநாயகன் ரோலுக்கு 500 ரூபாய் என்றால் வில்லனுக்கு 750 ஏலத்தின் ரேட். ஏனெனில் கதாநாயகன் தொட்டுத்தான் அணைக்க முடியும் வில்லனுக்கு ஜாக்கெட்டை கிழித்து, சேலையை உரிந்து கதாநாயகியை கற்பழிக்கும் துச்சாதன பாக்கியமும் கூடுதலான கனவுசீன் பாடலும் கதை அதிகாரத்தை மீறித்தரப்படும் ஒன்று. நமது நாவலாசிரியர் மேனேஜர் பாத்திரத்தில் மட்டும் கௌரவக்தோற்றம் காட்டி விட்டு பொருளாளராக பொறுப்பு ஏற்று ஒதுங்கிவிடுகிறார். ஏறுவெயிலின் இப்பகுதிகள் நகைச்சுவை நிறைந்து காணப் படுவதுடன் நாடகம், மீதான ஒரு நக்கல் பார்வையையும் வெளிப்படுத்துகிறது.

CNC காலேஜ் ராகிங்கள், ஜட்டிபோட்டு அம்மாவிடம் வாங்கிக்கொள்ளும் கொச்சை வசவுகளில் நளினம் மிளிர்கிறது. ஆட்டு ஏவாரம் முடிந்து ஆயாசமாக தாத்தா வேட்டியை பாங்காக உறுவி தலை மாட்டில் வைத்துவிட்டு கோவணத்துடன் படுப்பது துணிமணி அணிவதின் சிக்கனத்தையும் சுகாதாரத்தை யும் எடுத்துக்காட்டுகிறது. இவன் ஆட்டுக்குட்டியை முன்னால் இழுத்துவர – தாத்தா பின்னால் தள்ளி முடுக்கிக் கொண்டு சந்தையிலிருந்து வீட்டுக்கு ஓட்டி வருவது— அடுத்த நாள் பதினஞ்சு கூறாக கறிபோவது.... போன்ற தினசரி அலுவல்களை கூர்மையாக கவனிக்கப்பட்டுள்ளன. காலனி பலபட்டறை ஒரு பகட்டு தேவடியாள் நாகரிகத்துக்கு ஒன்றுமறியாதவர்களை சுண்டி இழுத்துச் சிதைப்பது பூர்ஷ்வாவேசித்தனமும் – நிலமான்ய நேர்மையும் நேர்க்கோட்டில் சந்திக்கும் முரண். உழுதுண்டு பிழைத்த நிலவாழ்வில் ஓரளவாவது ஒற்றுமையும் அன்பும் ஓங்கியிருந்தது. இதில் கிஞ்சித்தும் கிடைக்கவில்லை. கைமாத்துக் கள் சரளமாக கிடைத்த காலம்போய் இன்று இரட்டை வட்டிக்குக் கூட கடன் கிடைப்பதில்லை.

'நிழல்முற்ற'த்தை ஏறுவெயிலை தாண்டிப் படித்தால்தான் பிடிகிடைக்கும். இது சந்தைப்பேட்டைமேடு ஸ்ரீவிஜயாதியேட்டர் வாழ்க்கையை மையப்படுத்தியிருக்கிறது. சினிக்கலான ஒரு எள்ளல்தொனி – யதார்த்தச்சித்தரிப்பு இவற்றில் பெ. மு. ஒரு படி உயர்ந்துள்ளார். ஒரு புதிய களம் கொண்ட தமிழ்நாவல் இது. ஜி. நாகராஜனின் விபச்சார உலகம்போல் ஒருவகையான ஆலமர வாழ்க்கை கிளைகிளையாக படர்ந்துள்ளது. ஒரு

படிப்பகம்

padippakam

கூடாரத்தின் கீழான பிழைப்புப் பிரச்சினைகளின் போராட்டம் இதில் ஒருமுகப்படுத்தப்பட்டு படம் பிடிக்கப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர் ஓரிடத்தில்கூட தன்னைக்காட்டிக்கொள்ளாமல் முழு அமாவாசை நிலவாக மறைந்துவிட்டிருக்கிறார்.

ஒரு பத்தாந்தர சினிமாக்கூட தமிழில் யதார்த்தமாக இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டு வாழ்க்கை முறைகள் கூட சினிமா ஜபர்திஷ்டையாக மாறிக்கொண்டு வருகிறது. எல்லாம் ஒரே பாடல்கள், சண்டைகள். இங்கே எது Film என்று யாருக்கும் புரியவில்லை. **புதுமைப்பித்தன்**, பி. எஸ். **ராமையா** கூட போக்கியத்தை தூக்கி எறிந்து விட்டு இதில் நுழையக் காரணம் காசு போதைதான். வயிற்றில் வளரும் சிசுவுக்குக் கூட தாயே "யப்பா!..." ரஜனி ஸ்டைல் கற்பிக்கிறாள். இந்த விபச்சாரக் கலையில் இந்தியாவில் **சத்யஜித்ரே** தவிர யாரும் கலார்தியாக வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை மராட்டிய நாவலாசிரியர் **காண்டேகரும் - சாந்தாராமும்** ஒரு வீட்டின் கதவைத்தான் தெரியாமல் தட்டிவிட்டு திருதிரு வென்று விழித்தார்கள் இவர்களது கலையென்றால் சொல்லுபவர்கள் ஷேக்ஸ்பியர் யார் என்று தெரியாதவர்கள். இந்திப்படங்களா... இன்னும் புராண காலத்தைய நீளங்கள். **ராஜ்கபூரின்** மூன்று பாகம் - இரண்டு இடைவேளைப்படமான சங்கம் முடியும் போது இரவும் விடிந்து கோழியும் கூவிவிடும். இருப்பினும் **எம். ஆர். ராதா** என்ற நடிப்புக் கலைஞனை தேர்வுசெய்துதான் தீரவேண்டும். **அண்ணாத்துரை,** சிவாஜிகணேசன் பாதிப்பு நிறையக்கிடக்கிறது. 'மக்களைப் பெற்ற மகராசி' 'முரடன் முத்து' போன்று யதார்த்தத்தில் - ஒரு ANTI - HEROIC தனங்களில் சிவாஜி ஆழம் பாதித்திருந்தால் ஒரு உலகக்கலை ஞனை, தமிழகம் பெற்றிருக்கும், அவரை தமிழ் சினிமா பயன் படுத்திக்கொள்ள தவறிவிட்டது! 'திருவிளையாடல்' – 'வீர பாண்டிய கட்டபொம்மன்'. இவைகள் ஒரே ஆர வாரிப்புகள். நமது இயக்குநர் திலகம் **கே.எஸ். கோபாலகிருஷ்ணன்** 'இயக்குநர் சிகரம்' **கே. பாலசந்தர்**, 'இறையருட்செல்வர்' ஏ. பி **நாகராஜன்** போன்ற கலைமேதைகள் மட்டமான மேடை நாடகங்களை கேமிராவுக்குள் அடக்கிய திறமைசாலிகள்தான். டி.வி. விளம்பர பாணி **மணிரத்னம்**, குமுதத்தில் வைரமுத்து பாணி புதுக்கவிதை படிக்கத் தெரிந்த **பாரதிராஜா** - இவர்கள் பெரிய டைரக்டர் களாகி தமிழ்ச்சினிமாவை வளப்படுத்தியவர்கள். ரோஷம் பொறுக்க முடியாவிட்டால் பல்லைக் கடித்துக் கொள்ள வேண்டியதுதான் வழி. இங்கே **ஸ்ரீதர்** என்ற கலைஞன்தான் தனது 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தில் மட்டும் சினிமா மீடியத்தை கொஞ்சம் கையாண்டுள்ளான், அதுவும் ஓரிரு பிரேம்களில். இது விமர்சனம் திராவிடப் பாரம்பரியத்தின் சினிமா இலக்கிய வாரிசுகளாக **அண்ணா, கருணாநிதி, ஜெயலலிதா.** இவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர்களாக வந்திருந்தாலும் – சினிமாவை கட்சிப் பிரசாரத்திற்கு பிரயோகத்திருந்தாலும் - தங்களை கலை மேதைகள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டதில்லை. குறை குடங்கள்தான் எதிலும் கூத்தாடிக் கொண்டு வெட்கமில்லாமல் முன் நிற்கின்றன. இந்த தொத்து நோய்கள் இப்போது டி.விகளை ஆக்கிரமித்துள்ளன.

படிப்பகம்

padippakam

"மருதமலை, மாமணியே ...." பாடலுடன், பூதன் பூனைக் கண்களுடன் நைந்து கிடப்பதை .. வெறிச்சோடிய தியேட்டர் சூழல் விவரிக்கின்றது. சக்திவேல், நடேசன், முத்து, வத்தன், கணேசன், சோடாக்கடைக்காரர், அவர் மகன், டீக்கடைக்காரர் அவர் சம்சாரம், குழந்தை, சைக்கிள் ஸ்டேண்ட் பையன், வாட்ச்மேன், டிக்கிட் கிழிப்பவர்கள், கட்டில் கடை கிழவி, கிரக்கி கருவாச்சி, தியேட்டர் மேனேஜர், நோட்டீஸ் ஒட்டும் பையன்கள் முதலியோர் முன்னும் பின்னுமாக வலை போல பின்னப்பட்டுள் ளார்கள். வழக்கமான நாயகன், நாயகியைத் தேடினால் ஏமாற்றம்தான். திருச்செங்கோடு சேலம் ரோட்டில் முதல் பஸ் ஓட்டிய பெருமைக்குரியவர் தியேட்டர் முதலாளி. அவரது மருமகளின் ராசியான பெயர்தான் கொட்டகைக்கு சூட்டப் பட்டுள்ளது. காட்டில் உள்ள சோடாக் கடைக்காரர் வீட்டிற்கு இரவோடு இரவாக தடம் போடுகிறார்கள், பயங்கரமாக தண்ணியடித்துவிட்டு பள்ளிபாளையம் வரை நோட்டீஸ் ஒட்டுகிறார்கள். துண்டு சிகரெட்டுக்காக அடிதடி... ஹோமோ செக்சுவல் பழக்கங்கள், புளுபிலிம்மில் ஆண் பெண்களின் அம்மண வேட்டைகளில், ஆசிரியர் வெளிக்காட்டும் விஷயஞானம் நாவலுக்கு, வண்ணம் கூட்டுகிறது. அசோகமித்திரனின் 'கரைந்த நிழல்கள்' கூட இவ்வகையில் முழுமை பெற்றதாக கூறமுடியாது. ஆனால் இந்திரா பார்த்தசாரதியின் எக்ஷிஸ்டென்சியலச நாவலான குருதிப் புனலில் தான் 'தாயோலி...' என்ற வக்கிரக் கொச்சை கண்ணயா நாயுடு திட்டியதாக முதலில் துணிந்து கையாளப் பட்டது.

தலைவர் படம் ஓடும் போது வசூல் நிறைகிறது. 'தொப்பையன்' சிவாஜியின் புதியபறவையில் 'எங்கே நிம்மதி' பாட்டு வரும்போது இடைவேளைக்கு முன் வந்திருந்த பத்து பேரும் தூங்கி காத்தோடுகிறது. அந்த சமயம் பார்த்து மைனர். கருவாச்சி லீலைகளும் சீட்டிலியே தொடர்கின்றன. அணிமூர், ஆண்டிபாளையம், எமப்பள்ளி முதலிய சுற்று வட்டார கிராம மக்களும், தறி ஓட்டும் பையன்களும் இங்கே தான் படம்பார்க்க வருகின்றனர். 'சாமி' படங்களும், 'பொம்பளைங்க' படங்களும் பழசானால் கூட போட்டிருந்தால் நன்றாக ஓடியிருக்குமே.... சரஸ்வதி சபதத்தில் பத்மினி, சாவித்திரி, கே.ஆர். விஜயா மூன்று குந்தானிகளும் ஒன்றாக வருவதில்லையா? 'குலமா குணமா' பிரமாதமான குடும்பச்சித்திரம் ஆயிற்றே?

மொத்தத்தில்–நாணயத்தின் இருபக்க பொம்மை. மங்கை போல் ஏறுவெயிலும் நிழல்முற்றமும் பொருள் பொதிந்த நவீனக் குறியீடுகளாக பொருத்தமான தலைப்புகளாக அமைந்துள்ளன. நாஞ்சில் நாடன் முன்னுரையில் குறிப்பிட்டது போல் கூரிய சிலாம்புகள், எங்கும் காணாம் – யதார்த்தத்தின் குளிர்தென்றல் தான் குளுமையாக வீசியிருக்கிறது. ஒன்றில் நடுத்தரத்தின் கீழ்மட்டம்–இன்னொன்றில் கடைத்தரத்தின் தரை மட்டம் – சர்க்கஸ் கம்பியில் நடப்பதைப் போன்ற சிரமங்கள் சித்தரிக்கப் பட்டுள்ளன. நோயின் பீடைகளை கழித்து எறியும் போது வாசகர்களும் அதை மிதித்து பீடிக்கப்படுவது போன்ற உணர்வு

படிப்பகம்

padippakam

3. சார்லஸ் டிக்கன்ஸ் – படைப்பாளியும் மனிதாபிமானியும்

ஆங்கில மொழியின் அருமை பெருமைகள் இரண்டு அரசிமார்களின் ஆட்சியில் கொடிக்கட்டிப் பறந்திருந்தது மட்டுமல்லாமல் பிறமொழிகளும் அதன் காலடியில் கிடந்து கப்பம் கட்டிச் சேவகம் செய்யுமளவுக்கு கலை இலக்கிய வளர்ச்சியிலும் அரசியல் விஞ்ஞான மேம்போக்குகளிலும் மேடுதட்டி உலகிற்கே அது சவால் விட்டிருந்தது என்பது அவ்வளவு சீக்கிரம் அழித்து எழுத முடியாத வாக்கியமாகும். இன்றைக்கும் அதன் வானளாவிய வீச்சுக்கள் பூர்ஷ்வா சமுதாயத்தின் ஏகாதிபத்திய உச்சத்தில் புழுவாக நெளிந்து கொண்டிருக்கும். நம்மை எட்டுக்கால் பூச்சியாக கெட்டியாக பிடித்து இதரமொழி இயக்கங்களையும் நடப்புகளையும் கண்காணிக்க உதவும் இணைப்பு பாலமாக உதவுவது பிரிட்டிஷ் ஆட்சியின் பெருங் கொடைகளில் பிரதானமானதல்லாமல் வேறென்ன?. **எலிஸபெத்** பொற்காலத்தில் நாடகம் **வில்லியம் ஷேக்ஸ்பியர்** என்ற முடிசூடா மன்னனைப் பெற்று இமாலய சாதனையை நிகழ்த்தியிருந்த அதே வேளையில் **விக்டோரியா** காலம் **சார்லஸ் டிக்கன்ஸ்** என்ற தவப்புதல்வனை ஈன்று நாவல் கலையை உலகத்தரத்திற்கு மேம்படுத்தியது முன்னதை ஓங்கி உதைத்து அப்புறப்படுத்த எத்தனித்த செயலாகவே படுகிறது ஒரு விதத்தில். முப்பத்தேழு நாடகங்களில் அரச பரம்பரையையும் அந்தப்புர ஆடம்பரங்களையும் முதன்மைப் படுத்திய ஷேக்ஸ்பியரும், நாற்பத்தொரு நாவல்களில் அநாதை/அபலைகளையும் அவர்களின் வாசஸ்தலமான அருவருப்பான தெருக்களையும் முக்கியப்படுத்திய டிக்கன்சும்- கலை என்ற ஓரே அச்சின் இருவேறு எதிர்தளங்களில் சுழன்றிருந்தாலும் படைபாளிகள் மனிதாபிமானிகள் என்ற பார்வையில் ஒன்று சேர்ந்து கைகுலுக்கி கொள்வது தெரியும். இலக்கியத்தின் சகல உணர்வுத் தளங்களிலும்/ தத்துவங்களிலும் கைவைத்துள்ளதால்தான் இவர்களை இன்றும் அசைக்க முடியாமல், என்றைக்கும் படித்துத் தொலைக்க வேண்டிய விதியாகிவிட்டது. குருட்டுக்கவி ஹோமரை புறந்தள்ளி ஷேக்ஸ்பியர் பலத்த கைதட்டல் பெறும்

படிப்பகம்

padippakam

போது கிரேக்க, ரோமாலியத்தை சுவிகரித்துக் கொண்ட குற்றத்துக்கு குப்புரிக்க உதைத்துத்தள்ளப்பட்டு முகத்தில் கரியையும் பூசிக் கொள்கிறான். அரசியலில் மாற்றங்கள் ஆடிக் கொன்று அமாவாசைக் கொன்று சாதாரணமாக நிகழும்போது இலக்கியத்தில் எங்கோ/ எப்போதோ ஒன்றிரண்டு உன்னதங்கள் இப்படித்தான் திட்டமிடாமல் தொடர்கின்றன.

'ஸ்பானிஷ் ஆர்மடா'வை வீழ்த்தி அரியணையையும் மணி மகுடத்தையும்உள்ளாட்சியையும் ஸ்திரப்படுத்திய எலிசபெத்தின் மகத்தான வெற்றி- விக்டோரியாகாலத்தில் கப்பல் பயணங்கள். கடல்வழி கண்டுபிடிப்புகள், காலனியாதிக்கங்கள் கண்டு. உலகை ஒரே சந்தையாக்கி சூரியன் அஸ்தமிக்காத ஆங்கில சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்ததில் முடிந்து விட்டிருந்தது. ஆரம்ப காலம், மத்தியகாலம், நவீனகாலம்- என்று இலக்கிய வரலாற்று வசதிக்காக மூன்றாக பிரித்துக் கொண்டாலும், கிளைப் பகுதி களான கலை இலக்கிய மறுமலர்ச்சி (RENAISSANCE), சமய சீர்திருத்தம் (REFOR Mation)- முதலிய புரட்சி வித்துக்களும் சமூகமாற்றத்தின் தூண்டுதல்களாக/திருப்புமுனைக்கட்டங்களாக இயங்கியிருக்கின்றன.

க்வீன் எலிஸபெத்துக்கும். ஷேக்ஸ்பியருக்கும் கூட தொடர் பிருந்ததாக சில காமாலைப் பார்வை கட்டுக்கதைகளும் கிசு கிசுப்புகளும் பாமரத்தனமாக சிண்டு முடிந்து பேசப்பட்டன. ஒரு பேரரசியையும் பெருங்கலைஞனையும் தொடர்பு படுத்தி ஆனந்தப்படுவது மட்டரகமாக மஞ்சள் ரசனை மட்டுமல்ல திருஞானசம்பந்தருக்கு பாலூட்டும் காட்சியில் பார்வதியின் பருத்த முலைகளைப் பார்த்து பரவசப்பட்ட பக்தனின் வெறியாகும் இந்தக் கர்ண பரம்பரை கதைக்கு ஆதாரமில்லை. ஷேக்ஷ்பியர் குழந்தையாக இருக்கும் போது அவள் ஐம்பதை எட்டிக் கொண்டிருந்தாள். எனவேதான்.

THE LIFE OF SHAKESPEARE
IS A FINE MYSTERY —

என்ற சார்லஸ் டிக்கன்ஸ் சொல்கிறான்.

இன்னும் ஒரு Open romance! எலிஸபெத் இளவரசியாக இருந்தபோது சிம்பிள்ட்டனான ஒரு இளம் படைத்தலைவனின் உடம்பு வலுவில் மோகித்து கெனில்வொர்த் கோட்டையில் அடிக்கடி ரகசியமாக சதைப்பசியை தீர்த்துக்கொண்டபோது மர்மம் வெளிச்சமாகி அவனை இரவோடு இரவாக தீர்த்துக்கட்டி கடலில் எறிந்ததை அறிந்த அவன் அப்பாவி அழகிய விதவை மனைவி கண்ணகி போல் அழுது அரற்றியதை பின்புலமாக்கி ஒரு வகையான ஒப்பாரி பாணியில், ஒரு மட்டரகமான ஆங்கில நாவல் பேசுகிறது. எப்போதோ படித்தது. பெயர், A Damsel in Distress' என்பதா? ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆவி பேய்கள், குத்துக்கொலைகள், காதல் கட்டிப்பிடிப்புக்குலவல்கள் நிறைந்த ஒரு காதிக்-டிராகுலா-கவர்ச்சி-மசாலா சீரியஸ் என்று நினைக்கின்றேன். எட்டாம் ஹென்றியின் இரண்டாம் மனைவி அன்னி பொலின் மகள் இவள். தனது தாயை விபச்சாரக்

படிப்பகம்

padippakam

குற்றத்தில் சம்பந்தப் படுத்தி தலைவெட்டிய சம்பவத்தின் போது எலிசபெத் மூன்று வயது குழந்தை. ஈவு இரக்கமற்ற இந்நிகழ்ச்சி ஆண் வர்க்கத்தை பழிவாங்கும் போக்காக ஊறி மாற்றாந்தாய் அன்பு காட்டியும் மணம் செய்து கொள்ளவில்லை. ஆனால் ரஷ்ய யதேச்தாரிகாரத்தில் ரஷ்புதீன் என்ற மட்டமான மதச் சாமியார் அரசிகளை கூத்திகளாக வைத்திருந்தது வரலாறு.

எது எப்படியாயினும், 'Loves Labours Lost' எலிஸபெத்தின் முன் நிகழ்த்திக்காட்டும்போது அதில் உச்சரிக்கப்படும் இருபத்தேழு சொல் நீள வசனமான 'Honorifi cabilitudinitati bus' என்பதின் கைவண்ணத்தில் மயங்கி ஷேக்ஸ்பியரின் குளோப் தியேட்டரின் மானியத்தை உயர்த்தியபோது வயோதிகத்தின் தடுமாற்றத்தில்தான் அந்த தானத்தை செய்திருக்கிறாள். மற்றபடி எலிஸபெத் கர்வக்காரி, ஈவு இரக்கமற்றவள். எச்சைக் கையில் காக்காய் ஓட்டும் படுகஞ்சமானவள். எந்தப் பிரச்சினையும் அவள் நெஞ்சைத் தொடுவதில்லை. ஆரப்போட்டு, அதன் போக்கில்விட்டு முடிந்தபின் தீர்வுகாணும் ஒரு அத்வைதப் போக்கு அவளுடைய அரசியல்.

ஷேக்ஸ்பியரின் பெண்டாட்டி அன்னி ஹதாவே (Anne Hathaway) அவனைவிட எட்டு வயது மூத்தவள் என்பதும் - ஆரம்பத்தில் வாத்தியார் உத்தியோகம் பார்த்துவிட்டு அவளுடைய நச்சு தாங்காமலும் குடும்பத்தை காப்பாற்ற முடியாமலும் லண்டனுக்கு விழுந்து ஓடி நாடகக் கொட்டகையில் புகுந்து குதிரைக் காப்பாளனாக ஓட்டிக்கொண்டான் என்பதும் - அந்தக் காலத்தில் ஒளிவிளக்குகள் - வண்ணத் திரைச்சீலைகள், காட்சி ஜோடனைகள் கொண்ட அணிமணி அரங்கங்களின் உதவி இல்லாமல் நாடகங்கள் பகலில் வெறும் திறந்தவெளி மேடையில் நடந்தன என்பதும் சட்டத்துக்குப் புறம்பான கொள்ளைக்காரர்கள், திருடர்கள், ஓடுகாலிகள், கோமாளிகள், ஒன்றுக்கும் உதவாத திண்ணைதூங்கிச் சோம்பேறிகள் முதலிய ஒரு தொழிலுமில்லாதவர்கள்தான் பிரபுக்களின் பராமரிப்பில் அவர்களது நாடகக்குழுவின் கூத்தாடிகளாக இருந்தனர் என்பதும் சமகால மேதைகளான சர். கிருஷ்தோபர் மார்லோ, பென் ஜான்சன் போன்றோர் உலகையே சுற்றிவர ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தை விட்டு வெளியே எட்டிப்பார்க்காத கிணற்றுத்தவளை என்பதும் - கூடுதலான அதீஸ்வாரஷ்யமான விஷயங்கள். ஸ்காட்லாந்துக்கு எடின்பர்க்கும் அயர்லாந்துக்கு டப்ளினும், இங்கிலாந்துக்கு லண்டனும் நடுநாயகமாக இருந்தாலும் பக்கிங்ஹாம் அரண்மனையே அரசியலின் மைய ஆணைத்தளமாக கோலோச்சியது. ஆக்ஸ்போர்டு சமயத்திற்கும், கேம்பிரிட்ஜ் அறிவியலுக்கும் முண்டியடித்துக் கொண்டு வேலை செய்தபோது - இந்த அறிவுக் கேந்திரங்கள் வளர்ந்தோங்கிய தேம்ஸ் நதி ஒரு காலத்தில் லண்டனைத் தாக்கிய கொள்ளை நோய் (Black Death), பெருந்தீ (The Great Conflagration) முதலிய இயற்கைச் சீற்றங்களைச் சந்தித்து சொல்ல முடியாத சோகத்தில் ஓடிக்கொண்டிருந்தது என்பதும் ஒரு சமூக சரித்திரத்தின் கருப்புப் பகுதிகளாகும்.

படிப்பகம்

padippakam

பின்தொடர்ந்த பதினெட்டாம் நூற்றாண்டு இங்கிலாந்து விவசாயப் புரட்சியை எதிர்கொண்டபோதுதான் மானிட வரலாற்றின் மிக முக்கியமான அத்தியாயமான மக்கள் வயிற்றிலடித்து அவர்களை வாய்விட்டு அழச்செய்த கொடுமை நடந்தேறியது. பரவலான சிறுவிவசாயமும், பாரம்பரிய குடிசைத் தொழில்களும் கைவினைக் கலைஞர்களை அர்த்தமற்றதாக்கி காலங்காலமாக உழவுக்குப் பயன்பட்ட ஆடுமாடுகள், எருமை, கழுதை, குதிரைகளை அநாவசிய மாக்கின. பூமிக்குப் பாரமான இந்த வாயில்லா ஜீவன்களை உணவுப்பொருள்களாக்கிய நிலமான்ய சமுதாயம் நிரந்தரமாக டாட்டா... காட்டி பிரியாவிடை பெற்றபோது நீதிநேர்மைகள் பெரும் பண்ணைகளுக்கும் ஆலைகளுக்கும் வணக்கம் செலுத்தி வழிவிட்டன. வண்டிவடங்கள், கத்தி கடப்பாரைகள், ஏர் ஏற்றங்கள், இடமாற்றமாகி எங்கோ மறைந்தன. வணிக விஸ்தரிப்பும், வியாபாரக் கண்ணோட்டமும் வேசித்தனத்துக்கு குற்றேவல்புரிந்த இந்த ஆடம்பரக் காலகட்டத்தின் பலத்த அறையினால் பொறிகலங்கி **ஆலிவர் கோல்டுஸ்மித்** என்ற ஏழைக்கலைஞன் பைத்தியமாகியிருக்கின்றான். முதலாளித் துவத்தை அதன் நடைபழகும் குழந்தைப் பருவத்திலியே எதிர்த்த இவன் நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டத்தை Vicarof Wakefield நாவலில் நாசூக்காக காட்டியபோது மில்டனுக்கு பத்தாயிரம் வரிகளில் ஒரு பெரிய Paradise Lost தேவைப்பட்டிருந்தது. 'THE TRAVELLER' 'THE DEERTED 'VILLAGE' கவிதைகளில் நாட்டுப்புறங்களை நகரங்கள் கொத்திக்குடலுருவித் திண்பதையும் செல்வங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு அதிகாரம் மையப்படுத்தப்படும் அராஜகத்தையும் சாடியிருக்கின்றான். அதிகாரக் குவியலை ஒட்டுமொத்த சுரண்டல் சர்வாதிகாரமாக அன்றே நேரில் கண்டவன் கோல்ட்ஸ்மித். It is integrity that gives value to character. An ignorant peasant without fault is greater than a philosopher with many. An honest man is the noblest work of God என்ற தெய்வீகக் கோட்பாடுகள் சரிந்து கேலிக் கூத்தாயின.

மாமியார் கைமாறி மருமகள் சாவிக்கொத்தை கைப்பற்றியது போல் புதிதாக வந்த தொழில் பழையதை பந்தாடத் தொடங்கியது. இந்தியாவில் இந்த கைங்கரியந்தான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. இப்பழைய – புதிய சங்கமம் சில புதிய தத்துவங்களை பரிசீலனைப் படுத்தியது. ஆண்டு பலவாக ஆணியடிக்கப்பட்டிருந்த பெண்சமுதாயம் நிபந்தனையின்றி வெளியேறி விழிப்புற்றது. அடிமையாகவும் ஆஸ்தியாகவுமிருந்த அது வெகுவேகத்தில் தன் வேலையைக்காட்ட ஆரம்பித்தது. அம்மிமிதித்து அருந்ததிகாட்டி முழந்துணியைப் போர்த்து, முக்காடு போட்டிருந்த பெண்ணினம் – ஆடைகளை களைந்து அலேக்காக காற்றில் வீசிவிட்டு அனைவருக்குமுன் அரங்கத்தில் அங்கங்களை அசைத்து ஆடியபோது – சமூகம் அதை 'நடனம்' என்ற புனிதமான கலைச் சொல்லால் அர்ச்சித்து ஆரத்தி எடுத்து வீட்டுக்குள் வரவேற்றது. 'பரப்பிரம்மம்' தெரிந்து

படிப்பகம்

padippakam

விட்டபோது பத்தினியும் வேசியும் ஒன்றாகி பட்டப்பகலில் முதலாளித்துவத்துக்கு படுக்கை விரித்தனர். நிறைய ஓய்வில் பெண்கள் ஏடெடுத்து எழுத முற்பட்டபோது ஜேன் ஆஸ்டின், மேரியா எட்ஜ்வொர்த் என்ற இரு புதுமைப் பெண்கள் நமக்கு அகப்படுகிறார்கள் ஆனால் எழுதிப்பிழைக்கவேண்டிய தலைவிதி திருமதி ஆப்ரா பெண் (Mrs. Aphra Behn) என்ற முதல் ஆங்கில நாவலாசிரியைக்கு வாய்த்திருந்தது என்பதை 'பெண்ணீயம்' பேசும் பிரிவுவாதிகள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆடையை குறைத்துக்கட்டி ஆம்பிள்ளைகளுடன் பல்லிளிப்பதும் ஆபிசுக்குப்போய் வீட்டு விஷயங்களை அரட்டையடித்துவிட்டு சம்பளம் வாங்குவதும், அரசியலில் குதித்து வறுமையை ஒழித்து விடுவதாக மேடைமுழக்கம் செய்வதும், விஞ்ஞானயுகத்திலும் கோயில் குளங்களையும், சர்ச், மசூதிகளையும் விடாமல் சுற்றித் திரிதலும்தான் – இந்நாளில் பெண்கள் முன்னேற்றமாக பேசப் படுகிறது.

நாட்டுப்புறங்களிலிருந்து கம்பு காய்கறிகள், பால், மோர், மீன் இறைச்சிகள் இதரதட்டுமுட்டுகளை விற்றுப் பிழைத்த அன்றாடங் காய்ச்சிப் பெண்கள் வணிகப்பெருக்கத்தினாலும் வயிற்றைக் கழுவவேண்டிய நிர்ப்பந்தத்தினாலும் மான மரபுகளை உதறி எறிந்துவிட்டு உடல் வியாபாரத்தில் நேரடியாக இறங்கியபோது லண்டன் தெருக்களில் விபச்சாரிகள் சேனை அணிவகுத்துநின்றது. சாரிசாரியாக எறும்புக்கூட்டங்கள் போல் மிதிபட்டு ஊர்ந்த உருவங்களை விலைக்கு வாங்கவும் ஆள் பஞ்சம். கௌரவமான பெண்மணிகள் சிலர் வீட்டுக்குள் மட்டும் வைப்பாகி (Keptmistress) வெளியில் தங்கள் கற்பைக்காப் பாற்றிக்கொண்டனர். தேவை கண்டுபிடிப்பின் தாயானபோது ஒடுக்கப்பட்ட சமூகம் இத்தனை ஏளனங்களையும் இழிநிகழ்வு களையும் சுமந்துத் தொலைத்தது. சட்டமும் ஆலை முதலாளிகளுக்கு சாதகமாய் போகும் வழிக்காற்றாய் வீசியது. ஏழை எளியோரின் கைகால் உழைப்புகள் கவைக்குதவாமல் போன போது ஏசுகிருஸ்துவும் பணக்காரர்களின் பக்கம் சேர்ந்து கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டுதானிருந்தார். கத்தோலிக்க கடவுள் நம்பிக்கை மலையேறி புதிய புராட்டஸ்டன்டு இயக்கம் புத்துயிர் பெற்றபோது ஜனங்கள் அநாதைகளாய் லண்டனுக்குள் தஞ்சம் புகுந்து ஆலைகளில் வேலைதேடி நின்றனர். ஐரோப்பாவின் இப்புதிய தொழிலாளர் வர்க்கம் – ஒரு கலாச்சாரத்தை அமைக்க காத்து நின்ற சூழலை உற்றுநோக்கிய காரல் மார்க்ஸ் தன் கேபிடல் வேதநூலில் 'Labour the father; earth its mother' என்று எழுதுகிற முடிவுக்கு வந்தான். லண்டன் வாழ்க்கைக்கும் மார்க்சுக்கும் மிக நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. பிரிட்டிஸ் மியூசியத்தில் நிறைய படித்ததும் சகதோழன் ஏங்கல்சுடன் பல பேக்டரிகளை சுற்றிப்பார்த்ததும் அவன் ஞானம் பெற ஏதுவாக இருந்திருக்கிறது. தனி உடமை எப்படியெல்லாம் வேஷம் போட்டுக்கொண்டு சுரண்டல் பாட்டுப் பாடுகிறது என்பதை கண்ணாரக் கண்டு ஏற்கனவே Dialectical materialism மனதில் முளைத்தது வலுப்பெற்று உபரிமதிப்புக் கோட்பாடும் உதயமாகி நிருபனமாகிறது. இழப்பதற்கு

படிப்பகம்

padippakam

உங்களிடம் எதுவுமில்லை. உலகத்தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என்ற இறுதி கோஷம் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை 1848-ல் லண்டனில் தான் முதலில் துண்டுபிரசுரமாக வெளியிடப்பட்டது. இதனுடன் – ஜான்மேனார்டு கீன்சின் பணத்தத்துவக் கோட்பாடு, மால்தூசின் மக்கள் தொகைக் கோட்பாடு, ஜே. எஸ். மில்லின் கூலிக்கோட்பாடு டேவிட் ரிக்கார்டோ, ஆடம்ஸ்மித் இவர்களின் பொதுவான பொருளாதாரக் கோட்பாடுகள் – கருத்துவானில் முட்டிமோதி காலாவதியாகியிருந்தன. இவைகள் பெரும்போர்களையும் புரட்சிகளையும் பின்னால் தோற்றவித்த போதுதான் பூர்ஷ்வா சமுதாயத்தின் பொச்சும் பெரிதாகி – அது வாயைப் பிளந்து கொண்டு, புதிய வடிவில் உறிஞ்ச ஆரம்பித்தது. யானைவரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே என்பது போல், இத்தனை மேடுபள்ளங்களையும் தாண்டாமல் நாம் சார்லஸ் டிக்கன்சின் சமவெளிப் பிரதேசத்துக்குள் கால்வைப்பது நல்லதா, சொல்லுங்கள்?

II

சார்லஸ் டிக்கன்ஸ் பிறந்த நேரம் இங்கிலாந்து பிரெஞ்சு நெப்போலியனின் கெடுபிடித்தாக்குதலில் சிக்கித்தவித்திருந்தது. ஒரு முழு ஆட்டைத் தினமும் தின்று தீர்த்த இந்த கார்சிகப் பேயன், ஆங்கிலேயருக்கு சிம்மசொப்பனமானான். ஒற்றைக்கண் நெல்சன் ட்ரபால்கர் போரில் இறுதியாக தோற்கடிக்கும் வரை. இந்தப் போர்மேகச் சூழலில், ஹாம்ஷையரில், போர்ட்சீ லேண்ட்போர்ட் நகரில் 1812, பிப்ரவரி 7-ந் தேதி டிக்கன்ஸ் பிறந்தான் என்பதை 'I was born on a Friday' என்று டேவிட் காப்பர்பீல்டு எழுதுகிறான். அது நல்ல நேரமா கெட்டதா? ராகுவா கேதுவா – ஆங்கிலேயர்கள் ஜாதகத்தையெல்லாம் பார்ப்பதில்லை.செவ்வாய் தோஷம் பார்த்து கல்யாணம் செய்யும் சனாதனமெல்லாம் நமது புண்ணிய பூமிக்கும் மட்டுந்தான் பொருந்தும். Charles Dickens (C. D) என்ற சொந்தப் பெயர் தான். David Copperfield (D.C) என்று திருப்பிச் சுருக்கப்பட்டிருக்கிறது. தாயார் பற்றித் தெரியவில்லை. சொந்த வாழ்க்கையில் பெற்ற தாயை மறந்த நன்றிகெட்ட மகனாகவேபடுகிறான் டிக்கன்ஸ். சுயசரிதையான டேவிட் காப்பர்பீல்டில் தந்தை இறந்த ஆறுமாசத்துக்குப்பின் வயிற்றிலிருந்து இறங்கிய போஸ்துமஸ் சைல்டு டேவிட்டுக்கு தாயார் கிளாராவின் அன்பு அவ்வளவாக கிடைக்காவிட்டாலும் முகத்தையாவது பார்க்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. தந்தை ஜான் டிக்கன்ஸ் வேறு யாருமில்லை வில்கின்ஸ் மிகாபர்தான். 'மிகாபரியன் ஆப்டிமிசம்' ஒரு எதிர்பாராத அதிர்ஷ்டத்துக்கு (to wait for some thing to turn up) ஏங்கும் குணாம்சம். "என் தந்தையைப் போல் அன்புநெஞ்சம் கொண்ட ஒரு எளிய மனிதரை நான் இவ் உலகில் பார்த்ததே இல்லை" என்று டிக்கன்ஸ் நினைவு கூர்ந்துள்ளான். குளிர்காய்ச்சல், நோய் நொடிகள் கண்டபோது என்னைத் தோளில் போட்டுக்கொண்டு இரவு பகலாக, தூங்காமல் காப்பாற்றியவர் என்று அவரது வாஞ்சையை போற்றுகிறான் போர்ட்ஸ்மவுத் டாக்யார்டு நேவிபே ஆபீசில் ஏழை குமாஸ்தாவான அவரால் குடித்தும் குடிக்காமல் ஒரு பெரிய பரட்டைத்தலை குழந்தைகளின் பட்டாளத்திற்கு அரை

படிப்பகம்

padippakam

வயிற்றுக் கஞ்சிதான் ஊற்ற முடிந்தது சுமையைத்தாங்காமல் இரண்டு வருஷத்துக்குப்பின் குடி லண்டனுக்குப் பெயர்ந்து 'கதம்' என்ற இடத்தில் டேரா போட்டபோது டிக்கன்சுக்கு வயது ஐந்து, எட்டுக் குழந்தைகள் கொண்ட ஒரு குட்டிகுசேலர் குடும்பத்தில் இவன் இரண்டாவது மூத்த பையனாதலால் பொறுப்புகளும் தலைக்குமேல் இருந்தது. சிறுவன் டிக்கன்ஸ் மழைக்குக் கூடபள்ளிக்கூடத்தில் ஒதுங்கியதில்லை. 'Household words' 'All the year Round இரண்டிலும் பால்யகால வறுமைக்கோடுகள் அழுத்தம் பெற்றிருப்பதைப் பார்க்கலாம்.

சிறுவன் டிக்கன்ஸ் பாராட்டி சீராட்டி பள்ளிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. பதிலுக்கு பிளாக்கிங் வேர்ஹவுஸில் (Blacking ware house) தோலுக்கு சாயமடிக்கும் துர்நாற்றத் தொழிலில் வேலைக்கமர்த்தி இடுப்பொடிக்கப்பட்டதின் பதியம் தான் மர்ட்ஸ்டோன் மதுக்கடையில் பாட்டில் கழுவி லேபிள் ஒட்டும் வேலை. ஏதோ தூரல்விழுந்தாற்ப்போல் (அதாவது 12 லிருந்து 14 வயதுவரை) மிஸ்டர் ஜோன்ஸ் நடத்திய பகல்நேர இலக்கணப் பள்ளியில் கொஞ்சம் எழுத்தறிவிக்கப் பட்டது. அந்தக்காலத்தில் எழுத்தறிவித்தவர்கள் இறைவனாக இல்லை எமனாக இருந்தனர் என்பதற்கு குரூரமான தலைமை யாசிரியரான மிஸ்டர் ஜோன்ஸ் ஒரு உதாரணம். "உங்கள் மகன் எங்கே படித்தான்?" என்று ஜான் டிக்கன்சைக் கேட்டால் பல்லுபதினாறும் தெரிய வாய் மலர்ந்து 'ஓ அதுவா அவன் எந்தப்பள்ளிக்குப் போனான்', தானாகவே அல்லவா படித்துக் கொண்டான் என்று பூரித்துப் போவாராம். ஒட்டாண்டி களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கடைசிவரை கண்ணீர் சிந்திய கலைஞன் புத்தக எழவுகளை உருப்போடாமல் மக்களைப் படித்து எழுதியது எவ்வளவு நல்லதாய் போயிற்று?

எல்லிஸ் அன்ட் பிளாக்மோர் அட்டர்னிஸ் அலுவல கத்தில் மிகவும் ஜூனியராக வாரத்திற்கு 13 ஷில்லிங் 6பென்சு குறைந்த வருமானத்தில் முதல் உத்தியோகம். இக்கட்டத்தில் ஸ்டெனோகிராப்பியின் மர்மத்தில் டிக்கன்ஸ் மூழ்கியிருந்தான் டேவிட் காப்பர்பீல்டுபோல் கஷ்டப்பட்டு அதில் நிபுணனாகிவிட கிளார்க் வேலையை உதறி எறிந்துவிட்டு, 'The True Son' 'The mirror' 'morning chronicle' – முதலிய தினசரிகளில் சுருசுருப்பாக இயங்க ஆரம்பித்தான். மார்னிங் கிரானிகல் மிஸ்டர் பிளாக் என்ற விக்கட்சி ஆதரவாளரின் திறமையான நிர்வாகக் கட்டுப்பாட்டிலிருந்தது. அப்போது சீர்திருத்தக் கூட்டங்களும் போராட்ட ஊர்வலங்களும் அன்றாடம் லண்டனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததால் நியூஸ் ரிப்போர்ட்டர்களுக்கு ஏக கிராக்கியிருந்தது. டிக்கன்ஸ் வாழ்க்கையிலும் வசந்தம் வீசத்தொடங்கியது. சில நல்ல பேச்சாளர்களின் சொற்ப் பொழிவுகளை பொதுக் கூட்டத்தின் கொட்டும் மழையிலும் – குடையில்லாமல் – தலையில் கர்சீப் மட்டும் கட்டிக்கொண்டு நோட்டு நனையாமல் குறிப்பெடுத்ததை பெருமையுடன் கூறும் டிக்கன்ஸ் படிப்படியாக பார்லிமெண்டின் ஹவுஸ் ஆப் காமன் ஒல்டு கேலரியில் கைதேர்ந்த நிருபரானான். வாழ்க்கையில்

படிப்பகம்

padippakam

எதைச் செய்தாலும் மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு, உறுதியாக திடமாக செய்து முடிக்கும் தொழில் வைராக்கியம் வேர் விட்டிருந்த காலம் இது. பாதியில் விட்டுவிடுவதும் பரிகசிப்புக்கு இடம் தருவதும் அவனுக்குப் பிடிக்காத எதிர்மாறான விஷயங்கள். அவனது கடைசி நாவலான 'எட்வின் டுருட்'டை கூட முடித்துவிடத்தான் துணிந்தான். ஆனால் அது நிறைவேறாத கடைசி ஆசையாகப் போய்விட்டது. விடாமுயற்சியும், வெற்றியை அணைத்துக் கொள்வதில் ஒரு குஷியும் அவன் வாழ்க்கையில் கற்றுக்கொண்ட பாடங்கள். அடைந்த சாதனைகளிலும் அவன் தொடர்ந்து துருவித் தேடிக்கொண்டுதான் இருந்தான். தேடலே அவனது தணியாத தாகமாக இருந்தது. ஒல்டு மன்த்லி மேகசைனில் தான் கிறுக்கிய சில உதிரியாக தலைகாட்டிய போது வெஸ்ட் மினிஸ்டர்ஹால் வீதியில் அரைச் சந்தோஷத்தில் ஆடி மிதந்து திரிந்தவன் - தொடர்ந்து 35 வருஷங்களாக உலகின் கோடான கோடி வாசகர்களுக்கு தீனிபோட்டு திருப்திப் படுத்த வேண்டிய கட்டாயமாக்கப்பட்டான். தொட்டதெல்லாம் பொன்னான அவன் கை உயிர்விடும்போது கூட பேனாவைப் பிடித்துக் கொண்டுதான் அசைவற்றுப் போனது என்றால் அவன் பிறவி எழுத்தாளனில்லாமல் வேறு எப்படி?

பயமும் நம்பிக்கையும் பாதி பாதி பிடுங்கித் திங்க 'Boz' என்ற புனைபெயரில் 'Sketches' முதன்முதலாக மன்த்லி மேகசைனுக்கு அனுப்பப்பட்டபோது அங்கீகரித்த ஒன்பது உறுப்பினர்களும் மூக்கின்மேல் விரலை வைத்தனர். இந்த முதல் வெற்றி மேலும் லண்டன் வாழ்க்கைச் சித்திரங்களை தீட்டிய போது ஜார்ஜ் ஹோக்ரத் என்ற 'கிரானிகல்' பத்திரிக்கையின் இசை விமர்சகர் சிபாரிசில் - அதன் மாலைப் பதிப்பு பிரிவில் ஒரு வேலையைத் தேடித்தந்தது. அடிசனின் 'Spectator' கோல்டுஸ்மித்தின் 'Essays' 'citizen of the world' வாஷிங்டன் இர்விங்கின் 'sketch' 'Brace Bridge Hall' - இவைகள் முதல் படைப்புக்கு ஏணிப் படிகளாக நின்ற நேரத்தில் வர்ணனை வீரியம், நுணுகி நோக்கும் திறன்கள் மொக்குவிட்டு டிக்கன்சின் அடிமனதில் புதைந்திருந்த துக்கதுயரங்களை உசுப்பிவிட்டன.

இந்தக் கால கட்டத்தில் நடந்தேறிய ஈரச்சம்பவம் ஒன்றை குறிப்பிடாவிட்டால் நாம் நன்றி கெட்டவர்களாகி விடுவோம். தனது முதல்ப திப்பாளன் மேக்கிரோன் (Macrone) ஒரு இக்கட்டில் சிக்கி கடனில் மூழ்கிவிடவே 250 பவுனுக்கு விற்ற முதல்படைப்பின் பதிப்புரிமையை டிக்கன்ஸ் 2500 பவுனுக்கு திரும்ப வாங்கிக் கொண்டான். அவ்வளவு அதிகத் தொகை பேசுமளவுக்கு டிக்கன்சு வளர்ந்திருந்தாலும் அப்படைப்பு தொடராக பத்திரிக்கையில் மீண்டும் வராமல் தடுப்பதற்கான உபாயமாகவும் தெரிகிறது. இந்தச் சமயத்தில்தான் 'பிக்விக் பேப்பர்ஸ்' - வந்து அபார சாதனையை நிகழ்த்தியது. சேப்மன் அன்ட் ஹால் லண்டன் பப்ளிஷிங் ஹெவுசின் காமிக்வெளியீடான பிக்விக் முதலில் நானூறும் 15-வது பதிப்பில் 40,000 பிரதிகளும் அச்சிடப்பட்டன. இந்நிலையில் மேக்கிரோன் இறந்துவிடவே - அவன் விதவை

படிப்பகம்

padippakam

மனைவிக்கும், குழந்தைக்கும் துயர்துடைப்பாக அந்த வருமானம் முழுவதையும் தந்துவிட்டது மகா மனிதாபிமானத்தைக் காட்டுகிறது. ரிச்மான்டின் ஒரு விசித்திரமனிதனின் குணச்சித்திரமான இது டிக்கன்சை இங்கிலாந்தின் புகழ்மிக்க நாவலாசிரியராக கைதூக்கிவிட்டது. ஏழைபணக்காரர்கள் எல்லோரும் வயிறு வெடிக்கச் சிரித்த கேலிச் சித்திரங்கள் ஆனாலும் கடன் சட்டத்தின் நிழலாக பிளீட் சிறைச்சாலையை பின்வரும் பெருஞ் சோகப் படைப்புக்கு ஒரு அபாயச்சங்காக ஊதியிருந்தான் டிக்கன்ஸ்.

1836, டிக்கன்சுக்கு ஒரு வசதியான வருஷம். மார்னிங் கிரானிகல் சகஊழியரான மிஸ்டர் ஹோக்ரத்தின் மூத்தமகள் காத்தரின் வாழ்க்கைத்துணைவியாக வந்துசேர்ந்தாள். சடுதியில் சார்லஸ் என்ற மகன் பிறக்கவே வாழ்வுக்கு வருமானமும் அத்தியாவசியமாயிற்று. புதிதாக பூர்த்தியடைந்து கைவசமிருந்த 'ஆலிவர் டுவிஸ்டு' பாலீங்டன் வீதியிலிருந்து வெளியான 'Bentley's misscellany' – யில் தொடராக வந்து சக்கைபோடு போட்டது. ஒடுக்கப்பட்டவர்களின் நலனுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்ட Poor law – வின் மோசடிகளை இது அம்பலப்படுத்தியது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று எச்சரிக்கையும் இதில் விடுக்கப்பட்டது.

மனிதாபிமானியாக டிக்கன்ஸ் மதக்கல்வி நிறுவனங்களில் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டு குறுத்தொடிவதை எதிர்த்த வேளையில் பரவலான படைப்பாளியாகவும் மாறத் தொடங்கினான். இந்த நேரத்தில் 'டாம்ஜோன்ஸ்', 'ஜில்பிளாஸ்', 'ரோடரிக்ராண்டம்', 'ராபின்சன் குரூசோ' போன்றவற்றில் பரிச்சயம் கொண்டதோடு அரேபியன் நைட்ஸ் கதைகளிலும் மனதைப் பறிகொடுத்திருந்தான். எனவே அவனது பிற்காலப் படைப்புகளின் போக்குகள் தடம்புரண்டு போனது.

எல்லா உன்னத கலைஞர்கள் வாழ்விலும் எவளாவது ஒரு பெண் குறுக்கிட்டு படைப்புக்குள் ஒளிந்திருப்பாள். எனினும் ஆங்கிலத்தில் அதிகம் காணலாம். மகாகவி பைரன் ஒரு கவிதைப் போட்டியில் கலந்துகொண்டு எதுவும் வராமல் கடைசிவரை மூஞ்சியை உம்மென்று வைத்திருந்துவிட்டு திடீர் என்று தான் சந்தித்த முதல் பெண்ணின் புன்னகை மின்னலிடவே 'The Lady blushed at the sight of the lord, என்று ஒரு வரிமட்டும் எழுதிவிட்டு வெளியேறினான். பக்கம் பக்கமானவைகள் வீசைக்குப் போக பரிசு இவனுக்கு விழுந்தது.

கிரேக்க ஹெலனிசத்தைக்கும்பிட்ட கீட்ஸ் பித்தம் முற்றி பேன்னி பிரௌனிக்கு எழுதிய நூறாவது காதல் கடிதம் இது:— "My sweet Fanny, will your heart never Change? My love will it? I have no limit now to my love... I cannot be happier away from you. Love is my religion. I could die for you. My creed is love and you are its only tennet My love is selfish. I cannot breath without you...."

படிப்பகம்

padippakam

— இதயமற்ற அவள் ஏரெடுத்தும் பார்க்கவில்லை. நீர்மேல் எழுத்தைப்போல் நெஞ்சுவெடித்துச் செத்த கீட்சின் கல்லறையில்,

"Here lies a man whose name
was written on water"

என்ற பரிதாபவரிகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்காட்டின் நிறைவேறாத காதல் 'மார்க்கரெட் கார்ப் பென்டர்' என்ற அவரை உதாசீனம் செய்த அழகியுடன் பிணைந்துள்ளது. அவள் தான்– எலன்டக்லாஸ், ப்ளோரா மசிவர், சோபியா வெல்வுட், ரோஸ் பிராட்வர்டின், காதரின் சயிட்டன், டயானாவெர்னன், லிலிஸ் ரெட்கான்லட், அலீஸ் பிரிட்ஜ்நார்த் அலீஸ்லீ, டீனி டேன்ஸ்– என்ற அவரது சரித்திரக் கதாநாயகி களாக வடிவெடுத்து வாளேந்திய வீரர்களுடன் குதிரை ஏறிப் பயணம் செய்திருக்கிறாள்.

டிக்கன்சின் முதல் காதல் **மேரியா பெட்னல்** என்பவளிடம் முறிந்து போனபோது அது 'டோராஸ்பென்ஸ்லோர்வாக (David copperfield) 'ஆர்தர் கிளிம்னனாக' (little Dorrit) வெளிப் பட்டிருக்கிறது. இருந்தாலும் **எலன்டெர்னன்** மீது ஏற்பட்ட தீராத மோகமே குடும்பம் இரண்டாகக் காரணம் என்று 'Life oF Dickens' எழுதிய Mr. Forster கருதுகிறார். இவளின் தாக்கங்களை அக்னிஸ், அமி, மேனட்டி முதலிய பாத்திரங்களில் பார்க்கலாம் டிக்கனிஸ்– டெர்னன் உறவைக் காதலாக கணக்கிட முடியாது. கடின உழைப்புக்கு மிருகபலம் தேவைப்பட்டபோது டிக்கனிஸ் சேம்பைன் மதுவையும் ருசி பார்க்க பழகிக் கொண்டான். எலன்டெர்னன் புளித்துப் போகவே தன் கொழுந்தியாள் **மிஸ் ஹோக்ரத்** நெருக்கமானாள். கடைசி வரைத்தொடர்ந்த இந்த உறவில் ஹோக்ரத் தன் அக்காள் புருஷனை தன்னுடைய சொந்த சொத்தாகவே ஆக்கிக் கொண்டாள். டிக்கன்சின் பெருவெற்றிகளுக்கு அஸ்திவாரமான இவள் கடைசியில் திருமணம் செய்து கொண்டாளா என்பதும் சந்தேகமாகயிருக்கிறது?

யார்க்ஷையர் பள்ளிக் கூடங்களின் அவல நிலைகளையும் கல்வித் திட்டத்தின் முறைகேடுகளையும் வன்மையாக கண்டித்து 'நிக்கோலஸ் நிக்கல்பீ'– வெளியான போது 50000 பிரதிகளும் ஒரே மூச்சில் விற்றுத் தீர்ந்தன. தான்படித்த வெல்லிங்டன் ஹவுஸ் அகாதமியின் வகுப்பு அனுபவங்களை 'டாம்பே அண்ட் சன்ஸ்', 'ஹார்டு டைம்ஸ்' நாவல்களிலும் இதேபோல் தொடர்ந்திருக்கிறான் டிக்கன்ஸ் இந்த வெற்றியின் இடை வேளையாக தந்தை கடைசித்தம்பியுடன் எக்சிட்டர் கிராமத்தில் ஒரு குடிசை வீட்டில் கொஞ்சகாலம் வாசம் தொடர்ந்தது.

திருப்பித் திருப்பி லண்டனையே சக்கரமாக சுற்றிக் கொண் டிருந்த டிக்கன்சுக்கு 'போர்' அடித்தது மட்டுமல்லாமல் ஓய்வும் தேவைப்பட்டது. எனவே 1842 வாக்கில் மனைவியுடன்

படிப்பகம்

padippakam

அமெரிக்கா சென்றபோது அமோக வரவேற்ப்பு கிட்டியது இது விஷயங்களை சேகரிக்கவும் மேலும் விரிவு படுத்தவும் வழி கோலியது. அமெரிக்க கருப்பு- வெள்ளை நிறப்பாகுபாடுகளின் பிரதிபலிப்பாக 'அமெரிக்கன் நோட்ஸ்'- அமெரிக்க நிறுவனங்களின் அலங்கோலச்சித்திரங்களாக- 'மார்ட்டின் சசில்விட்'- படைப்புகள் வெளியாயின. இது இங்கிலாந்து வாசகர்களை அந்நாட்டுக்குச் செல்லும் ஆவலைத் தூண்டிவிட்டது. ஆனால் ஜெனோவா பயணத்தில் இத்தாலிய அனுபவங்கள் Pictrue from Italy ஆக வந்த போன இலக்கியத்தரமாக அமையாமல் ஒரு பயணக்கட்டுரையாக - வழிகாட்டி நூலாகி விட்டது. மெசர்ஸ் பிராட்பரி அன்ட் ஈவன்ஸ் பதிப்பாளர்கள் இணைப்பில் 'Christmas coral' மதநல்லினக்க முயற்சி ஒப்பந்தமாகி லண்டன் திரும்பியதும் எழுதப்பட்டபோது ஒரு புதிய உத்வேகம் தெரிந்தது.

1844-ல் புகழ்பெற்ற கலைஞர் தாமஸ் கார்லைலின் சந்திப்பு முக்கியமானது. இதே போல் சுவிட்சர்லாந்தின் இயற்கையை தரிசித்துவிட்டு பாரிஸ் நகரத்தில் கொஞ்ச மாதங்கள் கழிக்கும் போது அலெக்ஷாண்டர் டுமாஸ் விக்டர் ஹியுகோ இருவரையும் சந்தித்து விவாதங்களும் நடத்தியிருக்கிறான். டுமாஷின் சரித்திரச் சிடுக்கின் தொடர்பில் கூட A Tale of Two cities தோன்றியிருக்கலாம். டிக்கன்சின் தனித்துவம் இதில் பதியவில்லை,

இளைப்பாறிய இந்தத் தருணத்தில் - மிகப் பெரிய நாவலாசிரியர் நீர்த்துப் போய் விட்டதாக நினைத்து கொண்டிருந்த வேளியில்தான் அந்த மவுனத்தை கலைத்துக் கொண்டு சக்தி வாய்ந்த ஒரு குண்டு வெடித்தது. அதுதான் 'டேவிட் காப்பர்பீல்டு' கைவிடப்பட்ட குழந்தையான டேவிட் அழுக்குச் சட்டையுடனும் சிந்திய மூக்குடனும் தூக்குப் போனியில் சோற்றை ஊற்றிக் கொண்டு- லண்டன் வீதிகளில் எதிர் காலத்துக்கு ஏங்கியலைந்த போது உலகமே கண்ணீர்விட்டது. இதுவே டிக்கன்ஸின் மாஸ்டர் பீஸ் என்பதை அவரே குறிப்பிடுகிறார். 'Of all my books I like this the best. It will be easily believed that I am a fond parent to every child of my fancy and that no one can ever love that family as dearly as I love them; but like many fond Paernts- I have in my heart of hearts a favourite child and his name is David copper field."

பல பொது அரங்கங்களில் தன் நாவல்களை வாசித்துக் காட்டி பிரமாதமான பேரும் புகழும் பெற்றிருந்த சற்றேரக் குறைய இந்நேரத்தில்தான் தந்தை ஜான்டிக்கன்சையும் இளையமகள் டோராவையைம் இழந்து எழுத முடியாமல் கையொடிந்து நின்றான். கடைசிக் காலத்தில் அவர் ஆரம்பித்திருந்த 'Daily News' பத்திரிக்கையும் கையைக் கடித்துவிடவே டிக்கன்ஸ் பெரிய நொடியில் சிக்கித் தவித்தான். அப்போது அவன் 58-வது வயதில் நின்றுகொண்டிருந்தான் சாதாரணமாக இது ஒரு அரசு ஊழியனின் ஓய்வு வயது தான்.

படிப்பகம்

padippakam

முற்றுப்பெறாத The mystery of Edwindrood நாவலின் நடுப்பகுதிகள் எழுதிக் கொண்டிருக்கும்போது இருக்கையை விட்டு எந்திரிக்க எத்தனித்தவன்தான்- நெஞ்சுவலி கண்டு கீழே விழுந்தான். பேச்சு மூச்சில்லை. ஓடிவந்த ஹோகரத் தூக்கி நடமாட வைக்க முயற்சித்தும் பயனில்லை. அடுத்த இருபத்து நாலுமணி நேரத்தில் அதாவது 1870 ஜூன் ஒன்பதாம் தேதி, ஆவி பிரிந்தது. செய்தித்தாள்கள் மரணச் செய்தியை கொட்டை எழுத்தில் போட்டு கௌரவப்படுத்தின. அரசியார் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்திருந்தார். எழுதி ஓய்ந்த சார்லஸ்சின் உடல் வெஸ்ட்மினிஸ்டர் அபே பொயட்ஸ் கார்னரில் எளிமையாக அடக்கம் செய்யப்பட்டது. இதுவே உலகின் மிகப்பெரிய படைப்பாளியும் மனிதாபிமானியுமான **சார்லஸ் டிக்கன்சின் கதை.**

III

சார்லஸ் டிக்கன்ஸ் படைப்புகள் எண்ணிக்கையில் மொத்தம் நாற்பத்தி இரண்டு. A Childs History of England- நீங்க ஏனைய நாற்பத்தி ஒன்றும் நாவல்கள்தான் பெரும்பான்மையான 30 தவிர, மீதி 11 உதிரிகள். கதையென்றும் கற்பனையென்றும் அவரதில் தனியாக கிடையாது. பக்கபலமான சம்பவங்களும் பாத்திரங்களுமே ஏராளம். இப்பகுதியில் அனைத்து நாவல் களையும் முழுமையாக சொல்ல முடியாது. எனவே காலக் கிரமப்படி அவற்றின் சுருக்கங்களை மட்டும் தொட்டுப் பார்ப்போம்.

ஸ்கெட்சஸ் பை பாஸ் டிக்கன்சின் முதல் படைப்பு. இவை. கள் ஒரு இல்லஸ்டிரேசன்ஸ் போன்ற கருத்துக்கார்ட்டுகள். முதல்பகுதி 'மிசஸ் ஜோசப் போர்ட்டர்' என்றும் இரண்டாவது 'தி போர்டிங் ஹவுஸ்' – என்ற தலைப்பிலுமான உதிரிச் சித்திரங்கள். திருச்சபை வட்டார ஏழை எளியோரின் தினசரி வாழ்க்கைகள், மகளிர் மன்றங்கள், பைபிள் விந்நியோகக் கழகங்கள், பொழுது போக்குக் கிளப்புகள், டாக்டர்கள், வட்டிக்கடைகள், கைதிகள் முதலிய லண்டன்வாழ் மக்களின் இயல்பை படவிளக்கங்களுடன் சித்தரித்திருக்கிறான் டிக்கன்ஸ். 'பாஸ்' என்பது விக்கர்ஆப்வேக்பீல்டில் வரும் ஒரு செல்லக் குழந்தையின் பெயர். நம்மூரில் 'பாபு' என்று கூப்பிடுவதைப் போல். டிக்கன்ஸ் விரும்பி வைத்துக்கொண்ட இப்பெயர் ஆங்கிலக் குடும்பங்களில் நிலவும் 'மோசஸ்' என்பதின் பேச்சு வழக்குச்சுருக்கம்.

போஸ்துமஸ் பேப்பர்ஸ் ஆப் தி பிக்விக் கிளப் – ஆங்கிலஇலக் கியத்தின் மகோன்னதை ஹாஸ்யப் பொக்கிஷம். மிஸ்டர் சாமுவேல். பிக்விக் ESQ; G.C., MPC., இதன் ஸ்தாபகரும் பொதுச் செயலாளருமாவார். அவரே இதன் Perpectual President திருவாளர்கள் ட்ரேசிடப்மேன், அகஸ்தஸ் ஸ்நாட்கிரஸ், நேதானியல் வின்கிள் இவர்கள் நிலைத்த செயற்குழு உறுப்பினர்கள். நிம்ராட் கிளப்பின் உண்மையான காட்சி களான இவைகள் டான் க்விக்ஷாட்டையும் ஜேசூசையும்,

படிப்பகம்

padippakam

சர்ஜான் பால்ஸ்டாபையும் கிழிறக்கவிடுகிறது டிங்லிடெல் பயணம் தொடங்கி பல பயணஅனுபவங்கள், பார்த்த மனிதர்களின் பழக்கவழக்கங்கள் விளையாட்டு விரதிரங்கள் கவிதை, விஞ்ஞான, அறிவுகளை பரப்புதலையும், மேம்படுத்தலையும் பிக்விக்கும் அவர் கூட்டளிகளும் நோக்கமாக செய்கிறார்கள். கவிஞர் ஸ்நாட்கிராஸ் செத்துப்போன தவளைக்கு இரங்கற்பா பாடி திருமதி லியோ ஹண்டர் என்ற இலக்கியப் பெண்மணியிடம் பேர் வாங்கியவர். சாம்வெல்லர், வார்டில், திருமதி பார்டெல் அலன் அரபெல்லா, கேப்டன் டாவ்லர் முதலியோர் நிறைதந்த நட்சத்திர நகைச்சுவை உலகம் இது. சார்லிசாப்ளின் லாரல் ஹார்டி சேஷ்டைகள் இதிலிருந்து தழுவிக்கொள்ளப் பட்டவைதான். 1837-ல் இரண்டுபகுதிகள் ஒன்றாக்கப்பட்டு மிஸ்டர் சர்ஜென்ட் டால்போர்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நாவல் இது.

தி அட்வென்சர்ஸ் ஆப் ஆலிவர் ட்விஸ்டு (1937 – 38)

ஆலிவர் அநாதை. பெயர் தெரியாதவன் ஒரு ஓர்க்ஹவுசில் குழந்தையாக தவழும்போதே தாய் மரித்துவிடுகிறாள். ஒரு இருபது முப்பது இளங்குற்றவாளிகள் புவர்லா சட்டத்தை மீறியதற்காக திருமதி மேன் என்பவளால் கொடுமையாக வேலைவாங்கப்படுகிறார்கள். சோற்றுக்காக திருடியவர்களையும் பம்பிள் என்ற குண்டன் அடித்து வேலைவாங்குகிறான். அநாதைகளை அடைக்கப்பட்டிருந்த அறையின் கற்கள் பெயர்ந்திருந்தன. இரண்டு இரும்புகேட் போடப்பட்டு பெரிய மாஸ்டரும், சமைத்த உணவை பார்த்துக்கொள்ள இரண்டு பெண்களும் எப்போதும் காவலிருந்தனர். ஏதோ திருவிழா சமயங்களில்தான் ஒரு கால்ரொட்டி கூடுதலாகப் போடுவார்கள். சோற்று ஏனங்களை கழுவத்தேவையில்லை பையன்களே கரண்டியிலும் நாக்கிலுமாக நக்கி சுத்தமாக பிரகாசிக்க வைத்துவிடுவார்கள். ஆலிவரும் அவன் கூட்டாளிகளும் இப்பசிக்கொடுமையை சகித்திருந்தார்கள். ஒரு தடிப்பையன் (அவன் தந்தை சிறு ஓட்டல் நடத்தியவன்) இப்படியே போனால் பக்கத்தில் தூங்கிக்கொண்டிருக்கும் இந்த சின்னப்பையனை கொன்று தின்னப்போகின்றேன் என்றபோதுதான் கூட்டம் போட்டு 'அதிகச்சாப்பாடு' கேட்கும் முறை ஆலிவர் தலையில் விழுந்தது. கையில் கரண்டியுடன்.

'please Sir. I want some more' என்றான், அவ்வளவுதான். 'The Boy will be hung' என்று சிறைக்கு அனுப்பப்பட்டான் 5 பவுனுக்கு, சாவர்பெரி என்ற மடஅதிகாரியிடம் அப்ரன்டிசாக இருந்துவிட்டு அவன் அடக்குமுறையும் தாங்காமல் வெளியேறுகிறான். ஆலிவர் ஒடுக்குமுறைக்கு ஓடஓட பலியானபோது மிஸ்டர் ஜான்டாவ்கின்ஸ் என்ற ஆர்ட்புல் டாட்ஜரிடம் சிக்கி திருட்டுசாமான்கள். கடிகாரங்கள், தங்கநகைகள் ரகசியமாக கைமாற்றிக்கொள்ளும் வேலையில் ஈடுபட்டிருந்தான். ஏகப்பட்ட சிறுவர் சிறுமிகள ஒரு வேளை சோற்றுக்காக இவனிடம் விற்கப்பட்டிருந்தனர் இங்கிருந்தும் தப்பித்து ஓட மீண்டும் கையும் களவுமாகபிடிபட்டு பேஜின், சைக்ஸ், டோபி

படிப்பகம்

padippakam

கிரேகிட் - என்ற அயோக்கியர்களின் அதே தொழிலில் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டு ஒரு வீட்டிற்குள் சிறைவாசம். ஒரு நல்ல நாளில் கொள்ளைக்கூட்டம் ஒன்று அந்த வீட்டைச் சூறையாடி ஆலிவரையும் தூக்கிக் கொண்டு டிச்சியில் எறிந்து ஓடியது. மயக்கம் தெளிந்த ஆல்வர் திருமதிமேய்லி வீட்டின் வாசல் படியில் ஆதரவு தேடி நிற்கின்றான். அவன் சோகக்கதையை கேட்டு அன்புருகி அவ்வீட்டுக்காரப் பெண், ரோசி அவனைப் படிக்க வைத்து வாழ்வு தருகிறாள். ஆலிவர் ட்விஸ்டின் தாய் தந்தை வரலாறும் வறுமையும் சொல்லப்படுகிறது. ஒருவகையான சாத்வீகப் போராட்டம் இந்நாவில் இழையோடியிருப்பதால் புனிதமான Jack shepherd, Paul Clifford, Rookwood வகையறாக்களில் இது சேர்க்கப்படுகிறது.

தி மட்போக் அசோஷியேசன் ; அறிவியல் வளர்ச்சிக்கான பிரிட்டிஷ் மாநாடு ஒன்றை மட்போக் என்னுமிடத்தில் கூட்டியிருந்தது பற்றிய அறிக்கையின் தாக்கலான இந்நாவல் டிக்கன்ஸ் பென்டிலிஸ் மேகசைனின் எடிட்டராக இருந்த போது 1837-38 வாக்கில் வந்தது. இதன் நீளத்தலைப்பு, Full report of the First meeting of the mudfog association என்பதாகும். இதன் இரண்டாவது மாநாடு ஓல்டு கேசில் என்ற இடத்தில் கூட்டப்பட்டது.

தி லைப் அன்ட் அட்வென்சர்ஸ் ஆப் நிக்கோலஸ் நிக்கல்பி : 1939-ல் டிக்கன்ஸ் அட்டைப் படத்துடன் பதிப்பிக்கப்பட்ட இந்நாவல் W. C. Macready என்பவருக்கு அர்பணிக்கப்பட்டதென்றாலும் இதுவும் தொடராக வந்ததுதான். இதன் மைய நோக்கம் இங்கிலாந்து கல்வியை ஓரங்கட்டியதை தோலுரித்துக் காட்டுவதாகும். யார்க்ஷையர் ஸ்கூல் மாஸ்டர்களின் பாரம்பரிய கோழிமுட்டை ஞானமும், அவர்களின் அறியாமை அடாவடித்தனங்களும் இதில் படுகேலி செய்யப்பட்டிருக்கின்றன. நிக்கோலஸ் நிக்கல்பி தந்தையை இழந்து தாயாரின் அரவணைப்பில் வளர்ந்த ஒரு இளைஞன். நேர்மை, உழைப்பு, சுறுசுறுப்பு இவன் விஷேச குணங்கள் முன்னேறத்துடிக்கும் இவனை சித்தப்பா ரால்ப் நிகல்பி லண்டன்வீட்டுக்கு தங்கையுடன் தாய் அனுப்பிவைக்கிறாள் அழையா விருந்தாளியாக வேண்டா வெறுப்புடன் வரவேற்பு. யார்க்ஷையரில் மிஸ்டர் வாக்போர்டு ஸ்கூரிஸ் நடத்தும் டோத்பாய்ஸ் ஹால் பள்ளியில் ஆசிரியராக சேருகிறான். ஸ்மைக் என்ற உதாசீனப்படுத்தப்பட்டு அரைப்பட்டினி கிடக்கும் மாணவனுக்கு ஆதரவுதந்து நிர்வாகத்துக்கு எதிராக கொடி பிடிக்க வேலையை இழக்கின்றான். பிறகு போர்ட்ஸ்மவுத்தில் ஒரு நாடகக்குழுவில் சேர்ந்து. நடிகனாகின்றான். ஷேக்ஸ்பியரின் ரோமியோ-ஜுலியட் போன்ற படைப்புகள் இக்காலத்திலும் நடத்திக் காட்டப்படுவதும் தெரிகிறது. இந்நிலையில் தாய் தங்கை இருவரையும் அவமானத்திலிருந்து காப்பாற்றி லண்டனுக்கு கூட்டி வருகின்றான். பெருந்தன்மையான சீரியில் பிரதர்ஸ் இரட்டைப் பணக்காரர்களின் ஆதரவில் மேடலின் என்பவளை மணந்து வாழ்கின்றான். இந்நாவலில் கோச்வண்டி கவிழ்ந்த அத்தியாயத்தின் போது-யார்க் நகரின் ஐந்து சகோதரிகள் கதை

படிப்பகம்

padippakam

தேவன்ஷையரி வாழ்க்கை விவரணைகள், ஸ்மைக் கேட் என்ற பெண்ணை காதலித்து ஏமாந்த விஷயங்கள் பேசப்படுகின்றன. நியுமன் நாக் என்ற பாத்திரமும் முக்கியமாக இடம் பெறுகின்றது. நிக்கல்பி தன் தங்கை மீதும் தாய்மீதும் காட்டும் பாசத்தை டிக்கன்ஸ் வேறு எதிலும் இப்படி விசேஷமாக சித்தரிக்க வில்லை. ஒருகுடும்பக் கதையின் அம்சம் இதில் பிரமாதமாக வந்திருக்கிறது.

ஸ்கெட்சஸ் ஆப்யெங் கப்புள்ஸ் : இது 1840-ல் பிரசுரமான குடும்பக் காதலர்கள் பற்றிய ஒரு சுவாரஷ்யமான நாவல் இது. பெரிதாக குறிப்பிட எதுவுமில்லை.

மாஸ்டர் ஹம்பிரீஸ் கிளாக்; வாராந்திரக் கதம்பமாக 1840-ல் வந்த இது - பழைய கடிகாரத்தின் கீழ் ஒரு மன்றம் போல் அமைத்து பெரும்பாலும் வாரத்தின் ஓரிரவில் மாஸ்டர் ஹம்பிரி என்ற பெரியவர் கதைசொல்லும் விஷயத்தில் நாவலாகத் தொகுக்கப்பட்டது. யுக்தி விஷேசத்திற்காக ஒரு மாறுதலே தவிர மற்ற நாவலின் சில பகுதிகளையும் பாத்திரங்களையும் இந்நாவல் உள்ளிழுத்துக் கொண்டுள்ளது.

தி ஓல்டு கியூரியாசிட்டி ஷாப் ; மாஸ்டர் ஹம்பரீஸ் பழைய கடிகாரத்தில் கீழ் மன்ற அங்கத்தினர்களுக்கு சொன்னதாக இக்கதை. பழைய விசித்திர சாமான்கள் விற்பனை வியாபாரத்தில் நொடித்துப் போன ஒரு கிழவனையும் அவன் எதிர்காலமான நெல் என்ற அவள் பேத்தியைப் பற்றியுமான பாசப்பின்னல். குடிகாரத் தாத்தாவுடன் விதிவீதியாக அலைகிறாள் நெல். சூதாடி ஜெயித்தாவது அவளை பணக்காரியாக வாழவைக்கப் போராடுகிறான். ஆனால் இருப்பதையும் இழந்து பிச்சைக்காரனாகி விடுகிறான். கண் தெரியவில்லை. காது கேட்கவில்லை. படிப்படியாக திருத்தி குழந்தை அவனை கிராமத்துக்கு கைபிடித்துச் கூட்டிச் செல் கிறாள். பனியும், வெயிலும், பட்டினியும் ''நெல்லைக் கொன்றுவிடு கிறது. நெல் புதைக்கப்பட்டகுழியில் கிழவனும் உயிர்விடுகின்றான். கிட் என்ற வாலிபனும் ஸ்கூல் மாஸ்டர் ஒருவரும் அவர்களுக்கு வழித்துணையாக வந்து உதவினார்கள். லண்டன் தெருவின் இரவுப் பிச்சைக்காரர்கள், பகல்நேரப் பரதேசிகள், பட்டினிப் பட்டாளங்கள் இந்நாவலில் பூரணமாக சித்தரிக்கப் படுகிறார்கள். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்போது, படைத்தவனுக்கு மட்டும் எதற்கு மூன்று மூஞ்சி? லிட்டில் நெல் துக்கங்களில் நாடே விசனப்பட்டது. கடைசி அத்தியாயங்கள் அமெரிக்க வாசகர்களை கண்ணீர்விட வைத்துவிட்டது. கப்பல் நியூயார்க் துறைமுகத்தை அடையுமுன்னரே, கரையிலிருந்தே, 'லிட்டில் நெல் இறந்து விட்டாளா?' என்று பதைபதைப்புடன் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். ''நெல்லின் பிஞ்சு நெஞ்சமும், கள்ளங் கபடமற்ற முகமும், வாழத்துடித்த கண்களும்'' அவள் இறந்த போது என்னையறியாமல் நானும் கண்ணீர் விட்டேன் என்று டிக்கன்ஸ் ஒத்துக்கொள்கிறான். பாசப்பரிட்சை வைத்து நாடிழந்த முட்டாள் லியர் மன்னன் புயலில் சிக்கி பைத்தியமாகி

படிப்பகம்

padippakam

தெளிந்தபோதுதான் கடைசி மகள் கார்டீலியாவின் உண்மை அன்பை உணருகிறான். இந்நாவலை டிக்கன்ஸ் மையில் தொட்டு பேனாவிலும் பேப்பரிலும் எழுதவில்லை. கண்ணீரில் எழுதி நெஞ்சை நனைத்திருக்கிறான். டிரேஜிடிகளுக்கு Purgation முக்கியமானதாக அரிஸ்டாட்டில் வரையறை செய்கிறான்.

பர்னபீ ரட்ஜ் (1841): ஜார்ஜ் கார்டன் பிரபுவின் தலைமையில் 1780 லண்டன் கலகம் பிரசித்தி பெற்றது. அதன் பயங்கரங் களிலும், குழப்பத்திலும் அடிபட்டு பாதிககப்பட்டவன் வாலிபன் பர்னபீ. பாதி முட்டாளும், அரைப்பைத்தியமுமான அவன் பிடிபட்டு பலிகிடா ஆவதின் வரலாற்றுப் பின்னணி. இக்கதை அரசியல் ஆதாயங்கள் தனிமனிதனை அழிப்பதாக சித்தரிக்கிறது.

எ கிருஸ்துமஸ் கோரல் (1850): கிருஸ்துமஸ் கதைகளின் வரிசையில் முதலாவதாக வந்த உரைநடையான இது ஒருவகை யான பேய்-பூத பயங்கரத் தன்மையில் அமைந்துள்ளது. பைபிள் கதைகளிலும் டிக்கன்சுக்கு ஈடுபாடு இருந்திருக்கிறது என்பதை இங்கு நாம் பார்க்க முடிகிறது. சர்ச் விவகாரங்கள் சீசன் சமயங்களில் மட்டும் பேசப்பட்டு அது முடிந்ததும் கவனிக்காமல் கிடப்பதை இதில் விமர்சனம் செய்கிறான் டிக்கன்ஸ்.

தி சிம்ஸ் (The Chimes): இரண்டாவது கிருஸ்துமஸ் அலைவரிசையாக 1844-ல் வந்த இது புது வருஷம் வந்ததற்கும், பழையது போனதற்கும் இடையில் மடாலயத்தில் மணியடிக்கப் பட்ட போது வாசிக்கப்பட்ட ஒரு காப்ளின் கதை. அதேபோல் **தி கிரிக்கெட் ஆன் தி ஹெர்த்**. ஒரு வீட்டின் சாமிக்கதையாக 1945-ல் வெளிவந்தது. 1846-ல் பதிப்புப் பெற்ற **தி பேட்டில் ஆப் லைப்** ஒரு காதல் கதையாகும்.

மார்ட்டின் சசில்விட் (1843): அமெரிக்கப் பயணத்தின் பிரதிபலிப்பாக – ஒரு யாத்ரிகனின் இயல்புகள் துல்லியமாகச் சித்தரிக்கப்பட்ட இதை **எமர்சன்** பாராட்டியுள்ளார். மார்ட்டின் தன் பாட்டனுக்கு வளர்ப்புப் பிள்ளை, கொள்ளுப் பேரன் போல் பாவிக்கப்படுகின்றான். மேரிகிரகம் என்பவளைக் காதலித்த குற்றத்திற்காக வாரிசாக வேண்டியவன் வெளியேற்றப் படுகின்றான். மிஸ்டர் பெக்ஸ்னிப் சிவில் என்ஜினியராக படிக்கப் பிடிக்காமல் நண்பன் மார்ட்டினுடன் அமெரிக்காவுக்கு கப்பல் ஏறுகின்றான். நியூயார்க்கில் கண்ணும் கருத்துமாக சேர்த்தி வைத்து ஏடன் என்ற இடத்தில் ஏராளமான நிலங்களை வாங்கி வளைத்துப் போடவே காதலியையும் திருமணம் செய்து கொள் கிறான். சோதனைகளுக்கிடையில் மீண்டும் பாட்டனுக்கு நம்பிக்கை திரும்பவே அவனை வரவழைத்துக் கொள்கிறான். இதில் அமெரிக்கச் சூழலும் பாத்திரங்களும் ஊற்றெடுத்துப் பாய்ந்துள்ளன.

டாம்பி அன்ட்சன்: இது இருபது தொடர்களாக 1948-ல் வெளியானது Dr. பிளிம்பர்ஸ் கல்வி நிறுவனச் சீர்கேடுகளை டிக்கன்ஸ் இதில் அம்பலப்படுத்தியுள்ளான். டாம்பி-க்கு 85 வயது

படிப்பகம்

padippakam

முதிர்ந்தபோது பால் என்ற மகன் பிறந்தான். அவன் சந்தோஷம் முழுவதும் அக்குழந்தையின் எதிர்காலம்தான். அது இறந்து ப்ளோரன்ஸ் என்பவளை இரண்டாந்தாரமாக்கிக் கொள்ள ஒரு பெண் பிறக்கிறது. இருப்பினும் நினைவெல்லாம் பையன் பேரில் தான். பைத்தியம் பிடித்தாற்போல் மனைவி, மகளை வெளியில் துரத்திவிட்டு ஏகாந்த வாழ்க்கை நடத்துகிறான். பிடிவாதத்தால் வீடு வாசல் இழந்து கடனாளி ஆகின்றான். வழக்கம்போல் டிக்கன்ஸ் ஜெயில் காட்சிகளைக் காட்டத் தவறுவதில்லை. மகள் வால்டர் என்ற இளைஞனைத் திருமணம் செய்து கொண்டு சீனா குடியேறி விடுகிறாள். மனைவியும் மதிக்காமல் திரியவே, பிரிவில்தான் மகளின் பாசத்தை டாம்பி உணருகிறான். இறுதியில் இணைந்து விடுகிறார்கள்.

தி ஹான்டட்மேன் (1848): (The Haunted man – and the Ghosts Bargain : மிஸ்டர் ரெட்டோவ் என்ற பிரபல ரசாயன விரிவுரையாளனின் 'மெலங்காலிக்மூட்' சித்தரிக்கப்படுகிறது. ஒரு கிருஷ்துமஸ் அன்று வீட்டை அலங்கரித்து எல்லோருக்கும் ரொட்டியும் தேநீரும் வழங்கும் போது சமூகத்தோடு ஒட்டப் பழகிக் கொள்கிறான். இதுவும் கிருஷ்துமஸ் கதைவரிசையை சேர்ந்ததுதான்.

டேவிட்காப்பர்பீல்டு: கதாநாயகனே கதைசொல்லும் 'சப்ஜெக்டிவ்'யுக்தியில் ஆசிரியர் தன்னையே முழுமைப்படுத்திக் கொள்கிறார் 1850–ல் வந்த இந்நாவலுக்கு டிக்கன்ஸ் இட்ட தலைப்பு: "The Personal History, adventures Experiences, and observations of David copperfield the younger of Blunderstone Rookery" தன் தாயாரின் கணவன் மர்ட்ஸ்டோன் தன் தந்தையல்ல என்று தெரிந்ததும் டேவிட் அவன் கையை கடித்து விடுகிறான். 'Take care of him. he bites' என்று முதுகில் ஒட்டப் பட்டு கிரேக்கில் பள்ளிக்கு அனுப்பப்படுகிறான். ஒயின் ஷாப்பில் வாரத்துக்கு 6 ஷில்லங் சம்பளத்திலிருந்து தப்பி அத்தை வீட்டுக்குப் போக காண்டர்பரியில் கொஞ்சம் கல்வி தரப்படு கிறது. அத்தை இறந்து விடவே ஸ்டெனோகிராப்பி படித்து பார்லிமெண்டரி ரிப்போர்ட்டராக வேலை பார்க்கிறான். ஸ்பென்ஸ்லோவின் மகள் டோரா குழந்தை மனைவியாகவே மடியில் இறந்துவிட வாழ்க்கையில் விரக்தியுற்று பத்திரிக்கையில் எழுதி பெரிய இலக்கிய ஆசிரியனாகி விடுகின்றான். மன அவஸ்தையில் வெளிநாடு சுற்றிவிட்டு இங்கிலாந்து திரும்புகிறான். ஏற்கனவே லார்க்கின்சை காதலித்து ஏமாந்த டேவிட் – அக்னிசை நினைத்து நம்பிக்கை பெறுகின்றான். கொடுமைக் காரன் மர்ட்ஸ்டோன், மிரட்டல் காரிஜேன், அத்தை பெட்ஸி, தாயார் கிளாரா. வில்கின்ஸ் மிகாபர், மற்றும் குழந்தைகள் நண்பர்களான ஹாம், எமிலி, ஸ்டியர் போர்த், வேலைக்காரன் பார்கிஸ், வக்கில் குமாஸ்தா உரியாஹீப், பாத்திரங்கள் நாவலுக்கு வளம் சேர்க்கின்றன. ப்ளாக்கீத் பள்ளியில் நடக்கும் கொடுமைகளும், எமிலியின் காதல் தோல்வியும் உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சிகள்.

படிப்பகம்

padippakam

பெக்கட்டி நர்ஸ் – தோழி – வேலைக்காரி. டேவிட்டின் மீது கொள்ளையன்பை பொழிந்தவள். அவனை அள்ளி அணைத்துக், குனிந்து கொஞ்சும் போது கொழுத்த குண்டியான அவளது சதைகள் முதுகுக்கவுனின் பட்டன்களை பிய்த்து எறிய விட்டிருக்கிறது. கருங்கண்களையும், சிவந்த கன்னங்களையும் கொஞ்சம் ஏமாந்தாள் காக்கை குருவிகள் ஆப்பிள் என்று நினைத்து கொத்தின்று விடும் அளவுக்கு அவள் முகம் லட்சணமாயிருந்தது. டேவிட் – பெக்கெட்டி இளமைக்கிலேசங்கள் ஒரு கைக்கிளைக் காதல்தான். தி. ஜானகிராமனின் 'மோகமுள்' பாபு – யமுனா, இதிலிருந்து ஊதிய பொறியாகக்கூட இருக்கலாம். கட்டியவனால் கைவிடப்பட்ட பெக்கட்டி ஆஸ்திரேலியா போயும் கூட டேவிட்டை மறக்காமல் நெஞ்சில் குடிவைத்திருந்தாள் – ஒரு குழந்தைக் காதலனாக, நமது விநாயகர்சாமி தாயைப்போலவே அழகான மனைவி வேண்டும் என்று தவமிருந்தது போல்...

பிளீக்ஹவுஸ்: The law is an ass – a idiot என்று வர்ணித்த டிக்கன்ஸ் – சட்டத்தின் ஓட்டைகளையும், தீர்ப்பு வழங்குதலின் தாமதத்தையும் – அதனால் ஏற்படும் செலவினங்கள் கால விரயங்களை – இந்நாவலில் கோடிட்டு காட்டுகிறான். சான்சரி உயர்நீதிமன்றம் ஜார்ன்டஸ் அன்ட் ஜார்ன்லெடஸ் வழக்கு விசாரணையை தள்ளிப்போடுகிறது. சான்ஸ்லர் பிரபு சட்ட நாயகனாக தன்னைகாட்டிக்கொண்டும் பிளீக் ஹவுசில் குடியேறும் வரை இழுத்துக்கொண்டு போகிறார். லேடி டெட்லாக் மறக்கமுடியாத பாத்திரம். டிக்கன்சின் சட்ட அறிவை புலப்படுத்தும் சிகரநாவலான இது அவரது பெரும் படைப்புகளில் சிறந்ததாக கருதப்படுகிறது.

ஹார்டு டைம்ஸ்: (Hard Times for three times) 1854-ல் Household words – ல் வெளியாகி நூல் வடிவாக வந்தபோது தாமஸ் கார்லைலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. கிரிமியன் போர் சம்பவங்கள், அரசியல் கண்ணோட்டங்கள், தொழிற்ச்சங்க பிரச்சினைகள் – தீமைகளின் பிரதிநிதிகளாக இதில் சொல்லப் படுகின்றன. மூன்று பாகங்கள் கொண்டுள்ள இதில், மிஸ்டர் தாமஸ் கிரேட்கிரின்ட், லூசியா, டாம், சிசியா. ஸ்டீபன், முதலியோர் நடமாடுகின்றனர். இதுவும் டிக்கன்சின் மேதைத் தனத்தை பறைசாற்றும் படைப்பாகும்.

வாலிபன் ரிச்சர்ட் டபுள்டிக் மேரிமார்ஷல் என்ற அழகியின் துரோகத்திற்கு ஆளாகி பிரெஞ்சுப் படையில் சேர்ந்து வாட்டர்லூ சண்டையில் காயமடைந்து பிறகு பிழைத்துக் கொள்ளும் சம்பவங்கள் அடங்கியது-**தி செவன் புவர் டிரேவலர்ஸ்.** (1854).

தி ஹோலிட்ரீ (1855): மாஸ்டர் ஹேரி தன்னை நோரா காதலில் கைவிட்டுவிட்டாள் என்று வெதுப்புற்று அமெரிக்கா ஓடிவிட வழியில் ஹோலி மர விடுதியில் தங்குகின்றான். அங்கு பழைய புத்தகங்களையும் தினசரிகளையும் புரட்ட அதில் சேதி தெரிய மீண்டும் அவளைத் தேடிப்பிடித்து கல்யாணம் செய்து கொள்கின்றான்.

படிப்பகம்

padippakam

மார்சல்சீ சிறைச்சாலையின் நினைவுகளில் 1856-ல் **லிட்டில் டோரிட்** - மலர்ந்தபோது அது 'ஓல்டுகியுரியாசிட்டி ஷாப்' 'நாவலுக்கு இணையாக கருதப்பட்டது. டிக்கன்சின் கைவண்ணம் நூற்றுக்கு நூறு இதில் விளையாண்டிருக்கிறது. 'Mr. Dorrit becomes the father of marshalsea-எனுமளவுக்கு சிறையிலேயே முதுமையடைந்திருக்கிறாள் தன் அம்மாவுக்கு தையல் வேலை செய்துதந்த லிட்டில் டோரிட்டை நேசித்து ஆர்தர் கிளிம்னம் அவளுடைய தந்தையை விடுவிக்கின்றான். அவளுடைய தாயும் சிறையில் தான் அவளைப்பெற்றாள். ஜெயிலின் செல்லப்பிள்ளை யாக வளர்ந்த லிட்டில் டோரிட் கிளிம்னமை திருமணம் செய்து கொள்கிறாள். கடன் சட்டத்தின் மீதான சக்தி வாய்ந்த பிரயோகம் இந்நாவல்.

எ டேல் ஆப் டு சிட்டீஸ் (1859): பிரெஞ்சுப் புரட்சியின் சரித்திரப் பின்னணி கொண்ட இந்நாவல் சிட்னிகார்டனின் காதல் தியாகம் பெரிதாக சிலாகிக்கப்படுகிறது. லண்டன்-பாரிஸின் கொந்தளிப்பான நிலைகள் 1775-ல் எப்படியிருந்தது என்பதை மக்கன்ஸ் படம்பிடித்துக் காட்டுகிறார். ஆஸ்பத்திரியில் ஒரு யுவதிக்கு புரட்சியில் நடந்தவற்றை பார்த்தபோது பைத்தியம் பிடித்துவிடுகிறது: 'என் கணவர், என் தந்தை,.... என் தம்பி...' என்று தானாகவே புலம்புகின்றாள். பாரிசில் ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. சீவப்பட்ட தலைகளுடன் செங்குருதி சிந்த டம்பிரில் வண்டிகள் அச்சத்துடன் உருண்டோடு கின்றன. லூசிமேனட்டி தூக்குத் தண்டனையிலிருந்து தப்பித்த சார்லஸ்டார்னேவுடன் பூவோடும் பொட்டோடும் வாழ்கிறாள். உணர்ச்சிவசப்படும் மெலடிராமாடிக் கட்டங்கள் வந்தாலும் இது பெரிய சரித்திர நாவலில்லை. சரித்திரத்துக்கு கண்ணை மூடிக்கொண்டு ஸ்காட்டை படிக்கலாம், இதில் கையாளும் ஆள்மாறாட்ட யுக்தி (mistaken idendity) 'மெர்ச்சன்ட் ஆப் வெனிஸ்', 'டுவல்த்நைட்'களை நினைவுபடுத்துகிறது.

ஹன்டடுடவுன்: இது 1859-ல் 'தி நியூயார்க் லெட்ஜர்' 'பத்திரிக்கையில் வெளிவந்தது. மிஸ் மார்க்கரெட் என்ற பெண் இன்சூரன்ஸ் செய்திருந்ததை தெரிந்து அவளுடைய தாய்மாமன் ரகசியமாக தீர்த்துக்கட்டி விட்டு பணம் பெற முயலும்போது ஒரு ஆயுள் இன்சூரன்ஸ் அதிகாரியும் அவனது காதலியும் சதியைக் கண்டு பிடித்து தண்டிக்கின்றனர்.

அன்கமர்சியல் டிராவலர்: (1868) ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் நாடு நகரம் என்று இரவு பகலாக பயணம் செய்யும் ஒருவனின் அனுபவ அலசல்கள்.

கிரேட் எக்ஸ்பெக்டேசன்ஸ்: (1860) பிலிப் என்ற 'பிப்' அநாதை. இருபது வயது மூத்தா கொடுமைக்கார அக்காள் ஜோ கார்ஜரி அவனை அரவணைத்து வைத்திருக்கிறாள். எஸ்டெல்லா என்பவளை அவன் காதலித்ததற்கு எகிறி விழுந்தாள். தப்பித்து மாறுவேடத்தில் பிளாக்ஸ்மித்தாக தொழில் செய்து பிழைக்கின்றான். அக்காள் விதவையாகி கொழுப்பு அடங்கியதும்

படிப்பகம்

padippakam

தான் அவனது பெரிய எதிர்பார்ப்புகள் நிறைவேறுகிறது. டிக்கன்சின் சிறந்த படைப்பாக சிலர் இதைக் கூறுகின்றனர்.

சம்படீஸ் லக்கேஜ் (1862): ஒரு விசித்திரவாலிபன் ஆறு வருஷத்துக்கு முன் காபிக்கடையில் விட்டுச்சென்ற லக்கேஜ் பற்றிய விபரீதங்களை கிருஷ்தோபர் விளக்குகிறார். வழக்கின் கொடுமைகள் அடங்கிய பைல்களும் அதில் அடங்கியிருந்ததாக விவரிக்கப்படுகிறது.

மிசஸ் லிரிப்பர்ஸ் லாட்ஜிங்ஸ்: (1863) No. 81 நார்போல்க் வீதி, ஸ்டிரான்ட் பகுதியில் லாட்ஜிங் ஹவுஸ் நடத்திய திருமதி எம்மா லிரிப்பரின் நினைவுகள் இந்நாவல். 38 வருஷ காலமாக நடத்திய வியாபாரச் சோதனைகள் வேலைக்காரப் பெண்கள் மீது நடந்த விசாரணைகள் – எதிரே உள்ளே மிஸ் வோசன் ஹோம் லாட்ஜிக்கும் இவளுக்கும் நடந்த எதிர்ப்புகள் நாவலின் கரு. எட்சன் என்ற நாட்டுப்புற இளைஞன் பெக்கி என்பவளுடன் லிரிப்பரின் விடுதியில் தங்கி மூன்று மாதங்களுக்குப் பிறகு விட்டு ஓடிவிடுகின்றான். அப்பெண் வயிற்றில் குழந்தையுடன் தேம்ஸ் நதியில் தற்கொலைக்கு முயல குளிக்கச் சென்ற மேஜர் ஜேக்மன் காப்பாற்றி கரை சேர்க்கிறான். அவன் நினைவாக ஜெம்மி ஜேக்மன் என்ற பெயரிட்டு குழந்தையை திருமதி லிரிப்பர் வளர்க்கிறாள். கரோலின்மேக்சி, பெர்க்கின்சாப், செராப்பினா, சோபி முதலிய வேலைக்காரப் பெண்களும் முக்கிய பாத்திரங்கள்.

மிசஸ் லிரிப்பர்ஸ் லெகசி: (1864) முன்நாவலின் தொடர்ச்சி இது. வாசகர்கள் மத்தியில் அடங்காத ஆசையைத் தூண்டிவிட்டு வரவேற்பைப் பெற்று மேலும் லிரிப்பர்சின் அனுபவங்களை தெரிந்து கொள்ளும் ஆர்வம் தெரிந்து எழுதப்பட்டது. கைவிடப் பட்ட அபலையின் கணவன் பிரான்சில் ஆடம்பரத்தில் அழிந்து நோயுடன் லண்டனுக்கு திரும்பி தன் மனைவி இறந்தது அறிகிறான். தன் பையனைப் பார்த்துவிட்டு கண்மூடுகின்றான்.

அவர் மியூச்சுவல் பிரண்டு: போபின் நிக்கோடஸ் என்ற விசுவாசமான வேலைக்காரனுக்கு திரு ஹார்மன் என்ற எஜமான் தன் சொத்துக்களை உயில் எழுதிவைக்கிறான். தன் மகன் தான் ஏற்பாடு செய்திருந்த பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள வில்லை என்றால் சொத்து அவனுக்குச் சேராது என்ற நிபந்தனையின்பேரில், ஹார்மன் சாகும்தருவாயில் மகன் தென் அமெரிக்கா கேப் காலனியில் இருக்கின்றான். விஷயம் தெரிந்து இங்கிலாந்து திரும்பி திடீரென்று மறைந்துவிட அவனைப்போல் உருத்தெரியாமல் செத்துக் கிடந்த பிணத்தை கண்டு அவன் செத்துவிட்டான் என்று வேலைக்காரன் வங்கிப் பணத்துக்கு அதிபதி ஆகி அனுபவிக்கின்றான். வாரிசுக்காரன் ஜான் ரோக்ஸ்மித் என்ற பெயர் மாற்றத்தில் தனக்கு நிச்சயிக்கப்பட்ட மிஸ் பெல்லா வில்பர் என்ற பெண்ணை சந்திக்கின்றான். தலைகனம் பிடித்த அவள் போபினுக்கு செயலாளராக வேலை பார்த்து - உண்மையான டாக்குமெண்டுகளை டச்சுபாட்டிலில் ஒளிய வைத்திருந்த ரகசியங்களை கண்டு பிடித்துவிட ஜே. ஜே.

படிப்பகம்

padippakam

என்று கல்யாணம் நடக்கிறது. வேலைக்காரன் ஒரு சின்ன வீட்டை மட்டும் கேட்டுவாங்கிக்கொண்டு சின்ன எஜமானுக்கு தொடர்ந்து சேவை செய்கிறான். இதில் வக்கீல், போலீசு, இன்ஸ்பெக்டர்கள் திமுதிமுவென்று நடமாடும் காட்சிகள் பிரத்தியோகம்.

டாக்டர் மேரிகோல்டு: இதன் ஒரிஜினல் தலைப்பு 'டாக்டர் மேரி கோல்டின் பிரிஸ்கிரிப்ஷன்ஸ்', சீப் ஜேக்ஸ் நெடுஞ்சாலைப் பயணத்தின் போது பிறந்து 'டாக்டர்' பட்டம் பெற்றவன். திருமணமாகி மனைவி-மகன் இருவரையும் இழந்துவிட்டதன் நினைவாக 'சோபி' என்ற கண்ணும் காதும் ஊனமுற்றவளை வளர்த்து ஆளாக்குகிறான். கண் குருடான ஒரு வாலிபனை அவள் காதலித்து கைவிடும் வேளையில் சீனா சென்றுவிடுகிறாள். சிலவருடங்களுக்குப் பின் கைக்குழந்தையுடன் திரும்பிவர அக் குழந்தை அழகாகப்பேசி ஆடிஓடவும் செய்ததுகண்டு டாக்டருக்கு ஒரே ஆச்சர்யம். சிப்பியின் வயிற்றில் முத்துபிறக்காதா என்ன?

பார்பாக்ஸ் பிரதர்ஸ் & பார்பாக்ஸ் பிரதர்ஸ் & கோ (1866) குமாஸ்தாவாகயிருந்து பின் பங்குதாரனாகி பின் பார்பாக்ஸ் & கோவின் முதலாளியான மிஸ்டர் ஜாக்சன் தன் இளமைக்கால வறுமை சோம்பேறித்தனங்களிலிருந்து மீண்டு சுறுசுறுப்பாகி போபி என்ற பெண்ணை கைப்பிடித்து புதுவாழ்வு பெறுகிறான். மக்பி ரயில்வே சந்திப்பில் ஒரு இளம் யுவதியை கண்டு ஓட்டலுக்குள் பேசிக் கொண்டிருக்கையில் அவள் தாயார் வந்து விடுகிறாள். அப்பெண்ணின் தாயார் தன்னை இளமையில் வஞ்சித்து விட்டவளாக அடையாளம் கண்டு விடுகிறான். ஐந்து குழந்தைகள் பெற்று அனைத்தும் இறந்துவிட – குடிகாரக் கணவனும் கை விட்டுவிட்ட அபலையின் கோரக்கதையாக இது சொல்லப்படுகிறது.

தி பாய் அட்மக்பி: (1866) எகியஸ் – மக்பி ரயில்வே ஸ்டேசனில் பயணிகள் தங்கும் சாதாரண அறைபற்றி காபிக் கடைபையன் சொல்லும் சம்பவங்கள் அடங்கியது. பிப்-விப் என்ற யுவதிகளின் பாத்திரங்களும் விஷேஷமானவை. தி கோஸ்ட் ஸ்டோரிஸ் (1865) நாவலில் திடிரையல் பார் மர்டர், தி சிக்னல்மேன் என்ற இரு கதைகள் இடம் பெறுகின்றன.

ஹாலிடேரொமான்ஸ்: (1968) 'அவர் யெங் போல்க்ஸ்' அமெரிக்கப் பத்திரிக்கையில் வந்தது. அலிசியா, டின்கிலிங் என்ற இளஞ்சோடிகள் இளமையிலேயே திருமணம் செய்து கொண்டது பெரியவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்ற காதலின் வேகத்தை கொண்ட நாவல்.

ஜியார்ஜ் சில்வர்மேன்ஸ் எக்ஸ்பிளனேசன்: 1968-ல் 'அட்லாண்டிக்' மன்த்லியில் வந்த தொடர் இது. ஜியார்ஜ் சில்வர்மேன் தாய் தந்தையை இழந்து பிரஸ்டனிஸ் அநாதை யாக கழித்து பர்மிங்ஹாம் டிரஸ்டில் பள்ளிக்கு அனுப்பப்படு கிறார். படிப்படியாக கேம்பிரிட்ஜில் பேராசிரியர் பதவி கிட்டியும்

படிப்பகம்

padippakam

ஒரு உன்மத்த மனப்போக்கில் மதமே விமோசனமாக வாழ்கிறார். தங்கியிருந்த லேடி பார்வே விதவையின் வீட்டில்- அவள் ஒரே மகள் அடிலினாவுக்கு பாடம் சொல்லித்தர அன்பு மலர்கிறது. ஆனால் அந்த சாமியார்தனமாக காதல் நிலைக்க வில்லை. சமூக அந்தஸ்து பாராமல் அடிலினா ஏழை கிரேன்வில் வார்டனுக்கு நிச்சயிக்கப்படுகிறாள். தாயார் சில்வர் மேனை காரி உமிழ்ந்து 'நீ ஒரு ஆம்பளையா?' என்று வீட்டை விட்டு துரத்துகிறாள். எனவே அவர் 'விளக்கம்' தேடுகிறார்.

1869-ல் நியூ அன்கமர்சியல் சேம்பிள்ஸ்- நான்கு குட்டி அத்தியாயங்களை அடக்கி ஒரு குறுநாவல் போல் வந்தது. **1858-ல் ரீபிரின்டட்டு பீசஸ் 1836-ல் சம் அன்கலக்டட்டு பீசஸ்**- இவைகளும் டிக்கன்ஸ் படைப்புகள்தான்.

தி மிஸ்டரி ஆப் எட்வின் ட்ருட்: கடைசி நாவலான இதன் மூன்று பாகங்கள், மட்டும் 1870-ல் வந்தது. தந்தையின் அந்தி மகால ஆசையாக எட்வின் ட்ருட்டுக்கும் அவருடைய நெருங்கிய ஏழைச் சிநேகிதரின் மகளான ரோசாவுக்கும் திருமணம் இனிதே நிறைவேறியது. இன்பம் நுகரும் பக்குவம் அந்த வயதில் தெரியாதலால்- மனவேற்றுமை ஏற்பட்டு- இருவரும் கொஞ்ச காலம் பிரிந்திருக்க விரும்பினர் லண்டனில் எட்வின் என்ஜினியரிங் படித்தான். ரோசாவுக்கு பள்ளியாசிரியை வேலை திடீரென்று ஒருநாள் காலையில் எட்வின் பிணம் ஆற்றில் மிதக்கவே ரோசா... உண்மைக் காதலை உணர்ந்து திருந்து கிறாள்... கொலையின் மர்மம் புலன் விசாரணைக்கு வருமுன் டிக்கன்ஸ் மண்டையைப் போட்டு விட்டான். நான்காவது பாகத்தின் பாதி இன்னும் கைப்பிரதியாகத்தான் இருக்கிறது.

IV

கலைஞனை 'இரண்டாவது பிரம்மாவாக' கணித்த புதுமைப்பித்தன் குறிப்பிட்டது போல் சார்லஸ் டிக்கன்ஸ் சாகா வரம்பெற்ற சரஸ்வதியின் அருளினாலோ, அல்லது காளி தேவியின் கருணையினாலோ எழுதியவன் அல்ல. தமிழ்ப் புதுமைப்பித்தனுக்கும் ஆங்கில சார்லஸ் டிக்கன்சுக்கும்- ஹாஸ்யமேதைத்தனத்தில் மொழி ஆளுமையில் வறுமையைச் சந்தித்ததில் அடிப்படை பிடிப்புகள் இருந்தாலும் முன்னவர் சிறு கதையிலும் இரண்டாமவர் நாவலிலும் இயங்கியவர்கள்- பித்தன் தாசில்தார் மகனாக பிறந்து ரோஷத்துடன் வாழ்ந்து போதிய அங்கீகாரம் இல்லாமல் கடனாளியாகவும் நோயாளி யாகவும் செத்தவன் டிக்கன்ஸ் கடன்கார குமாஸ்தா மகனாக பிறந்து கோடீஸ்வரனாகி ராஜமரியாதையுடன் மறைந்தவன் இருவரும் சாதனையாளர்கள் என்பதால்தான் இங்கே சந்திக்க விட வேண்டியதாயிற்று.

சார்லஸ் டிக்கன்சை உலகின் முதல் முற்போக்கு நாவலாசிரியராக கா.நா.சு. அடித்துக் கூறியிருக்கிறார். உலகின் தலையாய விமர்சகர்கள் அவரை ஆங்கில சமூக நாவலின் தந்தையாக ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். சீர்திருத்தம்

படிப்பகம்

என்றால் சார்லஸ்டிக்கன்சின் கண்ணோட்டத்தில் நடந்து போவதற்கு முகம் சுளித்து நவநாகரிக|காரில் செல்வதோ, கோட்டு சூட்டு மாட்டுவதைவிட்டு கோமணம் கட்டுவதோ, கூந்தலை வெட்டிவிட்டு குதிரைவால் கொண்டைபோடுவதோ, குண்டலகேசி பெயர் மாற்றி குமுதினி என்று அழைப்பதோ, கருப்புக்கட்சிக்குப் பதில் சிவப்புக்கட்சிக்கு ஒட்டுப்போடுவதோ அல்ல. இவைகள் மேலெழுந்தவாரியான பத்தவைப்புகள். அமைப்பின் புரையோடிப்போன புண்களை அடியோடு அகற்றும் அறுவைச்சிகிச்சையைத்தான் டிக்கன்ஸ் மேற்கொண்டிருந்தான். அரசின் ஆதரவோடு மதத்தின் அனேக ஆசீர்வாதத்தோடு சட்டத்தின் துணையோடு வாழ்க்கையின் அதலபாதாளத்தில் அமுக்கப்பட்டிருக்கும் ஏழை எளியோரின் துன்பதுயரங்களை, கண்ணீர்கம்பலைகளை எழுத்தில் இனங்காட்டிய சூடு சொரணை சம்பந்தப்பட்ட சித்தாந்தம் அவனுடையது. இளமையில்சுட்ட வறுமை வடுக்களே ஆராத்தழும்புகளாக அவனது படைப்புகளின் படிமங்களாகியுள்ளன, என்பதை பின்னால் வந்த எட்வர்டு புல்வர் விட்டன்,

Comes with the pomp of Memories in his train
Pathos and wit sweet plealure and sweet pain
Comes with familiar smile and cordial tone,
Our hearts wise cheerer — என்று கவிதையால் மதிப்பீடு செய்திருக்கிறான்.

சமகால எதிரியும் போட்டியாளனுமான வில்லியம் மேக்பீஸ் தேக்கரே அவன் காலத்தோடு தேங்கிவிட்டான் ஆன்டனி ட்ரிலோப் எலிசபெத் கேஸ்கல் இருவரும் சற்றேரக்குறையசார்லஸ் டிக்கன்சுடன் எழுதியவர்கள் தான். ஸ்காட்டுக்கு வீரமும் தீரமும், ஹார்டிக்கு காதலும் விதியும் தனித்தன்மைகள் என்றால் டிக்கன்சுக்கு சமூகமும் மனிதர்களும் பிரதான, அம்சமாக இருந்தது. ஜோலாவுக்கு ஒரு கீழ்த்தர பாரிஸ் வாழ்க்கை, டால்ஸ்டாயிக்கு மாஸ்கோ மேல்தர வாழ்க்கை போல் டிக்கன்சுக்கு மத்தியதர லண்டன் கீழ்த்தட்டு வாழ்க்கை கை கொடுத்திருக்கிறது. கடன்காரக்குடும்பத்தில் பிறந்து கஷ்டங்களில் நீந்தியபோது நீர்க்குமிழி போல் வெடித்த நினைவோட்டங்கள் காதல் தோல்விகளாய் கசப்பான சம்பவங்களாய் காற்ப்புள்ளி, கமா வாரியான சம்பாஷனைகளாக நாவல் வடிவம் பெற்றிருக்கின்றன. நாட்டுப்புறங்களுக்கு ஸ்துதி பாடியபோது நகர்ப்புறங்களை காட்டுவது ஏதோ தீட்டு தொடக்குபோல் டிக்கன்சுக்குமுன் கருதப்பட்டது. இதை தகர்த்து எறிந்த டிக்கன்ஸ் லண்டனையே தன் படைப்புகளுக்கு களனாக எடுத்துக்கொண்டான். அன்றியும் டிக்கன்ஸ் எழுதியகாலத்தில் எங்கிருந்தது கிராமங்கள்? அதுதான் பூச்சியரித்து புழுதிமூடிப் போயிற்றே...

பதினெட்டாம் நூற்றாண்டு பள்ளிக்கூடங்களின் நிலைமை பற்றி நிக்கோலஸ் நிக்கல்பியில் இதோ ஒரு படப்பிடிப்பு:-

Education: At Mr. Wackford Squeers Acadamy, Doth Boys Hall, at the delightful village of Dothboys, near Greto

padippakam

bridge in yorkshire youth are boarded provided with all necessaries instructed in all languages living and dead mathematics. Orthography, geomentry, astronomy, trigonometry, the use of the Globes, algebra, single - stick (if required) writing, arishmetic, fortification and every branch of classical literature. Terms twenty guineas per annum. No extras, No vacations and diet umparalleled. Mr. Squeers is in town and attends daily from one 'till four at the Saracins Head snow Hill. N.B: An able assistant wanted. A master of Arts would be Preferred.

வேதனை கலந்த சந்தோஷத்தை சமுதாயவிமர்சனமாக வைத்த டிக்கன்ஸ் சில குற்றங்குறைகளுக்கும் இடம் தந்திருக்கிறான். வடமத்திய இங்கிலாந்தின் ஓங்கி வளர்ந்த பாட்டாளி மக்களின் பிரச்சினைகள் அவன் மறந்துவிட்டானோ, அல்லது நிராகரித்துவிட்டானோ தெரியவில்லை பாரம்பரிய தொழில்கள் தேய்ந்ததற்கு புலம்பியவன் புதிய இயந்திரயுகத்தை வரவேற்றுப் பாடவில்லை. குறிப்பாக ரயில்வே தோற்றம் வளர்ச்சி, புதிய வியாபாரத்தலங்களின் இணைப்பு இருட்டடிக்கப்பட்டிருக்கிறது. சீரழிவின் சீழ்களையே பிதுக்கிககாட்டிய டிக்கன்ஸ் தவிர்க்க முடியாத காலமாற்றமான—ஆக்கபூர்வமான அறிவியல்கண்டு பிடிப்புகளை ஓரங்கட்டிவிட்டான். கலையை கட்சி வளையத்தில் அடைக்கும் மார்க்சிய விமர்சகர்களின் கண்ணோட்டத்தில் டிக்கன்ஸ் கருத்து முதல் வாதி. இலக்கியத்திற்கு அரசியல் சாயம் பூசும்போது சுதந்திரத்திற்க்கும் சர்வாதிகாரத்துக்கும் ஓயாத நீயா - நானா, உராய்வுப் போராட்டம்தான் நிகழ்ந்து கொண்டிருக்கும். மொத்தத்தில், சார்லஸ் டிக்கன்சின் படைப்புகள் முதலாளித்துவத்தின் சாக்கடையில் நெளிந்த புழுக்களின் ஜீவிய சரித்திரங்கள் என்ற சத்தியத்தை மட்டும் மார்க்ஸின் வாசகர்கள் ஒத்துக்கொண்டால் சரி. ஏனென்றால் மார்க்சும் அடிப்படையில் டிக்கன்சைப் போல் ஒரு மகத்தான கலைஞன்தான், ஒரு உன்னத பொருளாதார இலக்கியத்தை உற்பத்தி செய்து உலகுக்குத் தந்ததில். ●

ஒரு வழிப்பாதை

பயணத்தின் பாதி வழியில்
மூன்றாம் பிறை நாள் சந்திப்பு
அறிமுகமான புன்னகையோ
சுட்டெரிக்கும் பார்வையோ
அல்லாமல்
யாரை யாரோ பார்க்கும்
பார்வையில்

ஒரு வழிப் பாதை
மைல் கல் அடையாளங் காட்ட
அவரவர் பாதையில் அவரவர்! ●

தொலைந்த கோப்புகள்

அவளின் விவரங்களறிய
கட்டளையிட்டேன்.
செக்டர் 9 டிராக் 16
010111001 படித்து
பச்சைத் திரையில்
'பைல்கள் அழிந்து விட்டன.' ●

— சிபிச்செல்வன்

படிப்பகம்

padippakam

மறுஆய்வு

(காலத்தின் அத்துக்களுக்கு அடங்காமல் திமிறிநிற்கும் பழைய புதிய நாவல்கள் எதுவாயினும், எம்மொழிகளில் எவரால் படைக்கப்பட்டிருந்தாலும் கலைத்தரம் கருதி அதை திரும்பிப் பார்க்கும் விமர்சனப் பகுதி இது. இருட்டடிக்கப்பட்டவைகளும் ஏளனப்படுத்தப்பட்டு ஏற்கனவே விமர்சனத்துக்கு உட்படுத்தப்படாதவைகளும் இதற்கு முன்னுரிமைகள். சென்ற இதழில் டால்ஸ்டாயின் 'புத்துயிர்ப்பு' தொடர்ந்து தாமஸ் ஹார்டியின் 'தி ரிட்டேன் ஆப் தி நேட்டிவ்' இப்பொழுது இடம் பெறுகிறது.)

தாமஸ் ஹார்டி

தி ரிட்டேன் ஆப் தி நேட்டிவ்
(THE RETURN OF THE NATIVE)

தென் இங்கிலாந்தின் புராதன வெசக்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த டோர்செஸ்டர் மாவட்டத்தில் புல்லும் புதரும் பள்ளமும் பாறைகளும் மண்டி இயற்கைபூத்துக் கிடந்த புட்டில்டவுண் என்ற சிற்றூரில், 1845 வாக்கில் ஒருநாள் மாலை தனிமையில் வயலின் வாசித்து ஆடிப்பாடித் திரிந்துகொண்டிருந்த ஆறு வயது அறியாச்சிறுவன் ஒருவன், திடீரென்று இடித்து வீசிய மழைக்காற்றில் கரையோரத்திலிருந்த ஓர் பெரிய ஆலமரம் வேரோடு சரிந்துவிழுந்ததையும், அதன் கிளையில் கூடுகட்டி வாழ்ந்த அன்றில் பறவை அதில் அடிபட்டு அதன் குஞ்சுகளோடு நசுங்கி கிரீச் கிரீச் என்று ஓலமிட்டு பரிதாபமாக செத்ததையும் கண்டு சகியாமல் விசும்பி விசும்பி அழுது கொண்டே வீடு வந்து சேர்ந்திருக்கிறான். சிவந்த கண்களோடும் சிந்திய ஊளை மூக்கோடும் அன்று இயற்கையை நுணுகி நோக்கிய அந்தப் பொடியன்தான் பெரியவன் ஆனதும் மானிடத்தின் நிலையாமையை முழுக்க முழுக்க ஒரு அறிவியல் கலந்த துக்க கண்ணாடிக்குள் அடைத்த இலக்கிய ஞானி தாமஸ் ஹார்டி.

அடிப்படையில் கவிஞனான ஹார்டியின் சோக நாவல்கள் ஷோபக்கிள், ஷேக்ஸ்பியர் படைப்புக்கள் வரிசையில் தானாகவே சேர்ந்து கொள்கின்றன என்பதற்கு ஏச்சுக்களோ எதிர்ப்போ கிடையாது. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மேதைகளான காப்கா, காம்யூ, ஜாய்ஸ், மியூசில் இவர்கள் மனிதன் கரப்பான்

படிப்பகம்

padippakam

பூச்சியாக கட்டில் ஒட்டிக்கிடப்பதையும், தாயார் இறந்த அன்றே ஹாஷ்ய சினிமாவுக்குப்போய் இரவில் விபச்சாரியுடன் கூடியதையும், மலம் கழிக்கும் போதும் உடலுறவின் வினையாக விந்து வெளியேறும் தருணத்திலும் நினைவுகள் ஓட்டம் எடுப்பதையும், மானவெட்கமற்ற குணங்கள் மனிதனில் மலிந்து கிடப்பதையும் சோதனை ரீதியில் துல்லியமாக சித்தரித்ததற்கு ஹார்டியின் நவீனத்துவம் உதவியிருக்கிறது. நினைவோட்டக் கலையின் ஊற்றுக்கண் ஹார்டியின் கடைசி நாவலான 'ஜூட் தி அப்ஸ்கூர்'-ல் ஒரு ஸ்நோ வொயிட் அழகியின் அரை மயக்க நிலையில் ஒயிலாக உறங்கிக் கிடப்பதை லேசாக கிளறிப் பார்த்தால் தெரியும் அறிவு ஜீவித்தனத்தின் கையாளாகாத ஆக்கிரமிப்பையும் அடாவடித்தனத்தையும் எதிர்த்து உடல் ஆரோக்கியத்தின் உன்னதமான பாலுணர்வுக்கு முதன்மை தந்த D. H. லாரன்ஸ் ஹார்டியின் கருத்துலகுக்கு, கடன்பட்டவன், கட்டுப்பட்டவனும் கூட. ஜேம்ஸ் ஜாய்ஸ் விட்டெறிந்த 'stream of consciousness' என்ற கல் உலக நாவல் கலையையே ஒரு சுலக்கு கலக்கியிருக்கிறது.

டோரதி ரிச்சர்ட்சனின், 'பாய்ன்டட் ரூப்' விர்ஜினியாவுல்பின் 'மிசஸ் டல்லோவே' 'டுதி லைட்ஹவுஸ்' கொன்ராடின் 'ப்ளூ வாயேஜ்' டாஸ் பாசோஸின் 'மன்ஹட்டன் டிரான்ஸ்பர்' நாதன் ஆஷின் 'பே டே' வில்லியம் பாக்னரின் 'திசவுண்ட் அன்ட்தி:.பரி' ஷெர்வுட் ஆன்டர்சனின் 'டார்க் லாப்டர்' இவைகள் அவசியம் படிக்கவேண்டிய நடைவாடையுக்தி நாவல்கள்.

பேரண்டத்தின் ஒரு பகுதியாக ஒரு ஆரஞ்சுப்பழம்போல் சுழன்று கொண்டிருக்கும் இப்புண்ணிய பூமியானது தனது உபகரணங்களான பஞ்சபூதங்களுக்குள் சிண்டு முடிந்துவிட்டு சதா சீதோஷ்ண சண்டைகள் செய்துகொண்டிருந்தாலும் பூரண ஆயுசுடன் என்றென்றும் நிலைத்துநிற்பது. இதில் உதிரிகளாக அவ்வப்போது தோன்றிமறையும் மனிதன் ஈரான உயிரினங்கள் 'இருத்தலுக்காக' வேண்டி இயற்கைவிதிகளை எதிர்த்து நிகழ்த்தும் ஜீவமரண வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி இயற்கைக்கும் வீழ்ச்சி மனிதனுக்கும் இறுதியாகின்றது. இப்படியொரு திடமான தத்துவ அஸ்திவாரத்தில்தான் தாமஸ் ஹார்டியின் நாவல்கள் கட்டப்பட்டுள்ளன. வழிவழியாக கட்டிடக்கலை வல்லுநர் வம்சத்தில் வந்தவனல்லவா! எனவே ஒரு விட்டிற்குத் தேவையான வாசல், ஜன்னல்கள், கதவு நிலவுகள் போல் நாவலுக்கு அவசியமான கதை, கரு, ஆரம்பம், முடிவுகள், பாத்திரங்கள், சம்பவங்கள் இவைகளை பாங்குடன் புள்ளிபோட்டு நிர்மானித்திருக்கின்றான்.

'கடவுள் மேலோகத்தில் இருக்கிறான். எல்லாம் நல்லபடியாக நடக்கும்' என்ற பிரௌனிங் கருத்துலகை ஹார்டி ஏற்றுக் கொள்ளவில்லை. தனிமனிதன் மீது சமூகச் சட்டங்களாக திணிக்கப்பட்டிருந்த கற்பு, கல்யாணம் போன்ற பித்தலாட்டங்களை, போலிச்சம்பிரதாயங்களை எதிர்த்து கடைசி மூச்சுவரை கலகம் நிகழ்த்திய ஹார்டி உலகம் கண்டிராத முதல்தர காதல்

படிப்பகம்

padippakam

கதாசிரியன் என்பதையும் தூக்கத்தில் எழுப்பிக்கேட்டாலும் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். பெண் நெஞ்சின் ரகசியத்தை திறந்து காட்டியதில் டெஸ், யுஸ்டேஷியா முன் ஹெலனும், கிளியோபாட்ராவும் மண்டியிட்டு பிச்சைகேட்கும் நிலை. குறும்புக்கார பையன்கள் வண்ணத்துப்பூச்சியை பிடித்து விளையாடிவிட்டு வதக்கி எறிவதைப்போல் கடவுள் கையில் நாம் விளையாட்டுப் பொம்மைகள். வேதனை எனும் பொது நாடகத்தில் இன்பம் எப்போதாவது ஒரு தூரல்போல் விழுந்து மறைகிறது. எனவே விதியின் விளையாட்டை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது. நாம் நினைப்பது நடக்கமுடியாததால் வாழ்க்கை வாழ்வதற்கே என்று முழங்கமுடியாது. தொடர்ந்த தேடல்களில் இம்மாதிரி துண்டுப்பிரச்சாரங்களும் ஹார்டியில் மையம் கொண்டிருந்தன.

தாமஸ் ஹார்டியின் பிறந்த தேதி 2—6—1840 டோர்செஸ்டர் டவுனுக்கு 3 மைல் தூரத்திலிருந்த மேல்போக்ஹாம்டன் குக்கிராமத்தில் செங்கல்லால் கட்டப்பட்டு கூரைவேய்ந்திருந்த குடிசையில் பிறந்தபோது, 'இக்குழந்தை பிழைக்காது. புதைத்து விடுங்கள்' என்று பிரசவம் பார்த்த மருத்துவர் கைவிரித்து விட்டார். வளர்ப்புத்தாதியின் வாஞ்சையான கவனிப்பில்தான் நோஞ்சான் ஹார்டி கண்டம் தப்பியதாக சொல்லப்படுகிறது. அவன்பிறந்த வெசக்ஸ் மண்ணுக்கு தன் செல்வங்களை தீமைகளிலிருந்து காத்துக்கரைசேர்க்கும் ஒரு மகாசக்தியுண்டு. தாய்மீதான இந்த Nostalgia நோய்தான் டி. எஸ். எலியட்டின். The wastlandக்கும் வித்திட்டிருககிறது. எடுத்துக்காட்டாக நாம் பேசப்பட இருக்கும் தி ரிட்டேன் ஆப் தி நேட்டிவில் எட்ஜானை வெறுத்துகணவன் கிளிம்மையும் மனைவி தமாஷினையும் கைவிட்டு பாரிசுக்கு ஓடிப்போக எத்தனித்த யுஷ்டேஷியா, வில்டீவ் இருவரையும் தன் பிள்ளைகளுக்கு துரோகம் செய்தகுற்றத்திற்காக மாகாளியாக வெகுண்டு காவுகொள்கிறாள். இதனாலோ என்னவோ, ஹார்டியும் டோர்செஸ்டர் தாண்டி கதைகளை அதிகம் நகர்த்தியதில்லை. மில்டனுக்கு 'ஏடன் கார்டன்' போல் 'எட்ஜான் ஹெத்' இவனது லட்சியதாயகம். 'வெஸ்ட்சாக்சன்ஸ்' என்பதன் பேச்சு வழக்கான 'வெசக்ஸ்' ரோமனிய ஆட்சிக்காலத்தின் சிதைந்த சின்னங்களான நெடுஞ்சாலைகள், பாழடைந்த கோட்டைகள், பழுதுபட்ட மதில்கள், இடிந்தமதில்கள் உடைந்து மூடிய கலையரங்கங்கள், விளையாட்டு மைதானங்கள், பூண்டுமுளைத்துக்கூம்பிய கல்லறைகள் இவற்றிடையே பசுமை அடர்ந்த விளைநிலங்கள், குன்றுகள், கோம்பைகள், ஆங்காங்கே சிறுசிறுகுடிசைகள், இவற்றில் சிறுவிவசாயத்துடன், விறகுவெட்டுதல், பால் பண்ணைத் தொழில்கள் முக்கியமானவை. தன்வாழ்வில் விளையாடிய அலெக்சை கொலை செய்துவிட்ட டெஸ் ஆருயிர் கணவனுடன் மனைவியாக சுகித்திருந்த ஐந்துநாட்கள் ஏ.சி.ரூமிலோ, ஏழடுக்கு இலவந்திகை வெள்ளிமாடத்திலோ அல்ல. ஒரு திறந்த பழங்கால பாழடைந்த மண்டபத்தில்தான். உலகம் வியக்கும் சாமர்த்தியசாலியும் தன் குடும்பத்திற்காக தன்னையே மெழுகாய் எரித்துக்கொண்ட ஆங்கில இலக்கியத்தின்

படிப்பகம்

padippakam

மகோன்தைக் காதல் கதாநாயகியுமான டெஸ் அங்குதான் கைதுசெய்யபட்டு மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறாள்.

செல்லப்புத்திரனானதால் எட்டாவது வயதில்தான் ஹார்டி பள்ளிக்கு அனுப்பப்பட்டான். வகுப்பில் பாடத்தை படிக்காமல் தன்னைவிட முப்பது வயது மூத்த ஆசிரியை ஜுலியா அகஸ்தஸ் மார்ட்டினை. சைட் அடித்துத்திரிந்தான். அவளும் கட்டித்தழுவி கொஞ்சிச் சிணுங்கியபோதுதான் பெண்ணழகின் ரகசியம் ஹார்டிக்கு சித்தியாகி பிற்காலப் படைப்புகளுக்கு பெருந்தீனி போட்டிருக்கிறது. ஹார்டியின் கதாநாயகிகளில் பெருமளவினர் படிக்காத கவர்ச்சிகரங்கள்தான் என்றாலும் அவர்களது ஆதிக்கம் மிகவும் அதிகம். தாய் ஜெம்னா ஹேண்ட் புத்திசாலித்தனமாக காதலர்களைப் பிரித்து வீட்டிலேயே டிரைடனின் 'விர்ஜில்' ஜான்சனின் 'ராசலெஸ்' மற்றும் ஸ்காட், டுமாஸ் முதலியோரை சொல்லிக்கொடுத்தாள். உடன்பிறந்தவர்கள் யாருமில்லை தகப்பன் தலைமை மேஸ்திரியானதால் முப்பாட்டன் காலத்திய குடும்பத்தொழிலிலேயே மகனையும் இறக்கிவிட்டான். ஜான் ஹிக்ஸ் என்பவரிடம் தொழில் பயிலும்போது டோர் செஷ்டரின் சகல மூலை முடுக்குகளும், வயல்வரப்புகளும் அத்துபடியாயிற்று. நாட்டுப்புற உழவர்களின் நடை உடை பாவனைகள் மூட நம்பிக்கைகள், பேச்சுத்தோரணைகள், காற்றின் ஒலி, சூரியன் சந்திரன் எழுந்து விழுந்த மலைமுடிகள் இவைகள் இதயத்தில் சேகரமாயின். இந்த ஊறலின் முழுத்திரட்சிகள் 'தி ரிட்டேன் ஆப் தி நேட்டிவ்' 'ஃபார் ஃபிரம் தி மேடிங் கிரௌடு' இரண்டிலும் நூற்றுக்குநூறு பிரதிபலித்திருக்கிறது. இந்நாட்களில் தான் வேலைபார்த்த அலுவலகத்தின் எதிர் வீட்டில் குடியிருந்த வில்லியம் பர்னீஸ்' என்ற டோர் செஸ்ட் கவிஞனுடன் விவாதங்கள் நடத்தி நிறைய விஷயங்களை பிடுங்கிக்கொண்டதாக தெரிகிறது. ஹார்டியின் நாட்டுப்புறயதார்த்தம் கவித்துவமாக மலர இந்தநட்பு, கைகொடுத்திருக்கிறது. 1862 ல் பிரபல என்ஜினியர் ஆர்தர் புளும்பீல்டு உதவியாளனாக லண்டன் சென்றபோது அவரிடம் இசைத்தன்மையை உறிந்து கொண்டதாக சொல்லப்படுகிறது. இதை உறுதியாக நிறுவிவிட முடியாது ஏனெனில் ஹார்டியின் மூதாதையர்கள் கிருஸ்துமஸ், நியூஇயர் ஈவ் வைபோவங்களில் மாதாக்கோயிலில் பிடில் வாசித்துக் கொண்டு வருஷாவருஷம் வேஷம் கட்டி ஆடியவர்கள் எனவே ஹார்டியின் அறிவுத்திறன் மட்டும் தாய்வழிக் கொனட எனலாம். லண்டன் வாழ்க்கையில் ஹார்டி 'கிங்ஸ்' கல்லூரி நூலகத்தோடு பெருந்தொடர்பு கொண்டிருந்தான். லத்தீன், கிரீக், ஜெர்மன், பிரெஞ்சு, மொழிகளையும், கணிதம், பூகோளம் இவைகளையும் விசாலமாக்கிக் கொண்டான். ஹோமர், விர்ஜில், டான்டே, பிராய்ட், ஹெகல், மார்க்ஸ், டார்வின், மில், இப்சன், ஹக்ஸ்லி, மால்தஸ், ரிக்கார்டோ, நீட்சே ஸ்வின்பர்ன், ஷேக்ஸ்பியர்–இவர்களில் ஊடுருவினான் என்றாலும் ஹோப்பன்கர். தாக்கம் இவனில் மிதமிஞ்சிக் கிடக்கிறது. ரூசோவின் சமூக ஒப்பந்தத்தை பரப்பியவன் என்பதற்கு ஒரு உள்ஆதாரம் கிளிம் இயோபிரைட்டை 'Rossoue of Edgon' என்று குறிப்பிடுவதை வைத்தே ருசுப்படுத்தலாம்.

படிப்பகம்

padippakam

'என்வீட்டை நான் எப்படிக் கட்டுவேன்?- 'கட்டுரை சேம்பர்ஸ் மேகசைனில் முதலில் வந்தபோது பிரிட்டிஷ் கட்டிடக் கழகம் பதக்கம் வழங்கியது. ஆனால் பரிசை உதறிஎறிந்து விட்டான் ஹார்டி உடல்நிலை குன்றி ஒய்வுக்கு டோர்செஷ்டர் வந்த போது கவிதை முயற்சிகள் கைவிடப்பட்டு, சார்லஸ் டிக்கன்ஸ், ஜியார்ஜ் எல்லியட், ஆன்டனி ட்ரோலோப்-இவர்கள் ஈட்டியிருந்த புகழ்மயக்கம் இவனையும் நாவலுக்குள் இழுத்து விட்டது. கள்போதையை விட கொடியதான இதன் காட்டு வழித்தடங்கள் கட்டிடக்கலையிலிருந்து இலக்கியத்துக்கு ஊர்ந்த 'ஆட்டோபயாகிராப்பிகல் நாவலான 'ஜுட் தி ஆப்ஸ்கூர்'-ல் பதிந்துகிடக்கின்றன. 'திபுவர்மேன் அன்ட் தி லேடி' நகர்ப்புற வாழ்க்கையைசாடி அதீத கற்பனையில் எழுதி அனுப்பப்பட்ட போது **அலெக்ஷாண்டர் மேக்மில்லன்** அந்நாவலை ஏற்றுக் கொள்ளாமல் உனனடியாக ஒரு அனுதாபக்கடிதமும் அனுப்பி வைத்தார். அப்போது மேக்மில்லன் பதிப்பகத்துக்கு இலக்கிய ஆலோசகராகயிருந்த **'ஜியார்ஜ் மெரிடித்** 'பார்வைக்கு கையெழுத்துப்பிரதி சென்றபோது அவரை சந்திக்க அனுமதி கிடைக்கவில்லை. பிறகு சேப்மேன் ஹாலில் நேரில் சந்தித்து சந்தித்து மறுபரிசிலனைக்கு கெஞ்ச 'மேற்கொண்டு இதைத் திருத்தவோ, அல்லது வேறு புதியநாவல் எழுதவோ வேண்டாம்' என்று மெரிடித் புத்தி கூறி அனுப்பி விட்டார். மேலும் இரண்டு பதிப்பாளர்களும் உதட்டைப் பிதுக்கிவிடவே ஹார்டியின் முதல் நாவல் இதுவரையும் அச்சேறாமல் தான் தூசிபடிந்து கிடக்கின்றது. ஒரு சவாலாக 1861-ல் 'டெஸ்பரேட் ரெமடீஸ்' டின்ஸ்லி பிரதர்ஸ் வெளியீடாக சொந்த செலவில் மூன்று தொகுதிகளாக பதிப்பிக்கப்பட்டபோது பத்திரிக்கைகள் பாராட்டைக் குவித்தன. மூன்றாவதான 'அன்டர்தி கிரீன்வுட் ட்ரீ' வட்டார வழக்கை அப்படியே பதிவு செய்திருந்தும் 'ஆள் பலே பட்டிக் காட்டுப் பேர்வழி யோல் இருக்கிறது. நம்மை விடமாட்டான் போலும்' என்று இம்முறையும் மேக்மில்லன் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு ஆள் இல்லை என்று திட்டமிட்டு துரத்திவிட்டது. under the green wood tree, who loves to lie with me. என்ற ஷேக்ஸ்பியரின் As you like it பாடலை நாவலின் தலைப்பாக எடுத்துச் சூட்டியதும் ஒரு காரணமோ என்னவோ?....அடிமேல் அடிவிழுந்தால் அம்மியும் நகருமல்லவா? மூன்று ஆடவரின் கைப்பாவையாக மாறிய சதைப்பிண்டமான 'பாத்ஷெபா எவர்டீன்' பலத்த கைகாரியாக 'ஃபார் பிரம் தி மேடிங் கிரௌடு'-ல் சர்ச்சைக்குள்ளாகி கார்ன்ஹில் பத்திரிக்கையில் பவனிவந்த போது, நிச்சயம் ஒரு பெண் அதுவும் ஜியாஜ் **எலியட்** தான் புனைபெயரில் இதை எழுதியிருக்க வேண்டும் என்று எடிட்டர் லெஸ்லீ ஸ்டீபன் அடித்து மதிப்பிட்டார். எல்லியட்டும் இந்நாவல் கதாநாயகி பாத்ஷெபாவைப்போல் இரண்டு மூன்று கைமாறியிருக்கிறாள். கடைசிக் கணவன் இவளைவிட 17 வயது இளையவன் ஒரு வேளை அந்தக்காலத்தில் பரபரப்பான விஷயங்களான எல்லியட்டின் அந்தரங்கங்களை அம்பலப்படுத்தக் கூட இதை ஒரு கருவியாக உபோகித்திருக்கலாமா?— எஃபேர் ஆப் ப்ளூ அய்ஸ்'. தான் தாமஸ்ஹார்டியின் பெயரை முதலில் தாங்கி

படிப்பகம்

padippakam

வந்த நாவலாகும். அரசு/அலுவலக ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு முகமூடிக்குள் திகழ்ந்தேறியிருந்தாலும் ஹார்டியின் ஆரம்ப முயற்சிகள் இன்றும் கேட்பதற்கு எவ்வளவு சுவாரஷ்யமாக யிருக்கின்றன?

வாலிபன் ஹார்டி கார்ன்வால் என்ற நகரில் சர்ச் புனருத்தன வேலைக்காக நெடுநாள் கூடாரம் அடிக்க வேண்டியிருந்தது. புதுப்பிக்கப்பட்ட சர்ச்சை சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போதுதான்

'Here we suffer grief and pain
Here we meet to part again'

என்று **எம்மா லாவண்யா கிப்போர்ட்** கண்ணில் பட்டாள். வாட்டசாட்டமான உருவம் எம்மா. பிளைமவுத் வக்கில் மகளான இவளை கொத்திக்கொண்டு வீடு திரும்பினான். கட்டிடத்தை எறிந்துவிட்டு இலக்கியத்தை தொழிலாக தொடர ஆதார சுருதி எம்மாதான். புதுப்பெண்டாட்டியுடன் உல்லாசமாக ஐரோப்பிய சுற்றுப்பயணம் செய்த ஹார்டி ஆரம்ப நாட்களில் அவள் கால்களில் நெடுங்கிடையாகத்தான் விழுந்துகிடந்தான். சமுதாயத்தையும் மக்களையும் படித்து சிருஷ்டிப்பதா என்ற திண்டாட்டமும் இக்கட்டத்தில் ஒரு பிரச்சினையாக இருந்தது. இவ்வேளையில் 'தி ஹேண்ட் ஆப் எதில்பர்ட்டா' வெளியாயிற்று. ஹார்டி தம்பதிகள் எழில்நிறைந்த ஸ்டர்மினிஸ்டர் நியூடன் கிராமத்தில் குடியேறிய தருணத்தில்தான் ஹார்டியின் இலக்கியக் கொள்கையை பறைசாற்றும் சக்தி வாய்ந்த 'தி ரிட்டேன் ஆப் தி நேட்டிங்' உருவானது. தொடர்ந்து வெசக்ஸின் நெப்போலியப் போர் பாதிப்புகளை, 'தி டிரம்பட் மேஜர்' வெளிப்படுத்தியது. 'எ லாவ்டிசியன்' நோயுற்று படுக்கையிலிருந்தபடியே சொல்லச் சொல்ல எம்மாவால் எழுதப்பட்டது. 'டூ ஆன் எ டவர்' அட்லாண்டிக் மன்த்லி என்ற அமெரிக்கப் பத்திரிக்கையில் தொடராக வந்தது. லண்டன் உயர்வட்டங்கள் ஹார்டியை மொய்த்து மெச்சித் தள்ளினாலும் அவன் இதயம் என்னவோ செயற்கைப் பூச்சுக்களிலிருந்து விலகி டோர்செஷ்டரையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. எனவே அடிக்கடி டோர்செஷ்டர் வந்து போய்க்கொண்டிருந்தான். 'மேயர் ஆப் கேஸ்டர் பிரிட்ஜ்' வெளியாகி ஒரு குலுக்கு குலுக்கியபோது அந்நாவலின் சூழல் கேஸ்டர்பிரிட்ஜ் ஆக இல்லாமல் முழுக்க டோர்செஸ்டராகவே எதிரொலித்தது. குடிவெறியில் மனைவி, மகளை விற்றுத் தொலைத்த மைக்கேல் ஹென்சர்ட் ஹார்டியின் ஆண்கதா பாத்திரங்களில் மகாமுக்கியமானவன். மேக்ஸ்கேட் என்ற இடத்தில் புதுவீடு கட்டிக் குடியிருந்த இக்காலம் ஹார்டியின் சிந்தனையிலும் வாழ்க்கையிலும் பெரும்புயல்களை தோற்றுவிப்பதற்கான அமைதியைக் காட்டியது. 'வுட்லேண்டர்ஸ்' மேக் மில்லன் மேகசைனில் தொடராக வந்தபோது முதல் இதழின் 10,000 பிரதிகளும் பறந்தடித்துத் தீர்ந்தன. பிளாக்மூர் பள்ளத் தாக்கின் வர்ணனை வீரியங்களுடன் கதாநாயகி கிரேஸ் மெல்பரியை தூக்கியடித்த காட்டுவாசி பெண்ணான மார்டின் சௌத் பாத்திரப் படைப்பு ஹார்டிக்கு பல பெண் ரசிகைகளை

படிப்பகம்

padippakam

நெருக்கப்படுத்தியது. இவன் தீவிர இலக்கிய ரசிகைகளில் திருமதி ஹென்னிக்கர் குறிப்பிட வேண்டியவள். பணக்கார மலடியான இவள் ஒரு பக்கா செக்ஸ் நோயாளி. கைப்பிடித்துஇழுக்க, கட்டிக் கசக்க சம்மதித்த இவள் நேரடி உடலுறவுக்கு மசியாமல் ஹார்டியை நெடுங்காலமாக தொங்கவைத்த உன்மத்தக்காரி. ஹார்டி உடலமைப்பில் பெண்தன்மை விஞ்சியவனா? என்ற சந்தேகமும் கூட எழ ஆரம்பித்தது. ‘பமீலா’ அமோக வெற்றி யடைந்தபோது ரிச்சர்ட்சனை விமர்சகர்கள் இப்படித்தான் பார்த்தனர். அது உண்மையாகவே போயிற்று. ஹார்டியிலும் இந்தப் பலவீனம் கிடக்கின்றது. ஒரு மலட்டு அல்லது வரட்டுத் தன்மை உடல்மோகிப்பின் பலவெறிகளைகிண்டிவிடலாமல்லவா? வாழ்க்கையில் நெருங்க முடியாத பேரழகிகளை இலக்கியத் திலாவது சித்தரித்து வணங்கியிருக்கலாமல்லவா? இந்த ‘Sweet Helen make me immortal with a kiss’ என்ற மார்லோவின் டாக்டர் பாஸ்டஸ் உடல் மோகம் பல ஆசிரியர்களுக்கும் கனவாக இருந்திருக்கிறது. (இதன் விபரம் பின் தொடர்கிறது) தொடர்ந்த ‘டெஸ் ஆப் தி டியர்பர்விலஸ்’ உலகப் புகழை அள்ளி ஹார்டியின் கழுத்தில் கழட்ட கழட்ட மாலைகளாக போட்டன. எச்சில்பட்ட கனியான டெஸ் – திருமணமாகாமல் தாயானபோது எப்படி ஹார்டி அவளை ‘சுத்தமான பெண்’ணாக ஏற்றுக் கொண்டான்? தூங்கிக் கொண்டிருந்த அலுப்பில் அவளையறியாது நிகழ்ந்த திட்டமிட்ட கற்பழிப்புத் தாக்குதலுக்கு டெஸ் எந்தவிதத்திலும் பொறுப்பாளியல்ல. பெண்ணிய கருத்துலகில் பெரும் கொத்தளிப்பை ஏற்படுத்திய இந்நாவல் ஒரே சமயத்தில் பரபரப்புக்கும் பலத்த கண்டனத்துக் கும் சமூக பகிஷ்கரிப்புக்கும் ஆளானது, இதையும் இரண்டு புகழ்பெற்ற பதிப்பங்கள் கொண்டுவர மறுத்துவிட்டன. ரோமன் போலன்ஸ்கி இந்நாவலை வண்ணப்படமாக்கியபோது டெஸ்சின் பாத்திரத்துக்கு ஹாலிவுட்டிலிருந்து கோடம்பாக்கம் வரை தேடியும் ஒகு ‘லிப்ஸ்டிக் தொப்பை’கள் கூட உருப்படாமல் போகவே லண்டன் தெருக்களில் திரிந்த மூக்கும் முழியுமான ஒரு பால்கார கிராமத்துப் பெண்ணை பிடித்து நடிக்க வைத்த தாக கேள்வி. கறவைக்கு நிற்காத பசுக்கள்கூட காம்பில் டெஸ்ஸின் மென்மையான கைப்பட்டதும் வசிய மருந்து பூசினாற்போல பாலுக்கு நின்றதாக நாவலில் வருகிறது. ஆங்கில இலக்கியத்தில் டெஸ்சை ஒருதட்டிலும் மற்றெல்லோ ரையும் ஒகு தட்டிலும் கூட நிறுத்திப்பார்க்கலாம். பின் தொடர்ந்த ‘தி வெல் பிலவுட்’ சாதாரணத்தரத்தில் அமைந்தது. மாடியில் தணியறையில் எழுத்தில் மூழ்கிக்கிடந்தபோது மனைவி எம்மா தனிமையில் தவித்து சாக்கைவிரித்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். எம்மாவின் உடம்பை கட்டியாளமுடியாமல் போகவே, புத்தி பேதலித்து அவள் நடைப்பிணமாக உலவினாள். காட்டுத்தனமான கற்பை ஹார்டி சுக்குநூறாக உடைத்து தும்துளாக்கியபோது எம்மாவுக்கும் அவனுக்கும் ஏற்கனவே இருந்த விரிசல் பெரியதாகியது. செக்ஸை ஒரு சுதந்திரமான போக்காக வலியுறுத்திய போது அவள் அதை எதிர்த்து வாழ்க்கையை இரண்டாக்க நினைத்தாள். இறுதி நாவலான ‘ஜுட் தி அப்ஸ்கூர்’ வெளியாவதை ரகசியமாக தடுத்து நிறுத்த

படிப்பகம்

padippakam

எத்தனித்திருக்கிறாள் என்றால் அவளை சாதாரணமாக எடை போட முடியுமா? இதன் 'சியூ பிரைட்ஹெட்' அசல் எம்மாவே தான். அரபெல்லா ஹார்டியின் அகோரக் காமச்சின்னம் வீனஸ் தேவதையின் விரசக்கோலம்; ஹார்டியின் வரட்சிப் பார்வைகள் தீவிர விமர்சனத்துக்கு உள்ளாகவே நாவல் நிறுத்தப்பட்டு சிறுகதைகளுக்கு செல்ல வேண்டியதாயிற்று. கடைசிக்காலம் அமைதியாக கவிதைகளில் கழிந்தது. நெப்போலியனின் வீரதிர சரித்திர அம்சங்களை அழுத்தமாக பதிவு செய்த புகழ் பெற்ற காப்பியநாடகமான 'திடைனாஸ்ட்ஸ்' லண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்களில் பிரமாண்டமாக அரங்கேறியது. 1912–ல் மனைவி இறந்த இரண்டாண்டுகளுக்குப் பிறகு தனது இலக்கியக்காரியதரிசியும், பின்னால் இவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியவளுமான புளோரன்ஸ் எமிலி டக்டேல் என்பவளை மறுமணம் செய்துகொண்டான். இரண்டு மணங்களிலும் ஹார்டிக்கு புத்திரபாக்கியம் கிட்ட வில்லை. ராயல் இலக்கியக் கழகம் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தபோது ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ்கள் வலிய டாக்டர் பட்டம் தந்து தங்களை பெருமைப்படுத்திக் கொண்டன. பலகல்லூரிகளில் வருகைதரு பேராசிரியர் பதவி காத்துக் கிடந்தன. கையெழுத்துப் பிரதிகளை நூல் நிலையங்களும் மியூசியங்களும் காட்சிப் பொருளாக கண்ணாடிக்குள் வைத்தன. அமெரிக்க இலக்கிய வாசகர்கள் 'ஆட்டோகிராப்' வாங்க டோர்செஸ்டரை முற்றுகையிட்ட வண்ணமிருந்தனர். எல்லா வற்றிலும் நிறைவுடன் 87–வயதில் ஹார்டி இறந்தபோது வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் சார்லஸ் டிக்கன்சுக்கு பக்கத்தில் புதைக்கப்பட்டான்.

ஹார்டியின் புது பையாகிராப்பிகளில், 1960–ல் செய்மூர் ஸ்மித் வெளியிட்டது ஒரு மேதையின் முகத்தில் கரியைத்தான் பூசியிருக்கிறது. ஹார்டியின் அத்தைமகளுக்கு பிறந்த ஒரு ஆண்குழந்தை அவரை உரித்துவைத்திருப்பதாக பூதம் கிளப்பி விடப்பட்டிருக்கிறது. இரண்டாவது மனைவி புளோரன்ஸ் எமிலி மீதும் வாய்க்குவந்தபடி புரளிகள் வெடித்திருக்கின்றன. இவள் ஏற்கனேவே சர். தார்ன்லி ஸ்டோக்கர் என்ற பணக்கார டப்ளின் டாக்டருக்கு 'வைப்பாக' இருந்து அவரது மனைவிக்கு மரணப் படுகையில் உதவியகைகாரி. தகாத தலைகீழ்ப்புணர்ச்சிகளில் அக்கிழவரைத் திருப்திபடுத்தியதால் ஏராளமான பணத்தை இவள் பெயரில் உயில் எழுதிவிட்டு செத்ததாகத் தெரிகிறது. வயோதி கத்தில் இவள் ஹார்டியை கைக்குள் போட்டுக் கொண்ட போது அவரையும் முறைதவறிய முஸ்டிமைதுன (Masturbation) கலவியில்தான் அடக்கி ஆண்டிருக்கிறாள். இன்னும் சில சிதம்பர ரகசியங்கள். கல்யாணமாகாத இலக்கிய நண்பன் ஹோரஸ் மூல் மிதமிஞ்சிய குடியில் தற்கொலை செய்துகொண்டதற்கும் ஹார்டியுடன் கொண்ட ஹோமோசெக்சுவல் பழக்கம்தான் காரணமாக சொல்லப்படுகிறது. முன்னால் சொன்ன திருமதி ஹென்னிக்கர் இன்னொரு விசித்திர வழக்கு இப்படிப்பட்ட பாலுணர்வுப் பலகீனங்கள் கீழ்த்தர உறவுகள்தான் வாளிப்பான எம்மாவை பைத்தியமாக்கி பலிகிடா ஆக்கிவிட்டது. இவற்றிற்கு ஹார்டியின் கவிதைகளில் ஆதாரம் காட்டப்படுகிறது.

படிப்பகம்

padippakam

II

தாமஸ் வரார்டியின் நாவல்களில் தலைசிறந்தது எது? என்ற ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டால் 'டெஸ் ஆப்தி டி' யர்பர்விலஸ்' என்று கண்ணை மூடிக்கொண்டு பதில் வரும். அதே சமயத்தில் 'திரிட்டேன் ஆப் தி நேட்டிவ்'க்கு கைதூக்கும் அனுதாபி களும் உண்டு. முக்கோணக் காதல் தோல்வியில் 1:2 நிறை வேறாத காதல் சூத்திரத்தில் ஒட்டிப்பழுத்த இரட்டைப் பழங்கள் போல் இரண்டும் அமைந்துள்ளன 'டெஸ்' - சில் அவள் பாத்திரப் படைப்பும் 'நேட்டிவ்'-ல் எட்ஜான் ஹெத்தின் இயற்கை வர்ணனையும் தலைப்பிலேயே பட்டுத்தெரித்தாலும் டெஸ்சின்சமூக ஓட்டம் அதை முதலிடத்துக்கு உயர்த்தி விடுகிறது. பதினாறாம் நூற்றாண்டின் இயற்க்கையை வழிபடும் இயக்கம்,

Nature herself her shape admires
The Gods are wounded at her sight

என்று பெண்மையையும் தோளில் தூக்கிவைத்துப் பாராட்டிப் போற்றியது என்பதற்கு 'யுஸ்டேஷியா வை' பாத்திரத்தை உதாரணமாக கூறலாம். இயந்திர நாகரிகத்தை வெறுத்து அமைத்திக்குத் திரும்பும் குறியீடு நாவலில் தொக்கியிருக்கிறது. இன்பத்தோட்டத்தில் இணைந்து வாழ்ந்த இரு ஜோடி காதலர் களில் கண்ணிழந்து கஷ்டப்பட்டான் ஒருவன், காதலை இழந்து தவித்தான் இன்னொருவன். கற்பிழந்தாள் ஒருத்தி, கௌரவத்தை இழந்தாள் மற்றொருத்தி. இது இயற்கையின் தண்டனையா? இறைவனின் தீர்ப்பா? என்று கூட கதையை சுருக்கிச் சொல்லிவிடலாம். ஆறுபாகங்களில் அத்தியாயங்கள் ஏத்தினச் சுருக்கமான கவிதைத்தலைப்பை தாங்கியிருக்கின்றன. கிரேக்க அவல நாடங்கள் போல் catastrophe முடிந்தும் கடைசியில் ஒரு aftercourse ஏன் ஒட்டவைக்கப்பட்டிருக்கிறது? ஒரு கழுவாய் அல்லது விமோசனம் (redemption or purgation) முக்கியமான அம்சமல்லவா?

எட்ஜான் பொட்டல்தான் நாவலின் நிலைக்களம், தலைமைப் பாத்திரம் இயக்கும் சூத்திரதாரி எல்லாமே. இதன் மேற்குப் பக்கமான. ப்ளூம்ஸ்எண்டில் கணவனை இழந்த வயதான விதவை திருமதி இயோபிரைட் அமைதியே உருவாய் தன் அண்ணன் மகள் தமாஷின் துணையுடன் காலத்தை கழித்து வருகிறாள். - தாய் தந்தையரை இழந்துவிட்ட தமாஷினுக்கு அத்தைதான் தெய்வம். இயோபிரைட்டின் ஒரே மகனான கிளிம் உலகக் கலாச்சாரமையமான பாரிஸ் பட்டணத்தில் ஒரு பிரபல வைரக்கம்பெனியில் மேனேஜர். இதற்கு கிழக்கில் சற்று தூரத்தில் டேமன் வில்டீவ் அநாதைப்பெண்கள் தங்கும் விடுதி நடத்தி வருகிறான். லண்டனில் ஏற்கனவே பார்த்த எனஜியர் தொழிலுக்கு முழுக்குப்போட்டு எட்ஜானில் குடியேறிய இவன் பொல்லாத பொம்பிள்ளைபொறுக்கி. மலர்விட்டு மலர்தாவும் தும்பியான இவன் மாயாலீலைகள்தான் அமைதியான எட்ஜானில் பலத்த புழுதியை பரப்பியது. மறுபுறம் மிஸ்டோவர்நேப் புக்கு நேர்எதிர் மேட்டுப் பகுதியில் ஓய்வு பெற்ற கடல் சிப்பந்தியான கேப்டன் ட்ரு

படிப்பகம்

padippakam

தன் மகள்வழிப் பேத்தி அழகி யுஸ்டேஷியாவுடன் வசித்து வருகிறான். இரண்டு குடும்பங்களுக்கும் சண்டையில்லாவிட்டாலும் பேச்சு வார்த்தை புழக்காட்டங்கள் அதிகம் கிடையாது. மீதி ஆங்காங்கே குடியானவர் குடிசைகள் காட்டில் முள்வெட்டி ஜீவிப்பவர்கள் இத்யாதிகள். ஆரம்ப அத்தியாயம் எட்ஜான் மண்ணைப் பற்றிய அறிமுகம் புயல் இதற்கு காதலன், காற்று நண்பன், நாகரிகம் ஜென்ம எதிரி. ஆறுகடல் வற்றலாம். ஏரிகுளங்கள் காயலாம். கிராமங்கள், மக்கள் மாறலாம்! ஆனால் எட்ஜான் மட்டும் எத்தனையுகமானாலும் அப்படியே குத்துக்கல்லாகவே இருக்கும் ஒரு நவம்பர் மாத சனிக்கிழமை, முன்பனிக்கால சாயங்கால நேரம் ஒரு கிழவன் ரோமன் ரோட்டில் பொடி நடையாக போய்க் கொண்டிருப்பதுடன் கதை துவங்குகிறது. இதன் atomoshere ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லட்' முதல் காட்சியில் வரும் 'Who is there?' எலிசனூர் கோட்டை நள்ளிரவு விபரனை போல் சஸ்பென்சில் அமைந்துள்ளது. அவனோடு டிக்கரிவேன் என்ற மூடுவண்டிக்காரன் சம்பாஷித்துக் கொண்டு பயணம் செய்கிறான். வெசக்ஸ் விவசாயிகளின் பட்டிகளுக்குச் சென்று செம்மறியாட்டின் கொம்புகளுக்கு சிவப்புச்சாயம் அடித்துப் பிழைக்கும் தொழில் அவனுடையது. வண்டியிலிருந்து ஒரு பெண் இறங்கி புதருக்குள் மர்மமாக மறைகிறாள். தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றப்பட்ட இவள் நாவலின் இரண்டாவது கதாநாயகி தமாஷின்- டிக்கரிவேனின் காதலி.

தீமைகளையும் தேவையற்ற பழைய பொருள்களையும் நெருப்பில் போட்டு கழிக்கும் பூர்வீகப் போகிப் பண்டிகையான 'போன்பையர், எட்ஜானில் வருடந்தவறாமல் அனுஸ்டிக்கப்படுவது. சாக்சானியர் காலத்திலிருந்து தொடரும் இல்விழாவில் புதிதாக கல்யாணமான இளஞ்ஜோடிகள் ஓரிடத்தில் கூடி நடனமாடுவது சம்பிரதாயம். ஏசுவைத் தொழ எட்ஜானில் மாதாக் கோயில் இல்லாததால் ஏங்கிள்பரிக்குத்தான் போக வேண்டும் தைப் பொங்கலுக்குமுன் கார்த்திகை கூம்பு பொருத்துவது போல் டிசம்பர் 25 கிருஸ்துமஸ் விழாவுக்குமுன் நவம்பர்- 15-ல் இது நடைபெறும். எட்ஜான் எங்கும் இளசுகள் தீ எரித்து சந்தோஷத்திலிருந்த இத்தருணத்தில் கிளிம் இயோபிரைட் பாரிஸிலிருந்து கிருஸ்துமஸ் வைபோவத்திற்கு வருவதாக பேச்சு அடிபடுகிறது. சிறுவயதிலேயே ஊரை விட்டுச் சென்றவன் அல்லவா? சொர்க்கத்திலிருந்து இறங்கும் தேவனின் வருகையைப்போல் யுஸ்டேசியாவின் இரண்டு கண்களும் ஆவலுடன் காத்துக்கிடந்தன.

புத்திசொல்ல யாருமில்லாத யுஸ்டேஷியா தண்ணீர் தெளித்து விட்டதுபோல் தன்போக்கில் திரிகிறாள். அடைய நினைத்த ஒரு பொருளை அடுத்தவர்களுக்கு விட்டுக்கொடுத்தது அவள் அகராதியில் கிடையாது. பட்மவுத்திலிருந்து பாட்டன் வீட்டுக்கு வந்ததும் அவள் பிடித்து அடைக்கப்பட்ட கூண்டுக் கிளி ஆனாள். அவள் தந்தை பட்மவுத்தில் ஒரு பிரசித்தி பெற்ற இசைக் குழுவில் பேண்டு மிஸ்டராக இருந்ததால்

படிப்பகம்

padippakam

சுபாவத்திலும் சரி பேச்சிலும் சரி ஒரு இசை ரத்தம் ஓடிக் கிடந்தது. தாய் சிறுவயதிலேயே மரித்துவிட்டதால் தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போய்விட்டது இந்த அடங்கி நடக்காத போக்குத்தான் பின்னால் அவள் வாழ்வையே சூறையாடி விட்டது. தகப்பன் கஷ்டப்பட்டு பட்மவுத் பள்ளியில் சேர்த்து விட்டான். சரித்திர புருஷர்களான வில்லியம் தி கான்குவிரர், ஸ்டாபோர்டு புருக், நெப்போலியன் போனபர்ட் இவர்களை கடவுளாக கும்பிட்டாள் கதாநாயர்களாகவும் வரித்துக் கொண்டாள். இவள் தாயும் ராங்கிக்காரிதான். புருஷனுக்கு கோடு கிழித்திருந்தாள். இதனாலோ என்னவோ அந்த முண்டை இறந்ததும் துக்கம் தாங்காமல் இவனும் குடியால் கெட்டொழிந்தான். தாயின் திமிர் யுஸ்டேஷியாவுக்கும் ஒட்டிக் கொண்டது.

யுஸ்டேஷியாவை– raw material of the divinity. ஒலிம்பஸ் மலையில் குடிகொண்டிருக்கும் மாடல் தேவதை வில்லியம் மாரிஸ் கவிதையில் வரும் கனிவர் அரசி போன்றவள். குளித்து கூந்தலை உலர்த்தி நின்றாள், கவர்ச்சியில் ஸ்பிங்ஸ் சிற்பம் தோற்றுவிடும். வெண்ணிறத்தில் இவள் பச்சை நரம்புகள் பிதுங்கிக் கொண்டிருப்பவை வயோலாவின் குரல். பாரசீகத்து ரோஜா முகம். ஏனோதானோ என்று விட்டால் இதழ்களை வண்டுகள் மொய்த்துக் கொள்ளும். எப்போதும் கனவில் மிதக்கும் 'Pagan eyes' விஷேசமான அடையாளங்கள். ஷேக்ஸ்பியர் லுக்ரிஸியாவின் வெல்ல முடியாத இரண்டு உலகங்களைப் போன்ற குத்தான மார்பகங்கள் இவளுக்கு இல்லை. இருந்தாலும் கால்கள் இரண்டும் கடைந்தெடுத்த வெண்தந்தங்களின் வழுவழுப்பை கொண்டிருந்தன. பட்மவுத் இளமைக் காலத்தை நினைத்து நினைத்து ஏக்கப்பெருமூச்சு விடும்போது தலையனை நனைந்து ஆடைகள் கலைந்து அம்மணமாவது அவளுக்கே தெரியாது. குளிர் கால இரவு மேகங்கள் நிழலுக்கு இடமில்லாமல் தவிப்பது போல் அவள் அடர்ந்த கருங்கூந்தல் நெற்றியில் தொங்கிக் கொண்டிருந்தன. மொத்தத்தில் இவள் ஒரு மோகினி.

இரவு முப்பது மைல் தொலைவிலுள்ள கடற்கரை நகரமான பட்மவுத்திலிருந்து இப்படியொருத்தி எட்ஜானுக்கு ஏன் வந்தாள்? எட்ஜான் ஜெயிலில் இவள் தண்டனைக் கைதி. உயரமான இரண்டு குன்றுகள் நடுவில் வீடு. மேலே பனி மூடிய தொடுவானம் அங்கிருந்து உருண்டு விழுந்தால் இங்கிலீஷ் கால்வாயில்தான் பிணம் மிதக்கும். பாட்டன் கப்பல் செலுத்தும்போது உபயோசித்த டெலஸ்கோப்பை மாட்டிக் கொண்டு, செத்துப் போன பாட்டியின் பழைய மடிக் கடிகாரத்தை வைத்துக் கொண்டு சுற்றித் திரிந்தாள். மகாவீம்புக்காரியான இவளுக்கு இமோஜன்போல் தொடையில் மச்சமிருந்திருந்தால் ரோவம் கூடியிருக்கும். இவளை 'சூனியக்காரி'யாக மகனிடம் திருமதி இயோபிரைட் எச்சரித்தாள். எஸ். டி கோலிரிட்ஜின் 'chritabel' கவிதையில் வரும் துஷ்ட தேவதை ஜெரால்டின் சாயலும் செயலும் தெரிந்தாலும் வாழ்வின் மீதான இவளது அர்த்தங்கள்

படிப்பகம்

padippakam

நியாயமானவை சூசனின் குழந்தை இவளைப் பார்த்து பயந்து பிதற்றியபோது யுஸ்டேஷியா போன்ற மெழுகுப் பொம்மை செய்து குண்டூசிகளால் குத்தி – ‘கண்ணாமுழி சுண்ணாம்பாகப் போவ; கறுத்த முழி நிறுத்தி எரிய’ – என்று மிளகாய் சுத்தி கொடும்பாவியாக நெருப்பில் போட்டு எரிந்த போது சுரம் நீங்கி விடுகிறது. பின் வருவதை முன் உணர்த்தும் இச்சம்பவம் ஒரு டிராமாட்டிக் ஐரணி. சில்லாக்குலுக்கி, சிறுக்கி, கள்ளி இவள், பாமர மக்களின் பார்வையில். யுஸ்டேஷியாவின் அழகை எதிர் கொள்ளவோ, ஈடுகட்டவோ எட்ஜானியில் யாருக்குத் திராணி யிருக்கிறது. ஒரு காட்டு நிலவின் மயக்கும் தன்மைபோல் ஒரு முறை பார்த்துவிட்டாள் இழுத்துக் கொள்ளும் காந்தம் அவளது உடல் வசீகரம். வில்டீவ் ‘யுஸ்டேஷியா முகத்தைப் போல் இது வரை கண்டதே இல்லை’ என்கிறான். டெஸ் அப்படியல்ல. உடம்பின் அசைவில் ஒரு மிருக மதமதப்பு மின்சாரம் போல் இழையோடியிருந்ததால் குறைந்தது நான்கு தடவையாவது திரும்பிப் பார்க்க வேண்டும். யுஸ்டேஷியா ரொமாண்டிக்கான கும்மிருட்டு. டெஸ் வெட்ட வெளிச்சமான யதார்த்தம். பகீரத பிரயத்தனம் செய்தும் யுஸ்டேஷியாவை வில்டீவ் கடைசி வரை நெருங்க முடியவில்லை. ஆனால் டெஸ் அலெக்கிடம் ஆரம்பத்திலியே பலியாகி விடுகிறாள். யுஸ்டேஷியா கல்யாண மாகியும் தாயாகவில்லை. டெஸ் கழுத்தில் தாலியேறு முன்னரே பிள்ளை பெற்றவள். குடும்பச்சுமை டெஸ்சுக்கு. யுஸ்டேஷியா எதற்கும் அலட்டிக் கொள்ளாத சுதந்திரப் பறவை. இவளது அகந்தையும் பேராசையும் சொல்லிமாளாது. தன் அழகின் மந்திர சக்தியை அறிந்து வைத்திருந்த இவள் யாரையும் ஆட்டிப் படைக்கும் வலிமை பெற்றிருந்தாள். இவள் நாட்டுக்கு ராணி யாக இருக்க வேண்டியவள் தப்பி பிச்சைக்கார கிளிம்மிடம் சிக்கிக் கொண்டாள் ஒரு ‘misfit’ ஆக. பாரிஸ்பகட்டுக்கு ஆசைப் பட்டாலும் இவளது காதல் உண்மையானது. ஹார்டி–எம்மா தாம்பத்தியச் சிக்கல்கள் கிளிம் – யுஸ்டேசியாவிலும் பொருந்திக் கிடக்கிறது

ஆரம்பத்தில் யுஸ்டேஷியா வில்டீவை ஒரு பொழுதுபோக்கு பொம்மையாகத்தான் வைத்து விளையாடினாள். முத்தமிட அனுமதி கிடையாது. கை மட்டும் குலுக்கலாம். முதன்முதலாக ‘போன் பைர்’ ஒரு வசந்தத்தில் எரிந்த போது – வில்டீவ் ஓடோடி வந்து பிளாக்பாரோ பள்ளத்தில் யுஸ்டேஷியாவை சந்தித்தான் பெரியஎதிர்பார்ப்புடன். அவள் விஷமத்தனம் அவன் ஆண்மையைச்சீண்டி தமாஷினை காதலிக்க நிர்ப்பந்தித்தது. இருவரும் ஆங்கில்பரி சர்ச்சில் நின்றபோது அனுமதிச்சீட்டின் வில்லங்கம் காரணமாக திருட்டுத்திருமணம் தடை பட்டது. மூதேவி தமாஷினை அங்கேயே கைகழுவிவிட்டு வீடுவந்ததும் வீழ்ந்தாள் தன் ஒரே எதிரி என்று வில்டீவை மீண்டும் தன்பக்கம் இழுத்துக் கொள்கிறாள். டிக்கரிவேன் தமாஷினை மனமார நேசித்தும் அந்தஸ்து காரணமாய் அத்தைக்காரி பெண்தர மறுத்துவிடுகிறாள்.

இந்நிலையில் கிளிம் வருகை, பாரிஸ் என்ற வார்த்தை காதில் கேட்டதுதான் தாமதம் காதலிக்க ஆரம்பித்து விட்டாள்

படிப்பகம்

padippakam

புதுச்சட்டை தைத்ததும் பழையது எறியப்பட்டதுபோல் வில்டீவ் முழுக்க ஒதுக்கப்பட்டதால் அவனை பழிவாங்க தமாஷினுக்குத் தாலி கட்டினான். பெண்களை மசியவைப்பதில் கில்லாடியான, வில்டீவ் விரித்த வலையில் தமாஷின் விழுந்தது பெரிய அதிசயமில்லை. வில்லாதி வில்லனான, லேடிகில்லருக்கு இந்த நாட்டுக்கட்டை எம்மாத்திரம்?

கிளிம் இயோபிரைட் சொந்த ஊருக்குத் திரும்பியதன் உள்ளார்த்தம் பாரிஸ் படோடபத்தின் மீதான வெறுப்பு மட்டும் மூலகாரணமல்ல, சொந்தத்தில் ஒரு பள்ளிக் கூடம் நடத்தி அறிவைப்பரப்பும் லட்சியமும்தான். எட்ஜான் பூமி பூரண எழுத்தறிவு பெரவேண்டும் என்பதும் அவனது வேட்கை இவனது எதிர்காலத் திட்டம் தாய் கட்டியிருந்த மனக் கோட்டையை தகர்த்தது. பத்தாதற்கு யுஸ்டேஷியாவின் கரங்களில் சிக்கியது அவனை வேதனைக்குள்ளாக்கியது. எட்ஜான்வாசிகள் கிளிம்-யுஸ்டேஷியாவை ஒரு கணவன் மனைவி ஜோடிப்புறாக்களாக இணைத்துப் பேசிக்கொண்டது யுஸ்டேஷியாவின் காதில் தேனாக பாய்ந்தது. அந்த ஊர்க்குருவி உடனே உயரப்பறந்து வானையே பிடிக்க நினைத்துவிட்டது. பிரெஞ்சு புரட்சியின் போது பதினான்காம் லூயி தலை வெட்டப்பட்டதை எட்ஜானில் பயத்துடன் பேசிக்கொண்ட போது கிளிம் குழந்தை. மகாபாட்டாளியான அவன் தந்தை மண்ணைக்கிளறியே இறந்துவிட்டான். ஒரு உறவினர் பட்மவுத்கடையில் அவனை சேர்த்துவிட முயன்றார். ஆனால் லண்டன்போய் பிறகு பாரிஸ் சென்று விட்டான். இளமையில் காலடிபட்ட இடங்கள் இன்றும் அவனை குளிர்ச்சியுடன் வரவேற்றன. அப்பாடா தாயின் முலைகளை உலுக்கிச்சப்பும் குழந்தைபோல் உருண்டு புரண்டான்.

கிருஸ்துமஸ் ஈவுக்கு எட்ஜான் இளசுகள் **‘மம்மிங்’** நடனம் ஏற்பாடு செய்திருந்தனர். இதன் ஒத்திகை கேப்டன் வீட்டிலும் அரங்கேற்றம் இயோபிரைட் வீட்டிலும் நடந்தது. **சார்லி** என்ற யுஸ்டேஷியாவின் பண்ணைப்பையன் **‘டர்க்கிஸ் நைட்’** வேஷம் போட உடைகளை வைத்திருந்தான் யுஸ்டேஷியாவை அவன் கற்பனையில் நினைத்து மகிழ்வதுண்டு. அந்த உடைகளை யுஸ்டேஷியா தரித்துக்கொண்டு ஆண் வேஷத்தில் கிளிம்மை அவன் கண்டு கொள்ளாதபடி சந்தித்து திரும்பினாள். இதற்காக சார்லி யுஸ்டேஷியாவின் கையை கால்மணி நேரம் பிடித்துக் கொள்ளும் உரிமை ஒப்பந்தம் பேசியபடி நிறைவேறியது. கிளிம் யுஸ்டேஷியாவை கேள்விப்பட்டு பள்ளத்தாக்குகளில் திடீரென்று தோன்ற மாட்டாளா? என்று உறக்கமின்றி திரிந்தான். செவ்வானத்திலும் அந்தத் தேவதையின் வெண்சுடர் முகம் தென்படவில்லை. இப்படியிருக்க ஒரு நாள் கேப்டனின் சேட்வாட்டர் தோட்டத்தில் வாளி எதிர்பாறாமல் அறுந்து கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. எப்படி தண்ணீர் எடுப்பது? பன்னிரண்டு திடகாத்திரமான ஆட்கள் முயன்றும் முடியாமல் போகவே, வந்த கிளிம் துணிந்து இறங்கினான் அப்போது; ‘‘அவர் இடுப்பில் கயிறு கட்டுங்கள் இல்லாவிட்டால் ஆபத்து’,

படிப்பகம்

padippakam

என்று யுஸ்டேஷியாவின் கரிசனக் குரல்கேட்ட போது முதல் சந்திப்பு. அவன் உடம்பு சிரைத்ததற்கும் நனைந்ததற்கும் பெரிதும் ஒத்தலனயாக பேசினாள். வாயில்லாபுதர்கள் எல்லாம் அவர்களது உரையாடல்களை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தன. பாரிஸ் சொர்க்கத்தைப் பற்றியே அவனிடம் மனப்பாடமாய்ச் சொன்னாள். லூயிஸ் மன்னர்களின் வார்சேல்ஸ் அரண்மனை, கடற்கரை மாளிகையான அப்போலன் காலரி, பேண்டின்ப்ளு, செயின்ட்கிளவுட், தி பாய்ஸ் - கலையரங்கங்கள் இவற்றைச் சொன்னதும் அவனுக்கு வெறுப்புத்தான் மிஞ்சியது.

எட்ஜானில் சந்திரகிரகணம் ஏற்பட்டபோது இருவீட்டுக் கிழடுகளும் சர்ச்சுக்கு சென்றுவிட்டன வெளியில் உலவிக் கொண்டிருந்த கிளிம்மை ஒரு முகமூடி உருவம் கட்டித்தழுவி முத்தமிட்டது 'கிளிம் டியரஸ்ட்' என்று மை யுஸ்டேஷியா அவனும் இறுக்கிக் கொண்டபோது பேச்சுவரவில்லை. மூச்சுத்தான் உஷ்ணமாக வந்தது. தன் பள்ளிக்கூடத்துக்கு பெண் உதவியாளராக அவளை பயன்படுத்திக் கொள்ள நினைத்திருந்தான். அவளோ பாரிஸ் சொகுசே குறியாக இருந்தாள். திருமணத்திற்கு தாயார் சம்மதிக்கவுமில்லை வரவுமில்லை ஒருவழியாக ஒதுக்குப்புறமான வீட்டில் தனிக் குடித்தனம் தொடங்கியது. மழைக்காலத்தில் உள்ளேயே அடைந்துகிடந்தனர் இரண்டு நட்சத்திரங்களும் ஒன்றைஒன்று விடாமல் சுற்றிக் கொண்டாலும் தூரப்பார்வைக்கு ஒன்று போல்தான் தெரிந்தது. டெஸ்சும் ஏஞ்சல்கிளாரும் இப்படித்தான் ஒருவீட்டில் முதலிரவை சந்தித்தபோது அவள் ஏற்கனவே கெடுக்கப்பட்டு ஒரு குழந்தைக்குத் தாயானவள் என்பதும் அவன் லண்டன் விபச்சார விடுதியில் ஒரு இருபத்து நான்கு மணிநேரம் கழித்தவன் என்பதும்-இருவர் வாயிலிருந்து வெளிவர அதுவே அவர்கள் பிரிவுக்கு வித்திட்டுவிடுகிறது. தாயின் நிரந்தரப்பிரிவு கிளிம்மை அரித்துத்தின்றது. ஆசிரியத் தொழிலுக்காக நிறைய புத்தகங்கள் படித்தான். பட்மவுத் பள்ளித்திட்டம் யுஸ்டேஷியாவை பொடிப் பொடியாக பொசுக்கியது. இவனுடன் வாழ்வதைவிட சாவதே மேல் போல் தோன்றியது. திடீர் என்று இடித்தஇடியில் தற்காலிகமாக கண்பார்வை இழக்கிறான். அழுக்குச்சட்டை போட்டுக்கொண்டு ஓயாமல் முள்வெட்டு கிறான். கானல் நீரைக்கண்டு ஏமாந்த கலைமான் கதையாயிற்று அவள் எதிர்காலக்கனவுகள். அவள் தூணைக்கட்டிப்பிடித்துக் கொள்ளவேண்டியதாயிற்று. எப்படியோ இவர்களின் பிளவு வில்டீவுக்கு எட்டியது. சதியாலோசனை! ஒரு கிராமத்தில் நடந்த விருந்தில் அவள் வில்டீவுடன் நடனமாடினாள். திருமணத்துக்குப்பின் நின்றுபோன உறவு மீண்டும் புதுப்பிக்கப் பட்டது. இரவு நேரங்களில் அவள் வீட்டை மொய்த்ததை டிக்கரிவேன் கண்காணித்ததால் சொந்தக்காரனாக பகலிலையே வரத்துணிந்துவிட்டான். கைவிடப்பட்ட அபலை மனைவியான தமாஷினுக்கு டிக்கரி எல்லா உதவிகளும் செய்தான். தன் அத்தை தந்த 50 கினியாக்களை வில்டீவிடம் பந்தயமாடி நூறாக பெருக்கி அவளுக்கு சேமிப்பாக்கினான்.

படிப்பகம்

padippakam

காலம் என்னவோ ஓடிக்கொண்டு தானிருந்தது. நொந்த மனசை மாற்றிக்கொண்டு மகனைப் பார்க்க முடிவு எடுத்தாள் இயோபிரைட். கொளுத்தும் கோடைவெய்யிலைப் பொருட் படுத்தாமல் வந்து கதவை இருமுறை பலமாகத்தட்டினாள் உள்ளே பழைய காதலனுடன் சல்லாபச் சொல்லாடிக் கொண்டிருந்த யுஸ்டேஷியா மாமியாளைப் பார்த்தும் கதவைத் திறக்கவில்லை. கோழிகூப்பிடும் போதே முள்வெட்டச் சென்ற கிளிம் அலுப்பில் முன்கட்டில் தூங்குகிறான். இக்காட்சியைக் கண்ட பெற்ற மனம் சுக்குநூறாக சிதைந்தது. தன் மகன் உத்திரவால்தான் தன்னைக்கண்டும் யுஸ்டேஷியா தாழ்ப் பாளை திறக்கவில்லை என்ற கசப்புடன் வெளியேறினாள். ஆனால் உண்மை அதுவல்ல. தூக்கத்தில் கிளிம் 'அம்மா'. என்று உலறியது நிஜமான அழைப்புத்தான் என்று அவள் வானாவிருந்து விட்டாள். அதுமட்டுமல்ல மகனைத்தானே பார்க்கவந்தாள் என்னை இல்லையே! என் மீது கோபம் கொள்ள நான் எந்த தவறும் செய்யவில்லையே என்று சமதானப் படுத்திக் கொண்டாள். அதே சமயத்தில் இங்குவந்தது இதுவே முதலும் கடைசியுமாக இருக்கட்டும் என்று வில்டீவை எச்சரித்து வெளியேற்றினாள். ஆனால் தன் உரிமையான யுஸ்டேஷியாவை வில்டீவ் இழக்கவிரும்பவில்லை. ஆயிரம் கவிஞர்கள் இரவு பகலாக ஒன்று சேர்ந்தாலும் அவள் அழகை பற்றி ஒரு வரிகூட பாடமுடியுமால் திக்கித்திணறி விடுவார்கள். என்பது அவன் எண்ணம். எனவே பனிக்கட்டி உருகும் சமயம் பருகிவிடத் தயாராக இருந்தான். விதிவிளையாடிய இக்கட்டம் நாவலின் திருப்புமுனையாகிவிட்டது.

அவமானத்தால் தலைகுனிந்து திரும்பிய துர்ப்பாக்கியத் தாய் தன் ஒரேமகன் வாழ்வு குழைந்து விட்டதுகண்டு மேலும் எட்டிவைக்க முடியாமல் மண்ணில் சாய்ந்தாள். யுஸ்டேஷியா வில்டீவுடன் கொஞ்சிய காட்சி அவள் உடம்பை தகித்தது. பாரம்பரியமாக மானரோஷத்துடன் வாழ்ந்த குடும்பத்தில் இப்படி ஒரு ஓடுகாலியா? எடஜானில் ஊர்ந்து கொண்டிருந்த ஒரு கருநாகம் அவளைத் தீண்டியது. வாயில் நுரைதழும்பியது. ஜானி நான்சச் என்ற சிறுவனிடம் தன் மகனைத் தூங்கவைத்து விட்டு மாற்றானுடன் சல்லாபம் செய்த நடத்தைகெட்ட மருமகளைப் பற்றி எல்லாம் சொல்லிவிட்டாள். சாம் என்ற விறகு வெட்டியும் காப்பாற்ற ஓடிவந்தான். அவன் தந்தை இப்படி பாம்புகடித்து இறந்த போது விஷம் தீண்டிய இடத்தில் வேறு நாகங்களைக் கொன்று எரித்து அதன் கொழுப்பைத் தடவினார்கள் அதே நாட்டுவைத்தியம் செய்தும் பிழைக்க முடியவில்லை (ஆர் ஷண்முகசுந்தரத்தின் 'பனித்துளி'யில் முத்தாயாள் மருந்தை குடித்துபோது நாவிட்டையை கரைத்து வாயில் ஊற்ற வாந்தி எடுத்து அவள் பிழைத்துக்கொள்கிறாள்.)

தாயின் தகனத்துக்குப்பின் கிளிம் உடம்பும் மனசும் குன்றிக் கிடந்தான். தாடிமுளைத்து இளைத்திருந்தான். யுஸ்டேஷியா பாட்டன்வீட்டுக்கு சீராட்டு வந்துவிட்டாள். வெறிச்சோடி எதையோ பார்த்தவள், துஷ்டமிருகங்களிடமிருந்து பாதுகாக்க தயாராக குண்டுபோட்டு வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துச்

படிப்பகம்

padippakam

சுட்டுக்கொள்ள ஓட சார்லி தடுத்துவிடுகிறான். தன் எஜமானியிடம் விசுவாசமானவன் இவன் தமாஷினுக்கும். வில்டீவுக்கும் பிறந்த குழந்தைக்கு 'யுஸ்டேஷியா கிளிமெண்டென்'- என்ற பெயர் சூட்டியதாக ஒருவன் சொன்னபோது கிளிம் விதியை மிகவும் நொந்து கொண்டான். ராசியில்லாத ஜோடி களின் பெயரையா ஒன்றுமறியாத குழந்தைக்கு நிலையாக வைப்பது? மகன் பிறந்த வேளை வில்டீவுக்கு யோகமடித்தது. கனடாவில் அவன் தாய்மாமன் இறந்துவிட்டதால் அவன் பாங்கு கணக்கில் 12000 பவுன்கள் ஏறியது. தெய்வம் அவனுக்கு கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டியது. புனையாத ஓவியமாக யுஸ்டேஷியா மயிரை விரித்துப் போட்டுக் கொண்டு துக்கித்துக் கிடந்தாள். கைத்தாங்கலாக படுக்க வைத்து அவள் சந்தோஷத்திற்காக சார்லி விறகுகளைப் போட்டு தீ மூட்டு கிறான் ஒருவிதத்தில் அவள் அவனுக்கு அக்காதானே. விளையாட்டுக்காக அவன் செய்தது தனக்காக காதல் அழைப்பு என்று ஓடி வருகிறான் வில்டீவ். பாரிஸ் திட்டம் உருவெடுக்கிறது. புதிய பயணத்தில் இத்தாலி, கிரீஸ், எகிப்து, பாலஸ்தீனம் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா என்று பட்டியல் நீளுகிறது. பணத்தைப் பற்றி இப்போதுதான் முதன்முதலாக யுஸ்டேஷியா நினைக்கிறாள். ஒரு தாழ்வுமனப்பான்மை தலையைச் சுற்று கிறது தன்னை பட்மவுத்துறைமுகத்தில் இறக்கிவிட மட்டும் நாள் குறிக்கப்படுகிறது. அங்கு அவள் கூலி வேலை செய்தாவது, பழைய சிநேகிதி வீட்டில் பாத்திரம் தேய்த்தாவது தனியாக வாழ முடிவெடுத்தாள். வில்டீவ் எவ்வளவு ஆசை காட்டியும் அவள் மசியவில்லை. மனைவியின் மீது சீறிவிழுந்த கிளிம் தன் தவற்றை உணர்ந்து அவளை வீட்டுக்கு அழைக்க முடிவு செய்து ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினான். அதை அறை பெட்ரமாஸ் விளக்கின்மேல் அவள் பாட்டன் சொருகிவிட கவனிக்காமலே போய்விட்டாள். டெஸ் தான்அடிபட்டவள் என்ற உண்மையை விளக்கி திருமணத்துக்கு முதல் நாள் எழுதிய கடிதம் ஏஞ்சல் கிளேர் பார்க்காமல் அது தலையணைக்குள் இப்படித்தான் சிக்கி விபரீதத்தை ஏற்படுத்தி விடுகிறது. இயற்கையின் தாமதங்கள் சரித்திரத்தையே மாற்றி எழுதி விடும் வலிமை வாய்ந்தவை என்பது ஹார்டியின் அசைக்க முடியாத நம்பிக்கைகளில் ஒன்று.

நவம்பர் 6-ல் நிகழ்ந்த துக்கச்சம்பவங்கள் பயங்கரமானவை. உணவை முடித்துக்கொண்ட யுஸ்டேஷியா சரியாக இரவு எட்டு மணிக்கு பச்சைச்கொடி காட்டிவிட்டு குன்றின் மீதிலிருந்து இறங்கி வருகிறாள். நிலத்தில் நடப்பதாக அவளுக்கு நினைவே இல்லை சேட்வாட்டர் குளத்தின் சேறு நிரம்பிய கரையில் குதிரையில் பறந்தடித்து வருகிறான் வில்டீவ் பை முழுவதிலும் வங்கிக்கட்டு நோட்டுகள். மழையும் புயலும் மாறிமாறி அடித்துக்கொண்டதில் எட்ஜான் இருளில் மூடிக்கிடந்தது. யுஸ்டேஷியாவின் உடலை மலைநீர் கழுவித்தள்ளியது. போதிய பணமில்லாத அவள் சுய கவுரவும் திட்டத்தை தவிடுபொடியாக்கியது. என்ன நினைத் தாளோ? பாவிமகள் எட்டிக்குதித்துவிட்டாள். நெருங்கிவிட்ட வில்டீவ் அவளை காப்பாற்ற குதித்தான். விஷயம் தெரிந்து ஓடி வந்த கிளிம்மும் குதித்தான். யுஸ்டேஷியாவையும் வில்டீவையும்

படிப்பகம்

padippakam

வெள்ளத்தின் நீர்ச்சூழல் பதம் பார்த்துவிட்டது. டிக்கரிவேனின் முயற்சியால் கிளிம் காப்பாற்றப்பட்டான். காலையில் கரையில் பிணமாக கிடந்த யுஸ்டேஷியாவின் முகம்முழுதும், மறைத்து அவளது அடர்ந்த கூந்தல் காடாகக் கிடந்தது. இந்த உடன் போக்கை ஏற்கனவே அரசல்பொரசலாக தெரிந்திருந்த தமாஷின் கைக்குழந்தையுடன் பரிதாபமாய் நின்றாள் செய்திகேட்டு ஓடிவந்த அண்டை அயலார்களான **கிரிஷ்டியன் கேண்டில் - கிரான்ட்பர் கேண்டில்** என்ற ப்ளூம்ஸ் என்ட் சகோதரர்கள், **ஒல்லி டவ்டன், பேர்வேதிமொதி.** ராசெல். சாம்ஜான், சார்லி, சூசன் நான்சச், இவர்கள் செய்வறியாது திகைத்து நின்றனர்.

பதினெட்டு மாதங்களுக்குப் பின் டிக்கரிவேன் கிளிம் அனுமதியுடன் தமாஷினைக் கல்யாணம் செய்து கொண்டான் ஒரு காலத்தில் அவளைச் சந்திப்பதற்காக ரோமன் ரோட்டுக்கு தினமும் ஐந்துமைல் நடந்தவன் இப்போது சொந்தமாக பால் பண்ணை நடத்துகிறான். இரண்டு பெண்களின் சாவுக்குக் காரணமாக கிளிம் கழுவாய் தேட ஊர்ஊராக தீவிரமதப் பிரச்சாரம் செய்ய கிளம்பிவிட்டான். ஆனால் இரண்டு கல்லறைகளுக்கு அவன்அடிக்கடி சென்று கொண்டிருந்தான். ஒன்று தாயினுடையது. மற்றொன்று மனைவியினுடையது. எட்ஜான் மண்ணில் இவர்களது கதைகள் நெடுங்காலம் பேசப்பட்டன.

கிளிம் பாரிஸிலிருந்து திரும்பாதிருந்தால், யுஸ்டேஷியா பட்மவுத்திலேயே எவனையோ ஒருத்தனைக் கைப்பிடித்திருந்தால் வில்டீவ் லண்டனிலேயே நிலைத்திருந்தால் - இந்தத்துக்க காவியம் நடந்திருக்குமா? எதிராக யுஸ்டேஷியா பாரிசுக்கு வில்டீவுடன் உடன்போகி கால்போட்டிருந்தாலோ கிளிம் இயோபிரைட்டுடன் சமாதானமாகி கையில் ஒன்றும் இக்கத்தில் ஒன்றும் ஏந்தி பெருவாழ்வு வாழ்ந்திருந்தாலோ ஒரு ஜோலாவையோ ஸ்காட்டையோதான் நாம் பார்த்திருக்க முடியும். பண்படுத்தப்படாத மண்ணில் கன்னிகழியாத ஒரு பெண்ணின் ஏக்கத்தை எதிரொலித்த தணித்துவக் கலைஞனான தாமஸ் ஹார்டியை தரிசித்திருக்க முடியாது! ஒருத்தனுக்கு மனைவியாகவும் அடுத்தவனுக்கு ஆசைநாயகியாகவும் ஒரே சமயத்தில் இழைத்த இரட்டைத் துரோகத்திற்காக அன்னா ஓடும்ரயிலில் தலை கொடுத்து முடிவுதேடிக் கொண்டாள் ஆனால் ஒருபாவமும் அறியாத உத்தமி யுஸ்டேஷியாவின் தற்கொலை தேவைதானா ... ...

— மாரப்பன்

வணிகம்

இன்று கிடையாது என்றெழுதியிருக்கிறது
முதுகில் இல்லை முகப்பில்
என்றும் கிடைக்காதானாலும்
மொழி பெயர்க்கப்பட்ட பெர்டோல்ட்
ப்ரக்டை விற்றால் வாங்கலாம்
குளியல்சோப், புகையிலைப் பொட்டலம்
இன்ன பிற,

உ. செ. துளசி.

படிப்பகம்

padippakam

பாம்பு, பாம்பு

அஞ்சிச் சிதறி ஓடும் மனிதர்களை
மோதிக் கொள்ளாமல் விலங்கியபடி
அவர்களை விரட்டிய மையம் நோக்கி
என் பயணம் எதிர்நீச்சலாகியும் கூட
எவ்வளவு ஆர்வமாய்
நான் உன்னருகே வந்தேன்

தன் உடம்பையே சிம்மாசனமாக்கித்
தலைநிமிர்ந்து நின்றிருந்தாய் நீ
அந்தக் கம்பீர அழகில்
காதலாகி வீழ்ந்தேன்.
உன்னை நேர்கொண்டு நோக்குதற்காய்
மண்டியிட்டு அமர்ந்தேன்.

ஒருவரையொருவர்
இமைகெட்டாது பார்த்துக்கொண்டு நிற்கிறோம்.
நம்மிடையே போதிய இடைவெளி—
காலத்தின் சந்நிதியாய் அது விரிந்துகிடக்கிறது.

இதற்குமுன்னும் நாம் சந்தித்திருக்கிறோம்.
தன் குழந்தைகளிடம் விளையாட்டால் வளைந்து
வேடிக்கை காட்டுவது போல்
எங்கள் நிர்வாணப் படுக்கையின்
ஜன்னல் கம்பியில்வந்து நின்றிருந்தாய்.
அப்புறம் ஓர்நாள்
நண்பர் ஒருவரோடு தண்டவாளத்தைத் தாண்டும்போது
ஒரு வினாடி— என் பாதத்தின்கீழ்—
மிதிபடாமல் தப்பித்து என் முன்னே விரைந்தாய்;
உன்முதுகின்மேல் நிலாவொளி வாள்

சரி. இப்போது?
இனி என்ன?
அஞ்சுவோர்க்காக வேண்டி
தன்னை ரகஸ்யத்துள் வைத்துக்கொள்வதற்காக
இப்போது பிரியவேண்டி
விடைபெறுவோமா?
நல்லது. ●

தேவதேவன்

படிப்பகம்

padippakam

நான், நாய்

பின்ஜாமக் கருக்கலில்
வரமாக்கிக் கொண்ட ரத்தக்காயங்களின்
கொத்திப் பிடுங்கும் மரண ஹிம்சையில்
இனி உன்முகத்தில் விழிப்பதில்லை என்று
ஓடிப்போன போது கண்ணுக்குள் உயிர் புதைந்திருந்தது.

நாயும் நாயும் செத்த சேவலுக்காக
குருஷேத்திர யுத்தம் நடத்தி
கடித்துக் குதறிக் கொண்டதற்கு நானா புனை
பக்கத்துக் காட்டானது பொலிக்களை போல்
ஊரை அடித்து உலையில் போட்டுத் திரிந்தது.

குட்டிக்காலத்திலிருந்து வாலைச் சுருட்டி
வரும் போகும் போது என் காரில் விலங்கிடும்
வாயில்லா ஜீவனுக்கு வைத்தியமும் மருந்தும்
தராத துரோகி; தெரிந்ததும் மாட்டாஸ்பத்திருக்கு
ஆட்டோவில் இட்டுச் செல்ல தேடியும் சிக்கவில்லை
கண்ணீரும் ரத்தமாகிச் சொட்டியது.

அப்பா! அதோ நம்நாய்'– என் பையன் காட்ட
கிணற்று வரப்பருகில் பாதி எலும்புக் கூடாய் தரிசனம்
என்னைக் காப்பாற்று! பிழைத்துக் கொள்வேன்!
எந்த ஜென்மத்து செய்வினையோ பனியில் நடுங்கியது.
ஸ்வரணையற்று வாயில் நுரைததும்ப
பின் கால்களை தரையில் தேய்த்து ஊர்ந்து ஓடியது.

ஏழு நாளுக்குப் பின் சுடுகாட்டின் ஊஞ்சமரத்து சன்னிதியில்
குருதி சிநதி குடல் அரித்து விரைத்துக் கிடந்தது
ஓடிப்பார்த்த என் உயிரும் கூடுபாய்ந்தது அதனோடு
பயணம் முடித்துக் கொண்டது. சாகும் வயதா?
இனி வளர்த்தமாட்டேன் நான் ஒரு காலும்
வேறு ஒரு நாய்

— மாரி

இரண்டு கவிதைகள் :

மண்மூடி மக்கிப்போன
சருகுகளிடை நெளியும்
மண்புழுவின்
உயிர்த்துடிப்பாய்
உன் நினைவுகள்

மழைநாளில் ...

இரையின்றிக் கூட்டையும்
தாய்முகம் பார்த்து
பசித்த குஞ்சுகள்
வாய் பிளக்க
இலைகளிலிருந்து
மழைநீர் சொட்டும்.

— ஹரிகண்ணன்.

படிப்பகம்

padippakam

துவைக்கப்படாத கைக்குட்டைகள்

பாடாய் படுத்தி வசமிழக்கத்தூண்டும்
அரூப ராட்சஷனை காட்சிப்படுத்துவது எவ்வாறு
துல்லியமாக
புறப்பாடுகள் இடங்களுக்கு அழைத்துப்போக
இடங்கள் தரும் துயரம்
சொல்லொணாதது
பார்த்திருக்கலாம் யாரேனும்
சாவித்துவாரத்தின் வழியே
பாய்விரித்துப் படுத்து
உயிருடன் எழுந்த காலையொன்றில்
விழிகளிலிருந்து பீறிட்டது இரத்தம்
வீறுகொண்ட எத்தனிப்புக்களின்
சுவடுகள் பாதுகாக்கப்படுகின்றன
இயக்கத்தில் உயிர்க்கும்
கால வேதனை விளிம்பிற்கு வருகிறது
மென்மேலும்
பாம்பிற்கு காதுகளில்லை
நானும் கைக்குட்டையை பாக்கட்டில் ஒளித்து
பேசலாம் சுந்தரி நாம் சிரிக்க
சிரிக்க
நம்நலம் பிறர்நலம் மற்றும்
மலைகளின் பசுமை பற்றி.

○ உ. செ. துளசி

தெவசம்

என் 'வசதி' மீறிய
உன் விருப்பங்களான
உனது மல்லுக் கோமணம்
சனுக்கை
மொட்டமாவுக் கூழ்
நம் கழனிப் புகையிலை
என முடியாமல் போனது.
என்னால் முடிந்த
பருத்தி ஜட்டி
பேனா
பில்டர் காபி
பிராண்ட் சிகரெட்டென
படைக்கிறேன்
உன் பிரேத புகைப்படங்கிழ்,
தாத்தா.
நம் வீட்டு அகல்விளக்கு
மங்குகிறது
'பளிச்'செனும் மின் வெளிச்சப்
பிரகாசத்தில்

தரிசனம்

குப்புற விழு.
பாதமலரை மொய்.
உன் நாற்றங்களை வைத்து
வாசனைகளை நுகர்ந்து கொள்.
பின் தரிசித்துக் கொள்
தலைசூழ் ஒளிவட்டத்தை,
பொற்கரத்தை,
தேவ பாஷையை.
நெரிசலான வரிசையிலிருந்து
தப்பித்து வா.
ரப்பர் செருப்பும்
டவுன் பஸ்ஸுக்குப் பணமும்
இல்லாவிட்டால் என்ன!
காலார நடந்தே போவோம் வா;
கொஞ்சம் அதும் இதும் பேசி.

○ செங்கதிர்

படிப்பகம்

padippakam

கப்சிப் தர்பார் – புதுமைப்பித்தன்

வெளியீடு : **சிலிக்குயில் புத்தகப்பயணம்**
7, டாக்டர் பெசன்ட் சாலை
கும்பகோணம் – 612001
விலை ரூ: 12/.

இரண்டாம் உலகப்போரின் கதாநாயகனும் கழுகு விமானங்களை பறக்கவிட்டு லண்டனையும் வின்ஸ்டன் சர்ச்சிலையும் மூச்சுத்திணர வைத்தவனும், சப்ரிமன் கப்பல்களை கண்டுபிடித்து அமெரிக்காவை நாசம் செய்தவனும், சோவியத் ரஷ்யா மீது பெருஞ்சைனியத்தை ஏவி மக்கள் தொகையை நாலில் ஒரு பங்கு குறைத்தவனுமான அடால்ப் ஹிட்லரின் வாழ்க்கையும் கனவுகளும் பற்றி புதுமைப்பித்தன் மழலை நடையில் எழுதிய புத்தகம் இது. வழக்கமான தத்தித்தத்திப்பாயும் தவளை வேகம் இதில் அதிகம் இல்லை. பொது உடைமையும், முதலாளித்துவமும் ஜோடிசேர்ந்து நாஜிஸ, பாசிஸங்களை நசுக்கியது விந்தையான ஒரு காலகட்டம். புரட்சி அல்லது சமாதானம் தோன்றுவதற்கு முன்னும் பின்னும் இம்மாதிரி 'ஆட்டோகிரஸி' நிகழ்வதற்கு பிரான்சில் நெப்போலியன் முன்னுதாரணம். அரசியல் வெறும் அதிகாரக்குவியல்தான் பு.பி.யின் அதிகாரம் யாருக்கு? வெளிப்படுத்தும் தீர்க்கமான பார்வை. இலக்கியத்தின் சகல பிரிவுகளிலும் துவங்கிய பு.பி.யின் இத்தகைய அரசியல் கண்ணோட்டங்கள் 'பாசிஸ்டு ஜடாமுடி' 'ஸ்டாலினுக்குத் தெரியும்' முதலியவைகளில் திறம்பட பதிந்துகிடக்கின்றன.

'ஆரியபுத்திரன்' 'குலமுறைகிளத்துப் படலம்' அத்தியாயக் கிரீடங்கள் காப்பியபாணியில் இடப்பட்டிருந்தாலும் உயர்வகை நக்கல்கள்தான். ஹட்லர் ஒரு புதிர். அவன் கனவுகள் விபரீதமானவை அதன் வேர்கள் ஜெர்மானிய தத்துவஞானி நீட்சேவிலிருந்து முளைத்திருக்கிலாம். அவனைப் பொறுத்தவரை ஆரியர்கள் ஆளப்பிறந்தவர்கள். மனநோயாளியும் அரைப் பைத்தியமுமான அவன் ஐரோப்பிய அறிவு ஜீவியூத இனத்தை நிர்மூலம் செய்தவன். ஓரினப் புணர்ச்சியாளனான அவன் ரம்பை, ஊர்வசிகளுக்கு மசியாமல், ஒரு குழந்தைக்கு மட்டும் மடியில் இடம் கொடுத்தான். தந்தையின் கும்மாலாட்டம், தாயின் அரவணைப்பு, வெகுண்டபிரச்சாரத்திறன், ஜெர்மன் மொழிபரப்புத் திட்டம், இசையில் நாட்டம், கண்மூடித்தனமான அதிவேக உத்தரவுகள் இவைகள் நமக்குத்தெரிகின்றன. ஹிட்லரை விட புபியின் ஆக்கிரமிப்பு விஞ்சி நிற்கிறது, முன்னுரை எழுதுவதற்கு 'எச்சரிக்கை' விடுத்தவன் புதுமைப் பித்தன். இருந்தாலும் வாசிப்பு அனுபவமாகஅ. மார்க்ஸ் தோன்றியுள்ளார். ராமரத்தினத்தையும் பொதியவெற்பன் இணைக்காததால் நூல் மூடமாகிவிடுகிறது.

படிப்பகம்

padippakam

மேலே சில பறவைகள்

— கால. சுப்ரமணியம்

வெளியீடு: **லயம்**
பெரியூர் Po. சத்தியமங்கலம் – 638 401.
விலை: ரூ 12/-

ஒதுக்க முடியாத பதார்த்தங்கள்: இதுவரை சிறுபத்திரிக்கைகளில் அவ்வப்போது எழுதிய கால சுப்ரமணியம் கவிதைகள் 'மேலே சில பறவைகள்' என்ற தலைப்பில் பிரேமிளின் பிரமாதமான முன்னுரையுடன் ஒட்டுமொத்தமாக தொகுக்கப்பட்டு 'தாத்தாவுக்கு' அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பின் அட்டையில் கால. சுப்ரமணியம் 'Engravings' ஏதோ ஒரு இளம் ஐரோப்பிய கவிஞனைப் போல் அமைந்துள்ளது வசீகரமானதாகும். இந்த 48 கவிதைகளும் ஏற்கனவே லயம் 11-ல் இணைக்கப்பட்டுள்ளது. வாசகர்களுக்கு இரட்டிப்பு வசதி. இவைகள் கவிதைகள் என்ற ராகத்தையே ஒவ்வொன்றும் பிசிறில்லாமல் மௌனமாக இசைத்திருக்கின்றன. முதலாவது தலைப்புக் கவிதையே நம்மை ரக்கை கட்டி வானில் பறக்கச் செய்கிறது கூடு நோக்கிப் பறந்து சென்ற நாரைகள் - பாறையை வெடி வைத்துப் பிளக்கும் மனிதர்கள் மனநிலை இவைகள் ஒன்றாகவே சங்கமித்திருக்கிறது. இரவின் நெருக்கம், வெடிச்சத்தம், களைப்பில் வீடுபோகும் அவசரம் இவைகள் நுட்பமாக ஒன்றிணைக்கப் பட்டுள்ளன. ஓர் உயர்கவிதை எளிமையிலும் கூர்மையிலும் கனம் பெறுகின்றன என்ற கால. சுப்ரமணியம் பார்வை,

'என் கவிதைகள் கூட
தாங்கமுடியாத
வரட்சியில்தான்
பயிராகின்றன (எதிர்முரண்)

என்ற வரிகளில் தீர்க்கமாய்த் தெரிகிறது. 'வேங்கடாசல நிலையம் திருப்பதியின் அற்புதமான குறியீடு. அங்கு நாவிதம், பக்தி வியாபாரம், அருள்சரக்கின் அமோக விற்பனைகள் (வட்டு முதலியனவா?) நடப்பை யதார்த்தமாக்குகின்றன. 'மூன்றாவது உலகம்' ஒரு வித்தியாசமான சித்தரிப்பு. 'ஐந்து கவிதை'களில் பார்த்தசாரதி 'தன்னுள்' சிலவற்றை தேடுகின்றான். 'ஒத்திகையற்ற நாடகம்' சிலப்பதிகார கண்ணகி, ஒற்றைச் சிலம்பை உடைத்ததோடு நின்றுவிடுகிறது. கொங்கையை திருகி வீசியிருந்தால் மேடையே தீப்பிடித்திருக்கும். அவசரமாக திரையை இழுத்து நாடகத்தை முடிக்கும் இளங்கோவின் நிலை ஒரு சுவாரஷ்ய ஓரங்கமாயிருக்கிறது இதேபோல்'தோற்றம்' 'காரணம் வேறு' கவிதைகளில் இடம்பெறும் 'ஒரபோரஸ்' 'சாலமாண்டர்' 'டெமாக்லிஸ்ஸின் கத்தி' – இவைகள் கிரேக்க - எகிப்திய புராணங்களின் பிரதிமைகளைக் கொண்டுள்ளதை பிரேமிள் விளக்கியுள்ளார். 'நிகும்பலை' 'சிவனுக்கு இனி வேலையில்லை' – இரண்டும் இந்திய புராணப் பார்வையில் செதுக்கப்பட்டவைகள்.

படிப்பகம்

padippakam

கடைசிக் கவிதையான 'அரைமணிநேர அற்புதம்' ஜே. கே. அடையாற்றில் உலவியதன் பதிவாக மலர்ந்திருக்கிறது மின்விசிறிக் காற்றையே சுவாசித்துவிட்டு – வெளியில் வீசும் இயற்கைக் காற்றின் அருமையை உணர்ந்தது போல் கால. சுப்ரமணியம் கவிதைகள் சுகாதாரமாய் அமைந்துள்ளன. ஒரு இலையில் எல்லாம் ஆரோக்கியமாக பறிமாறியிருக்க ஒரு சுத்தமான நாக்கு எந்தப் பதார்த்தத்தை ஒதுக்கமுடியும்? ●

பின்நவீனத்துவம், எதிர்நவீனத்துவம், தலித்தியம்.

வெளியீடு: நிறப்பிரிகை பாண்டிச்சேரி – 605 001

விலை ரூ: 5/-

வாழ்க்கைப் போராடட்டத்தில் சாதியம், சனாதனம், வகுப்பு வாதங்கள் சந்தித்து முரண்படும்போது இலக்கியக் கொள்கை கோட்பாடுகளிலும் மாற்றங்கள் பிறதிபலிப்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. வெகுநாள் விமர்சனத்தில் அட்டகாசம் செய்துவந்த மார்க்ஸியத்தை மீறி தமிழில் 'மேஜிக்கல் ரியலஸம்' நுழைக்கப்பட்டது. இதன் பிதாவான தமிழவன் மற்றும் காவ்யா சண்முகசுந்தரம் பக்கவாத்தியக்காரர்களான சண்முகம், நாகாஜுன் இவர்களின் சமாதானக் கடிதங்களுக்கு எதிராக அ. மார்க்ஸ், ரவிக்குமார், இவர்களின் உறுதியான விமர்சனங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலைநாடுகளில் புஷ்வானமாகிவிட்டவை களை தமிழ்சூழலில் திணிக்கப்படலாமா? அ. ராமசாமி, அழகரசன், E. M. சியோரன் இவர்கள் கருத்துக்களும் தமிழவன் நாவலுக்கு சாட்சிகளாக அசோகமித்திரன் என். எஸ். ஜெகன் நாதனும் இழுக்கப்பட்டுள்ளனர். இச்சிறிய நூல் நடப்புகளின் குழப்பத்தை தெளிவாகபுள்ளி போட்டிருக்கிறது. ●

விழிப்பில் ...

எல்லாம் நிகழ்ந்து முடியும் நேரம்
எனக்கே என்னை
அடையாளம் தெரிந்தது —
தெளிவில்லா விட்டாலும் ஓரளவுக்கு!

அனுபவிக்க மறந்த நாட்களை எண்ணி
வருத்தம் பிறிட்டது.
யாருமில்லாத பொட்டல் வெளியில்
கை வீசி நடந்தபோது
தெறித்த வெளிச்சம்
அந்நியச் சாயலைக் கழுவியது.

இப்பொழுதெல்லாம்
வித்தியாசப் படுகிறது என் முகம்.
இன்னும் முழுசாய் நிற்கும் நாட்களைப் பார்த்து
விசிலடிக்குது மனசு.

— ஸந்தோஷ்

படிப்பகம்

padippakam

பிரெஞ்சுக் கவிதை

ராபர்ட் சபாட்டிர்

காலமானி

காலத்தை வென்றவர்க்கு
மரணம் ஒரு விடுமுறை.

தற்கொலையாளிகள் நிலவுக்குக் கீழே
ஜோடிகளாகப் பவனி வருகின்றனர்.
உதட்டோடு உதடு வைத்துப்
பரிமாறிக் கொள்ளும்
முத்தங்கள் முணுமுணுப்புக்கள்.

பறவை, பாடலைப் பேசுகிறது
புலி, கவிதையைப் பேசுகிறது
மனிதன் நிசப்தத்தைப் பேசுகிறான்.

மறுநாட் காலையில் புனர் ஜன்மம் பெற
ஒவ்வொரு இரவிலும்
தீயால் உண்ணப் படுகின்றனர் பெண்கள்.

மரித்தவர் கனவினுள்
நீண்ட அரவங்கள் நழுவிச் செல்கின்றன.
தம்மை உச்சரித்தவனுடைய வாயை
வார்த்தைகள் உண்கின்றன.

வண்ணத்துப் பூச்சியா?—அந்தி ஒளி!
தொலைவில் அகலும் சப்தங்களா?—இல்லை
கபாலக் குழிகளில் கலகலக்கின்றன ஒருசிலகற்கள்!
கால்கள், ஆபரணங்கள், பிரசாதக் கிண்ணங்கள்,
விரைத்துப் போன ஆகாரங்கள்.

கூக்குரலற்ற சுடல்
கவலையற்ற வானம்.
உலர்ந்த இலைகள் அழுத்திக் கனக்க
பாரந் தாங்காமல் நிற்கும் புன்னகையற்ற மரம்.
பசும் புல் கேசம்—பனி மற்றும் நிழலின் ரோமங்கள்
கருத்த காற்றில் சிறகடிக்கின்றன.

LE SABIER/THE HOURGLASS by
ROBERT SABATIER

தமிழாக்கம்: கால சுப்ரமணியம்

EDITED BY: M. SENGUTTUVAN PUBLISHED BY M. ELANGOVAN
PRINTED AT SABANAYAGAM PRINTERS 73-A EAST CAR STREET
CHIDAMBARAM – 608 001.

படிப்பகம்

padippakam

Sadukka Poodham: 2. For Private Circulation only. August '95

ஜேம்ஸ் ஜாய்ஸ் - சில துளிகள்

அயர்லாந்து டப்ளினில் 1882-ல் பிறந்து, மருத்துவம் படித்து, ஐரோப்பாவில் மொழிகள் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியராக கொஞ்சகாலம் வண்டியோடியது. பிறகு பாரிஸில் நிலையாக பட்டறைபோட்டு, ஆரம்ப கவிதைநாடக முயற்சிகளுக்குப் பின் வெளியான 'Dubliners' சிறுகதைகளில் மாப்பஸான் முகம் தெரிந்தாக குற்றம் சாட்டப்பட்டது. முதல் நாவலான 'A Portrait of The Artist as a Young Man' முழுக்க சுயசரிதைத் தன்மையில் நனைந்து கத்தோலிக்கத் திணிப்பை விடைத்து எதிர்த்தது. 16—6—1904 - ஒருநாள் டப்ளின் வாழ்க்கையாக 'Ulyssus' பாரிஸில் பதிப்பிக்கப்பட்டபோது, அதன் பாலியல் வர்ணனைகளை பச்சையான 'ப்ளு பிலிம்' என்று அறிவித்து பிரிட்டிஷ், அமெரிக்க அரசுகள் உள்ளே விடாமல் துரத்தியதால் கடத்தப்பட்டு இருட்டில் வாசிக்கப்பட்டது. கதாநாயகத்தன்மையற்ற வயோதிக விளம்பர சேகரிப்பாளன் லியோபால்டு புளும், வாலிப ஆசிரியன் ஸ்டீபன் இருவரும் முக்கிய பாத்திரங்கள். சுசமாலமான பாடகன் பிளேஸஸ் பாட்வானுடன் படுக்கைப்பசியை தணித்துக்கொண்டு பிறந்த மேனியுடன் விழித்தெழுந்த மாலி புளுமின் மனஓட்டங்கள் நிறுத்தற்குறிகளின்றி 44 பக்கங்கள் பதியப்பட்டுள்ளது நாவலின் ரத்தமும் சதையுமான இறுதிப் பகுதிகள். ஹோமரின்' ஒடிசி' கதாநாயகன் யுலிசஸின் அலைந்துதிரிந்த 'நோஸ்டால்ஜியா' போருக்குப் பின்னாலான நவீனமனிதனின் நிராதரவு நோயாக குறியீடு பெறுகிறது. ஏழாண்டை விழுங்கிய யுக சாதனையான இந்நாவலை ஜீரணிக்கமுடியாமல் 'லண்டன் டெலிபோன் டைரக்டரி' என்று பத்திரிக்கைகள் கெக்கலித்தன. கால, இட, கரு ஜோடனைகளின் தகர்ப்பு, கன்னா-பின்ன நடை, சிக்கலான தத்துவம், தர்க்கம், சட்டம், சரித்திரம், மதம், மருத்துவம், உளவியல், பாலியல், மந்திரவியல், இம்பிரசனிஸம், எக்ஸ்பிரசனிஸம், இமேஜிஸம், ரியலிஸம், சர்ரியலிஸம், சைக்கோ-அனாலிசஸ் சேர்மானங்களின் பிரமாண்டமான அணிவகுப்பால் உலகின் மகத்தான படைப்புகள் பலவும் இதன்முன் சரண் அடைந்தன. 'Anna Livia Plurabelle' 'Haveth Childers Everywhere' நாவல்களும் ஜாய்ஸின் தனித்துவமான முத்திரைகள். கடைசியாக 17 ஆண்டுகளின் கடும் உழைப்பாக 18 மொழிகளின் புதுமொழியாக பவனிவந்த 'Finnigans Wake' ஜாய்ஸியன் கலைக்கு மெத்த உதாரணம். ஒரு ஐரிஸ் ஒப்பந்தக்காரரின் கதையான இதில் அவன் செத்துத்தொலைத்ததாக கட்டையை காட்டுக்குத் தூக்க திடீரென்று பிழைத்து 'விஸ்கி...' என்று வாங்கிகுடித்துவிட்டு நண்பர்களுடன் குஷியாடுகின்றான் என்றால் பாருங்கள். வாழ்வு தூக்கத்தில் நிகழும் கனவு என்பது ஜாய்ஸின் சித்தாந்தம். அப்படியானால் நனவோடை யுக்தி நாவல்கள் பித்தநிலைக் கவிதைகளா? சோற்றை பிரதானமாகக் கொண்ட மார்க்ஸிய மதயானையை கூரிய கொம்புகளால் குத்திக்கிழித்த சீற்றம் கொண்ட சினக்காளையாக ஜாய்ஸ் வர்ணிக்கப்படுகிறார். இருபதாம் நூற்றாண்டு நாவலாசிரியன் ஜாய்ஸ் ஒருவனே என்பது ஏகோபித்த விமர்சனம்.

தொடர்புக்கு: இரா. மாரப்பன்
போதுப்பட்டி Po., நாமக்கல் – 637 003.

படிப்பகம்